

# பெண்

௭.௨



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு பெறும் மார்க்கம்



அறம், பொருள், இன்பம் விட்டால்
அடையலாம் வீடென் ஔவை
திறம்படச் சொன்னாள் - வீடு
தேடினால் நகரில், தேர்வீர்!
துறந்து நாயகியின் இன்பம்
குழந்தை ஒன்றேனும் இன்றி,
அறம் எனப் பொருளை விட்டால்
அடையலாம் நகரில் வீடே!

**T (Tam) Sivathasan**

Royal Le Page R.E. Services Ltd.
4002 Sheppard Avenue East
Suite 403,
Scarborough, Ontario.

**(905) 294 9288 Res**
**(416) 804 3443 Cell**
**(416) 293 1992 Pager 24 Hrs**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடல் 15வது இதழ்
THEDAL No: 15

வெளியீடு:
தமிழர் வகைதுறைவள நிலையம்
ரொரன்டோ, கனடா.

தொகுப்பு
தேடல் ஆசிரியர் குழு

அட்டை ஓவியம்
சுகுணா ஜோண்சன்

ஓவியங்கள் (உள்ளே)
கருணா
ஜயா

கணணி அச்சுப்பதிப்பு
மொனிக்கா
குமரன்

வடிவமைப்பு
*digi Graphics & Studios*

அச்சு
*Printek Graphics*

தொடர்புகளுக்கு
*566 Parliament St*
*Toronto, ON.*
*CANADA*
*M4X 1P8*
*Tel & Fax: (416) 975 4750*

Published by:
Tamil Resource Centre
Toronto, Canada

## கவிதைகள்

சுவரொட்டி
பாமதி 06
தூக்கமும் துக்கமும்
மாறன் 12
கதைப்பாடல் ஒன்று
ஜார்ஜ் தாம்சன் 48
காணாமல்போன ஆடு
விதுரன் 55
ஒரே பயணம்
பா. அ. ஜயகரன் 57

## சிறுகதைகள்

கட்டிடக்கூட்டு முயல்கள்
வ. ந. கிரிதரன் 07
வழித்துணைவன்
அருள்தாஸ் 39

## நேர்காணல்

ஜோதிக்குமார்
கண்டவர்—வ. ந. கிரிதரன் 27

## கட்டுரைகள்

டாக்டர் கோவூர்
கோவூரான் 03
ஒரே குரலில் பேசுவதிலுள்ள வில்லங்கம்
சி. சிவசேகரம் 13
பொலிசும் பொதுமக்களும்
எம். சிவகுருநாதன் 25
நவீன யதார்த்தவாதமும் சினிமாவும்
ரதன் 35
புலம்பெயர்வும் சுயம்பற்றிய கேள்விகளும்
நேசன் 42
ஓவியர் மாற்கு
சி. மௌனகுரு 52
தழும்பு
பா. அ. ஜயகரன் 53

## மாற்குவின் ஓவியங்கள்

மாற்குவின் ஓவியங்கள் 58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# தேடல்

தனிமையாக விலங்குகள்போல் வாழ்ந்த நிலையிலிருந்து விடுபட்டு மனிதர் சமூகமாக வாழத்தொடங்கிய அன்றிலிருந்து இன்றுவரை, பலவகையான ஒடுக்குமுறைகள், வன்முறைகள், போர்கள் போன்ற கொடூரங்கள் தொடர்ந்து நிலவி வருகின்றன. 20ம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து நோக்கும்போது இக் கொடுமைகள் மேலும்மேலும் அதிகரித்து வருவதையே காணக்கூடியதாகவுள்ளது. இப் போர்களில் மனிதர் தம்மை அல்லது தமது குழுவினரை முதன்மைப்படுத்துவதற்கும் தனது அடையாளத்தை நிறுவுவதற்குமான வன்முறைகளானது, மனித இனம் இன்னும் விலங்குகளின் உணர்வுகளில் இருந்து முற்றாக விடுபடவில்லை என்பதையே வெளிக்காட்டுகின்றன. மனித சமூகம் பண்பட்டிருக்கின்றது, நாகரீகம் அடைந்திருக்கின்றது என்பது வெறும் மாயையே. இன்று பல நாடுகளில் நடந்துகொண்டிருக்கும் யுத்தங்கள், அழிவுகள், வன்முறைகள், அவற்றிற்குப் பின்னாலுள்ள வக்கிரத்தனமான சிந்தனைகள் ஆகிய அனைத்தும் மனித வாழ்வின் அமைதியை குலைப்பதுடன், இயற்கைச் சூழலையும் அச்சுறுத்துகின்றன.

நாம் வாழுகின்ற இந்தப் பரந்துவிரிந்த உலகானது அனைவருக்கும் சொந்தமானது. ஆனால் துரதிஸ்டவசமாக மனித சமூகத்திற்கு அமைதியான, அர்த்தமுள்ள வாழ்வை வழங்கக்கூடிய ஒரு தேசம் என முன்மொழிவதற்கு இன்று எந்தொரு தேசமும் இல்லை. இன்றைய உலகில் பாதிக்கும் மேற்பட்ட நாடுகளின் அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும்கூட, அந்த அரசாங்கங்களில் பல தம்மைத் தெரிவு செய்த மக்கள்மீது ஒடுக்குமுறை ஆட்சியையே மேற்கொண்டு வருகின்றன. இவ் ஒடுக்குமுறையைச் செயல்படுத்த பக்கபலமாக இருப்பவை இன்றைய உலக பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கும் மேற்கத்தைய தேசங்களைச் சேர்ந்த பல் தேசியக் கம்பனிகளே. இக்கம்பனிகளே "ஜனநாயக அரசாங்கங்கள்" என்ற பட்டங்களையும் விருதுகளையும் இவ் ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு வழங்கிவருகின்றன. இக்கம்பனிகள் கோடிக்கணக்கில் இலாபத்தைக் குவிக்கும் அதே வேளையில், உழைத்துழைத்து உருக்குலைந்துவரும் சாதாரண மக்களின் நல்வாழ்வு பற்றி இக்கம்பனிகளுக்கோ, இவற்றின் நலனைப்பேணும் அரசாங்கங்களுக்கோ கிஞ்சித்தேனும் கவலை கிடையாது. பதிலாக தமது அதிகாரத்தை தக்கவைப்பதையே ஒரே நோக்காகக்கொண்ட இவ் ஆட்சியாளர்கள் சாதாரண மக்களைத் தொடர்ந்தும் ஒடுக்கி வருகின்றனர்.

எனினும் இவ்வன்முறைகளுக்கு பலியாக்கப்பட்டு வருகின்ற மக்களின் வேதனைகளுக்கும் ஏக்கங்களுக்கும் இடையே அமைதியான உயர்ந்த வாழ்வு பற்றிய ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படத்தான் செய்கிறது. அது அநீதிக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக கிளர்ந்தெழும் மக்களின் எழுச்சிகளிலிருந்து உருவாகின்றது. மக்கள் தமது சமூக கடமைப்பாடுகளை உணர்ந்து நேரடியாக அரசியல் கலாச்சார களங்களில் அதிகளவில் ஈடுபடுத் தொடங்கியுள்ளது, எதிர்காலம் பற்றி ஒரு வலுவான நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுக்கின்றது.

ஒடுக்குமுறைக்கெதிரான மக்களின் விடுதலைப் போராட்டங்கள் உலகளாவிய அளவில் நடைபெறும் இன்றைய கட்டத்தில் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் பாரிய பணி ஒன்று உண்டு. அவை மனித உரிமை மீறல்களுக்கும் அரசியல் வன்முறைகளுக்கும் எதிராகக் கிழர்ந்தெழும் மக்களுக்கு தோள் கொடுக்கவேண்டும். மனித உரிமைகளுக்கும், ஜனநாயகத்திற்கும், சமாதானத்திற்கும் குரல் கொடுக்கவேண்டும்.

தேடல் சஞ்சிகையும் இந்தப்பணியைச் செய்யவே விரும்புகிறது. ஆகையால் சமூக அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் நண்பர்கள் தமது கருத்துகளையும், அநுபவங்களையும் படைப்புகளாக்கி தேடலுக்கு வழங்கவேண்டும் என அன்போடு வேண்டுகின்றோம். உங்களது படைப்புகள் மகத்தானதொரு சமூகத்தைக் கட்டமைப்பதற்கு உதவும் என தேடல் உறுதியாக நம்புகிறது.

– தேடல் ஆசிரியர் குழு

# மறைந்த பகுத்தறிவாளர் டாக்டர் ஆபிரகாம் ரி. கோவூர் அவர்களையே நினைக்கின்றேன்.

*இந்த வாழும் அவதார புருடர்கள், தங்கள் அற்புதங்களை நீதி நியாய அடிப்படையில், உலகத்தில் நிகழும் இனங்களுக்கிடையேயுள்ள பிரச்சனைகளையும் நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்சனைகளையும், தீர்ப்பதற்கு ஏன் பயன்படுத்தக்கூடாது?*

**– கோவூரான்**

மனிதன் குரங்கிலிருந்து கூர்ப்படைந்து தோன்றிய காலந்தொட்டு, சூறாவளி, வெள்ளெடுப்பு, மின்னல் இடியேறு, கடற்கோள், பூகம்பம், எரிமலை போன்ற இயற்கைச் சீற்றங்களையும் அனர்த்தங்களையும் கண்டு பயந்தநிலையிலும், மற்றும் மிருக தாவரவின உற்பத்தி வளர்ச்சி போன்ற மாற்றங்களையும் தோற்றப்பாடுகளையும் கண்டு அவற்றிற்கு விளக்கமளிக்கமுடியாத நிலையிலும், இவற்றிற்கெல்லாம் "எல்லாம் வல்ல ஒன்று" இல்லையா என்று அங்கலாய்த்தான். அதுதான் "கடவுள்" என்று நம்பத் தலைப்பட்டான். இந்நம்பிக்கை காலத்தோடும் இடத்தோடும் வெவ்வேறு வடிவங்களையும் மாற்றங்களையும் பெற்றென. இந்நம்பிக்கை வடிவங்களும் மாற்றங்களும் தான் இன்று சமயங்களாக உருவெடுத்துள்ளன.

இந்தியாவைப் பொறுத்த வரையில் கடவுள் **நம்பிக்கை** அடிப்படையில் கடவுளின் அவதாரங்களென புராண இதிகாசங்களில் கூறப்பட்ட எல்லாப் பாத்திரங்களையும் தெய்வமாகக்கருதி அவற்றிற்குக் **கோயில்களைக்** கட்டி வணங்கி வந்த, வணங்கி வருகின்ற நிலைமைதான் காணப்படுகிறது. இதில் கோயில் பூசாரிகளின் செல்வாக்கே மேலோங்கி நின்றது. இவர்கள் மூலமே சமயசம்பந்தமான மூடநம்பிக்கைகளும், சோதிட நம்பிக்கைகளும் மக்களிடையே பரப்பப்பட்டன. இவர்கள் தெய்வாராதனையின் பொழுது சமஸ்கிருதத்திற்கூறும் மந்திரங்களை விளங்காத நிலையில், அவற்றிற்குப் பயந்ததன் காரணமாகவே இந்நம்பிக்கைகள் மக்களிடையே வேரூன்றினவென்று கூறவேண்டும். விஞ்ஞானம் தொழில் நுட்பம் எவ்வளவோ மேலோங்கிய இந்நாட்டிலும் இம்மூடநம்பிக்கைகள் எம்மக்களை விட்டுப்போனபாடில்லை.

இங்கே வெளிவரும் எமது பத்திரிகைகள் சில விளம்பரத்திற்காகவும் வியாபாரத்திற்காகவும், இன்று வாழும் மனிதக்கடவுளர்கள், சோதிடர்கள் பற்றி மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் திரித்து செய்திகளும், கட்டுரைகளும் புனைந்த வண்ணமேயுள்ளன. இப் புனைதல்களுக்கு என்ன கூலி பெறுகிறார்களோ தெரியாது. அல்லது இன்று வாழும் அவதாரபுருடர்களின் சபித்தலுக்கு பயந்து இத் தொண்டைச் செய்கின்றார்களோ? அல்லது எமது பண்பாட்டுக்கலாச்சாரத்தின் ஒருபகுதி என்று நினைத்துச் செய்கின்றார்களோ? அல்லது பணஞ்சேர்க்கும் ஒரு தொண்டோ? அல்லது ஏதும் வரம் கிடைக்குமென்று நினைத்துச் செய்யும் தொண்டோ?

இந்த வாழும் அவதாரபுருடர்கள், தங்கள் அற்புதங்களை நீதி நியாய அடிப்படையில், உலகத்தில் நிகழும் இனங்களுக் கிடையேயுள்ள பிரச்சனைகளையும் நாடுகளுக் கிடையேயுள்ள பிரச்சனைகளையும், தீர்ப்பதற்கு ஏன் பயன்படுத்தக்கூடாது? அந்த வகையில் இவற்றின் அடிப்படையில் இடம்பெறும் உயிர்க்கொலைகளையும், மன நிம்மதியற்ற நிலைமைகளையும் தவிர்க்கலாமல்லவா? அதைவிட்டு எமது பத்திரிகைகள், வானொலிகள் கூறுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டாக்டர் கோவூர், ஆவியுலகம், ஆன்மீகத் தோற்றப்பாடுகள் பற்றியெல்லாம், தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, ஈற்றில் அவற்றில் எவ்வித உண்மையுமில்லையென்ற முடிவுக்கு வந்த ஒரு முதல் தரமான விஞ்ஞானியாவார்.**

போல், தனியொருவருக்கு திருநீறு, சங்கிலி, கைக்கடிகாரம், சிறுதெய்வச்சிலைகளை வருவித்துக் கொடுப்பதனால் என்ன பயன்? இவைகள் எல்லாம் அற்புதங்கள் அல்ல, மாயாவித்தைகளே (Black Magic). எந்தவொரு மாயாவித்தைக்காரனும் இவற்றைச் செய்யமுடியும்.

இந்த நேரத்தில் மறைந்த பகுத்தறிவாளர் டாக்டர் ஆபிரகாம். ரி. கோவூர் அவர்களை நினைக்கின்றேன். இவர் இந்தியாவில் கேரள மாநிலத்தைச்சேர்ந்தவர். உயிரியற் துறையில் முதுமானிப்பட்டத்தைப் பெற்ற இவர் இலங்கையிலுள்ள புகழ்பெற்ற பாடசாலைகளாகிய யாழ் மத்திய கல்லூரி, காலி றிச்மென் கல்லூரி, கல்கிசை புனித தோமஸ் கல்லூரி, இறுதியாக கொழும்பு தேஸ்ரன் கல்லூரி ஆகியவற்றில் விஞ்ஞான பீடத்தலைவராகவும் உயிரியற் துறை ஆசிரியராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் உலகப்புகழ் பெற்ற ஒரு பகுத்தறிவு- வாதியாகவும், உளவியல் மருத்துவராகவும் இலங்கைப் பகுத்தறிவுக்கழகத்தின் தலைவராகவும் இருந்து, எல்லா விதமான ஆவியுலகம், மற்றும் ஆன்மீகத் தோற்றப்பாடுகள் பற்றியெல்லாம், அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, ஈற்றில் அவற்றில் எவ்வித உண்மையுமில்லையென்ற முடிவுக்கு வந்த ஒரு முதல் தரமான விஞ்ஞானியாவார். இவ்வாரய்ச்சி பற்றிய நூல்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும், தமிழிலும் வெளி வந்ததை எழுத்துலகம் அறியாமல் இருக்க முடியாது. இத்துறையில், அதாவது உள, உயிர்த்துறையில் ஆராய்ச்சி செய்தமைக்காகவும், ஆவிகள் சம்பந்தமான இவரது ஆய்வுக் கட்டுரைக்காகவும் அமெரிக்காவிலுள்ள மினிசோட்டா பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இதை அறிவியல் உலகம் அறியும். அத்துடன் சேதன வளர்ச்சிப் படிகளிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குத் தேவையான தொல் பொருட் சான்றுகளைப் பெறுவதற்கான இந்து சமுத்திர மற்றும் கரையோர நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஹெகல் ஆய்வுப்பயணக் குழுவில் அங்கம் வகிப்பதற்கான அமெரிக்காவின் ஏர்னஸ்ற் ஹெகல் உயிரின ஆய்வுக் கழகத்தால் அழைக்கப்பட்ட ஒரேயொரு ஆசிய விஞ்ஞானி டாக்டர் கோவூரேயாவார்.

மூடநம்பிக்கைகளை விட்டுவிட்டு எதையும் ஆதாரத்தோடு நம்ப வேண்டுமென்று மக்களுக்குப் போதிப்பதில் வாழ்நாட்களை அர்ப்பணித்த டாக்டர் கோவூர், மாயைகள் பற்றி ஆராய்ந்தவர் என்ற ரீதியில், பொதுமக்களின் மனங்களிலிருந்து ஆவிகள், பேய்கள் பற்றிய ஆதாரமற்ற அச்சத்தை அகற்றுவதற்குத் தீவிரமாக ஈடுபட்டதோடு, அற்புதம் செய்பவர்கள், வசியஞ்செய்பவர்கள், சோதிடர்கள், கைரேகை பார்ப்பவர்கள், ஆத்மீகவாதிகள், எண்ணியலாளர்கள், ஆவிகளுடன் பேசுபவர்கள், பில்லி, சூனியவாதிகள் ஆகியோரின் செயல்களையும், மந்திர அமானுஷ்ய சக்திகள் எனக்கூறி எதையும் எளிதில் நம்பும் பாமரர்களை ஏமாற்றி வந்த எல்லாவித போலி மனிதர்களையும் அம்பலப்படுத்தி வந்தார். ஆவிகளைத் தேடி பேய்வீடுகளிலும், மயானங்களிலும் அவர் உறங்கியிருக்கின்றார். தனது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளை அசுப நாட்களிலும் நேரங்களிலும் ஆரம்பித்துக்காட்டியிருக்கின்றார். இன்று வாழும் மனிதக் கடவுள்கள், அதாவது தெய்வசக்தி பெற்றவர்கள் என்று கூறப்படுபவர்கள் திருநீறு வருவித்துக் கொடுப்பது போல் பகிரங்கமாகச் செய்து காட்டியுள்ளார். அற்புதச் சக்திகள் என்று சொல்லப்படுவதெல்லாம் ஏமாற்று வேலைகள் என்பதையும், அவற்றைக் கொண்டிருப்பவர்கள் என்று சொல்லப்படுபவர்களெல்லாம் உளவியல் ரீதியில் தாக்கப்பட்ட நோயாளிகள் என்பதையும் நிரூபிப்பதற்காக பகிரங்கமான சவால் ஒன்றை அறுபது எழுபதுகளில் வெளியிட்டிருந்தார். அச்சவால் இலங்கையிலும், இந்தியாவிலும் பத்திரிகைகள் மூலம் விடப்பட்டது. அச்சவால் பின்வருமாறு:

கொழும்பு 6 பாமன்கடை ஒழுங்கையிலுள்ள "திருவல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இல்லத்தில் வசிக்கும் ஆபிரகாம் ரீ. கோவூர் ஆகிய நான் மோசடி தவிர்ந்த சான்றாதாரங்கள் கொண்ட நிலைமைகளில், பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றை, ஆன்மீகப்பயிற்சிகள் மூலமோ அல்லது தெய்வீக வரத்தினாலோ, அற்புதசக்திகளைப் பெற்றுள்ளதாக கூறும் தெய்வீக மனிதர்கள், யோகிகள், சித்தர்கள், குருமார், சுவாமிகள், மற்றும் ஏதாவது தெய்வீகசக்தி மூலம் செய்து காட்டும் பட்சத்தில், இலங்கை ரூபாயில் ஒரு லட்சத்தைப் பரிசாகக் கையளிக்க தயாராக உள்ளேன் என்பதைப் பிரகடனப்படுத்துகின்றேன்.

1) முத்திரையிடப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள ஒருபணநோட்டின் இலக்கத்தை வாசித்தல்.

2) குறிப்பிட்ட பணநோட்டைப் போன்ற இன்னொன்றை உருவாக்குதல்.

3) தெய்வீக அருள் பெற்று கால்களில் கொப்புளம் ஏற்படாமல் எரிகின்ற தணலில் அரை நிமிடம் நிற்றல்.

4) நான் கேட்கின்ற ஒன்றை, ஒன்று மில்லாமையிலிருந்து உருவாக்குதல்.

5) அற்புத சக்தியை பிரயோகித்து, ஒரு திடப்பொருளை அசைத்தல் அல்லது வளைத்தல்.

6) உணர்வுச்சக்தியை(Telepathy) பிரயோகித்து, இன்னொருவரின் மன எண்ணத்தைக் கூறல்.

7) பிரார்த்தனை மூலம் துண்டிக்கப்பட்ட ஓர் உறுப்பை வளரச்செய்தல்.

8) யோகசக்தியின் மூலம் அந்தரத்தில் அல்லது நீரில் நடத்தல்.

9) உடம்பின் அசைவின்றி இன்னொரு இடத்தில் தோன்றுதல்.

10) யோகசக்தியின் மூலம் 30 நிமிடங்களுக்கு சுவாசிக்காமல் இருத்தல்.

11) தியான முறைமூலம் ஆக்கபூர்வமான அறிவை அல்லது ஞானத்தை உருவாக்குதல்.

12) தெய்வீகசக்தி மூலம், தெரியாத மொழி ஒன்றைப் பேசுதல்.

13) தெய்வீக சக்தி மூலம், பூட்டப்பட்ட அறையிலிருந்து வெளிவரல்.

14) நீரைப் பெற்றோலாகவோ அல்லது திராட்சை ரசமாகவோ மாற்றல்.

15) திராட்சை ரசத்தை இரத்தமாக மாற்றுதல்.

16) நிழற்படம் எடுக்கக்கூடியதாக ஒரு ஆவியையோ அல்லது தேவதையையோ தோற்றுவித்தல்.

17) மறைத்து வைக்கப்பட்ட ஒரு பொருளைக் கண்டுபிடித்தல்.

18) ஒரு பொருளின் நிறையின் அளவை அதிகரிக்கச் செய்தல்.

19) சோதிடமும், ரேகைசாஸ்திரமும் விஞ்ஞான பூர்வமானவை என்று பாமரர்களை ஏமாற்றுகின்ற சோதிடர்களும், ரேகை சாஸ்திரிகளும், என்னால் தரப்படுகின்ற பத்து கைரேகை அடையாளங்களில் அல்லது பத்து ஜாதகக் குறிப்புக்களிலிருந்து, ஆணா, பெண்ணா, வாழ்பவரா, இறந்தவரா என்றும் சரியாக பிறப்பு நேரம், பிறந்த இடம், இறந்த இடம், இறந்த நேரம் ஆகியவற்றையும் கூறல்.


1963 இல் இச்சவாலை டாக்டர் கோவூர் வெளிப்படுத்தி உலகெங்குமுள்ள பத்திரிகைகளில் பிரசுரித்திருந்தார். சவாலை ஏற்றுக் கொண்டவர் எவருமே சவாலுக்கான பணத்திலிருந்து ஒரு சதத்தையேனும் பெறமுடியவில்லை. சவாலின் பிரதிகள் இந்தியா, இலங்கையிலுள்ள எண்ணற்ற சோதிடர்கள், ரேகை சாஸ்திர நிபுணர்கள், தெய்வீக மனிதர்கள் எனக்கூறப்பட்டவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டிருந்தும், பெங்களூரைச் சேர்ந்த ஒரு டாக்டர் மட்டும் தான் அச்சவாலை ஏற்று பரிசுப்பணத்தை வைப்புச் செய்ய முன் வந்தார். அதன் முடிவு டாக்டர் கோவூர் அப்பரிசுப்பணத்துடன் இலங்கை திரும்பியது தான். அதாவது அப்பணத்தை வென்று இலங்கை திரும்பினார். இந்த வகையில் டாக்டர் கோவூர், தெய்வீகமானவர்கள் அல்லது அற்புதம் நிகழ்த்துபவர்கள் என்ற போர்வையின் கீழ் அப்பாவிகளையும், எளிதில் ஏமாறக் கூடியவர்களையும், தன்னம்பிக்கையற்றவர்களையும் ஏமாற்றுகின்றவர்களுக்கெல்லாம், அச்சுறுத்தலாகவே திகழ்ந்தார். அடுத்த உலகத்தைபற்றி அதிகம் கவலைப்படும் மதங்களின் அடிப்படையில் மக்களிடையே வேரூன்றிய இம் மூடநம்பிக்கைகளினால் எமது சமூகம் குறிப்பாக இளைஞர் சமூகம் அறிவியல் உலகில் எப்பொழுதும் பின்தங்கிய நிலையில் தான் காணப்படுவார்கள். ஏனென்றால் இந்நம்பிக்கைகள் சிந்தனையை மட்டம் தட்டுவன. எனவே மறைந்த டாக்டர் கோவூரின் சவால் மூலம் அச்சுறுத்தலுக்கான சூழ்நிலை இங்கேயும் வளர்கின்றதென்றே கூறவேண்டும்.

## திருத்தம்

சென்ற இதழில், "கனடாவில் தமிழ்க் கல்விபற்றி ஓராசிரியரின் நோக்கு" என்ற கட்டுரை திரு. இலங்கையன் அவர்களால் எழுதப்பட்டது. "சர்வதேசிய மொழிக் கல்வித்திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.?" என்ற கட்டுரை திரு. பொ. கனகசபாபதி அவர்களால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெருவோரத்து சுவரே
இக் கரிய இருளில்
உன்னில்,
கரித்துண்டு ஒன்றின் கிறுக்கலில்
கோணலாய் என் கவிதை

நாளைய விடியலில்
இதைப் பார்த்து,
நாணி நடக்கும் சகோதரி
நம்பிக்கையாய் நிமிர்ந்து நடப்பாள்.

ஊரெங்கும்
உறங்கிக் கிடக்கும் கோழை உணர்விற்கு
தீ வைப்பதற்கு
திரியாய் எரியட்டும்

சிறைப்பட்டு வாழும் ஒவ்வொரு
பெண்ணின் விலங்கை உடைக்க
இரும்பாய் மாறட்டும்

சகதிக்குள் அழுகிய எம் மக்களின்
வரலாற்றை வடிக்க
மையாய் கசியட்டும்

இங்கு குழிதோண்டி புதைக்கப்படும்
மனிதத்தை நோக்கி
கேள்விகள் முளைக்க
விதைகள் தூவட்டும்

அது வரை
மழையிலும் வெய்யிலிலும்
அழிந்து போகாது,
சுவரொட்டியில்
கரித்துண்டொன்றின்
கிறுக்கலாய்
கோணலாய் என் கவிதை.

# சுவரொட்டி

-பாரதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டிடக்கூட்டு முயல்கள்


வ. ந. கிரிதரன்

கிழவன் தனித்துச் சோபாவில் சாய்ந்திருக்கின்றான். சிந்திக்கிறான். மகன் வேலைக்குப் போய் விட்டான். ஆறுமணிக்குத் தான் திரும்புவான். அவனிற்கென்று இறுதியாக எஞ்சியிருப்பவன் இவன் ஒருத்தன்தான். பின்னோக்கிச் சிந்திக்க முயல்கின்றான். பெருமூச்சொன்று அவனையும் மீறி எழுகின்றது. எழுந்து கோப்பி போடலாமா என்றொரு எண்ணம் எழ எழும்ப முயல்கின்றான். முதுமையின் சோர்வு பிடித்திழுக்கின்றது. அப்படியே சாய்ந்திருக்கின்றான். மகன் மட்டும் கரைச்சல் படுத்தி ஸ்பொன்சர் செய்யாமலிருந்தால் ஊரிலேயே இருந்திருப்பான். ஊரிலிருந்திருந்தால் நிம்மதியாகவிருந்திருப்பானோ...? போர்ச் சூழலிற்கு அவன் பயந்து விட்டானா? எப்படியாவது சிறிலங்கன் இராணுவத்திடமிருந்து மகனைப் பாதுகாக்கவேண்டும் என்று மகனை வெளிநாடு அனுப்பியவனால் மகளை, மனைவியைப் பாதுகாக்க முடியவில்லையே? இந்திய இராணுவத்தின் செல்லடி கடைக்குப் போய் விட்டு வந்து கொண்டிருந்த மகளைப் பதம் பார்த்தபோது இறுகிப்போன நெஞ்சு மீண்டும் 90ல் தொடங்கிய இலங்கை ராணுவத்தின் ஷெல் வீச்சிற்கு மனைவியைப் பறிகொடுத்தபோது உருக்காகிப் போனது. விடுவதற்குக் கண்ணீர் கூட இருக்கவில்லை. தனித்துப் போனவனை உறவுப் பாசம் வாட்டியிழுத்தது. மகனைப் பார்த்துவிட மனது துடித்தது. இருந்தபோதும் மண்ணை விட்டுப் பிரிய மனது மறுத்தது. அவன் கனவுகள் மலர்ந்த மண், பின்னர் அவை உதிர்ந்ததும் கூட அந்த மண்ணில் தானே. மனைவியின், மகளின், முன்னோரின் மூச்சடங்கிய மண்ணிலேலேயே தன் மூச்சுமடங்கிவிட வேண்டுமென்று நெஞ்சு விரும்பியது தவறா? தொலைவில் தீயணைப்பு வண்டியொன்றின் சத்தம் கேட்டு மறைகின்றது. கிழவனின் சிந்தனை நனவிற்குத் திரும்புகின்றது. அப்பார்ட்மெண்ட்டை ஒருமுறை கண்கள் ஆராய்ந்தன. எல்லாமே அலங்கோலமாக கிடக்கின்றன. கிழவி இருந்திருந்தால் நிச்சயம் இப்படியிருக்க விட்டு விடமாட்டாள். கிழவனால் முடியாது. முதுமை விரைவாகவே கிழவனைப் பற்றியிழுத்து விட்டது. மகனையும் கட்டுப்பாட்டிற்குள் வைக்க கூடிய நிலையில் கிழவனில்லை. உடல் உளம் சோர்ந்து போயிருந்தான். மகன் பிறந்தபோது கிழவனும் கிழவியும் எவ்வளவு தூரம் சந்தோஷித்திருப்பார்கள். கோயில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியராகவிருந்து எவ்வளவு
தான் உழைக்க முடியும்?
அப்படியும் கிழவன் தன்
கடமையைச் செய்யத்
தவறவில்லை. மகன் பிறக்கும்
மட்டும் கிழவனிற்கு புத்திரபாசம்
பற்றி புரிந்திருக்கவேயில்லை.

குளமென்று புதல்வனைத் தூக்கியபடி எவ்வளவு தரம் கிழவனும் கிழவியும் அலைந்திருப்பார்கள். இப்பொழுதும் நல்லாக ஞாபகமிருக்கின்றது. ஒரு முறை குழந்தை இரவு முழுக்க அழத்தொடங்கிவிட்டான். புதுப்பழக்கம். கிழவனும் கிழவியும் பதைத்துப் போனார்கள். மறுநாள் டாக்டர் யேசுதாசன் ஒன்றுமில்லையென்று சொன்னபோது தான் நிம்மதி பெற்றார்கள்.

ஒருவருஷமாக மகன் எவ்வளவு தூரம் கிழவனையும் கிழவியையும் ஆட்டிப் படைத்திருப்பான். கிழவனின் இதழ்களில் மெல்லியதொரு புன்னகை தவழ்கின்றது. அப்படி ஒன்றுமில்லாத தெற்கெல்லாம் பதைபதைப்பதில் துடிதுடிப்பதில் இன்பம் நிறைய இருக்கத்தான் செய்தது? கிழவனிற்கு அப்போதிருந்த பெரிய கவலை.... குழந்தை வளர்ந்து தலையெடுப்பதற்குள் கிழவனோ கிழவியோ மண்டையைப் போட்டு விடக் கூடாதென்பதுதான். சிறுவயதிலேயே தாயையும் தகப்பனையும் இழந்தவன் கிழவன். அதனாலேற்பட்ட ஞானத்தின் விளைவு. கிழவன் நம்பிய பிள்ளையார் கைவிட்டு விடவில்லை. கிழவன் இன்னும் உயிருடனிருக்கின்றான். மகன் வளர்ந்து தலையெடுத்து விட்டானா? அப்பார்ட்மென்ட்டை மீண்டுமொருமுறை கிழவனின் பார்வை படம் பிடிக்கின்றது. மூலைக்கு மூலை புத்தகங்களும், பிரசுரங்களும் தாறுமாறாகக் கிடக்கின்றன. இவற்றையெல்லாம் ஒழுங்காக அடுக்கி வைக்கக் கூட புத்திரனால் முடியவில்லை. பம்பரமாகச் சுழன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றான். கிழவனால் முடியுமென்றால் நிச்சயம் ஒழுங்காக்கி வைத்திருப்பான். ஒரு காலத்தில் கிழவன் எவ்வளவு தூரம் கம்பீரமாக இருந்தவன். கிழவிக்கு எப்பொழுதுமே கிழவனின் கம்பீரத்தில் ஒரு மயக்கம் தான். கிழவி மட்டும் இப்பொழுதும் இருந்திருப்பாளென்றால் எவ்வளவு நன்றாகவிருக்கும்? கிழவனை அசதி சூழ்ந்து கொள்கின்றது. அப்படியே சிறிது நேரம் தூங்கிப் போய் விடுகின்றான்.

மகனை எப்படியும் நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதுதான் கிழவனதும் கிழவியினதும் ஒரே நோக்கமாகவிருந்தது. ஆசிரியராக இருந்து எவ்வளவு தான் உழைக்க முடியும்? அப்படியும் கிழவன் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை. மகன் பிறக்கும் மட்டும் கிழவனிற்கு புத்திரபாசம் பற்றி புரிந்திருக்கவேயில்லை. கதைகளில், சினிமாக்களில் புத்திர பாசம் பற்றிக் காட்டப்படும்போதெல்லாம் அவையெல்லாம் வெறும் கற்பனைகளாகவே தெரிந்தன. இப்பொழுதோ உண்மைகளாக விளங்கின. நண்பர்களுடன் கள்ளுக்கொட்டிலில் வம்பளந்து கொண்டிருந்த கிழவனை, மகன் வரவு எவ்வளவு தூரம் மாற்றி விட்டது? கிழவிக்கே பெரிய ஆச்சர்யம். வாயில் விரலை வைத்தாள். கிழவனது நண்பர்களிற்குக் கூட பெரும் வியப்பு தான். ஆச்சர்யப் பட்டுப் போனார்கள். கிழவனைப் பரிகாசித்தார்கள். அவைற்றையெல்லாம் கிழவன் பொருட்படுத்தவேயில்லை. வேலை முடிந்ததும் குழந்தையுடன் பொழுதைக் கழிப்பதிலேயே பெரும்பாலும் நேரத்தைச் செலவிட்டான். கிழவனின் பொறுப்புணர்வைக் கண்டு கிழவி பெரிதும் பெருமிதப்பட்டாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வனை மார்பிலும் தோளிலுமாக மாறிமாறி எவ்வளவு தூரம் கிழவனும் கிழவியும் போட்டெடுத்திருப்பார்கள். பாட்டி வடை சுட்ட கதையை எத்தனை தடவை கூறினாலும் குழந்தைக்கு அலுப்பதேயில்லை. கேட்டபடியே தூங்கி விடுவான். கிழவனிற்கும் அதை விட்டால் வேறுகதையொன்றும் ஞாபகத்திற்கு வருவதேயில்லை. கிழவிகூட அடிக்கடி சுட்டிக் காட்டுவாள். 'புத்தகம் புத்தகமாக வாசிக்கின்றீர்கள். அப்படியொரு கதை கூட ஞாபகமில்லையா? எப்ப பார்த்தாலும் பாட்டி வடை சுட்ட கதை தானா?' என்று குறைபட்டுக் கொள்வாள். 'ம்.... இதெல்லாம் பழைய கதை' கிழவன் மீண்டுமொருமுறை பெருமூச்சு விடுகின்றான். மகன் விஞ்ஞானப் பட்டதாரியாக வெளிவந்த பொழுது எவ்வளவு தூரம் கிழவனும் கிழவியும் மகிழ்ந்து போனார்கள். "மாஸ்டரின் பிள்ளையல்லவா" என்று மற்றவர்கள் கூறியபொழுது எவ்வளவு தூரம் பூரித்தார்கள்.

நேரம் ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது. மகன் வேலை முடிந்து வரும் நேரம் களைத்து வாடிவருவான். சோர்வு படர்ந்து தெரியும். கிழவனிற்குக் கவலையாகவிருந்தது. மகன் எவ்வளவு கெட்டிக்காரன். ஒரு நாளாவது கிழவி அவனை அவன் சாப்பிட்ட கோப்பையைக் கழுவ விட்டிருப்பாளா? மகன் கோப்பை கழுவி வயிற்றைக் கழுவுவதைப் பார்த்துக் கிழவி துடித்து விடுவாளே. நல்ல வேளை இவற்றையெல்லாம் பார்க்கக் கொடுத்து வைக்காமல் மகராசி போய்ச் சேர்ந்து விட்டாள். வேலை முடிந்து வாடி மகன் வருவதைக் கண்டால் கிழவனின் உள்நெஞ்சு பதைக்கத் தொடங்கி விடும். பச்சாதாபம் பொங்கும். வாரியணைத்து ஆறுதல் சொல்ல விரும்புவான். மகன் வளர்ந்து விட்டானே.... கிழவனிற்குப் பழைய நினைவுகள் தோன்றிவிடும். வேலையால் வந்ததும் மகன் கோப்பி போட்டுக் குடிப்பான். "அப்பு உனக்கும் வேணுமாணை" என்று கேட்டு கிழவனிற்கும் கோப்பி கலந்து கொடுப்பான். கிழவனின் உள்ளம் குளிரும். அதன் பிறகு சோபாவில் சாய்ந்தபடி சிறிது நேரம் டி.வி. பார்த்தபடியே மகன் நித்திரையாகி விடுவான், வேலைக்களைப்பு.... கிழவன் மெதுவாக டி.வியை நிற்பாட்டி விடுவான். தலையணையொன்று கொண்டு வந்து மகனின் தலைக்கு முண்டு கொடுப்பான். வாய் சிறிது திறந்த நிலையில் தூங்கிக் கிடக்கும் மகனைப் பார்ப்பான். 'பிள்ளையாரே இவன் வாழ்க்கையில் நல்ல காலத்தைக் கொடு' என்று வேண்டிக் கொள்வான்.

கிழவனிற்குச் சிலநேரங்களில் மகனை நினைக்கப் பெருமிதமாகவுமிருக்கும். அடிக்கடி ஒருசில நண்பர்களுடன் மனித உரிமைகளைப் பற்றி விவாதிக்கின்றான். அது சம்பந்தமான புத்தகங்களை நூல்களையெல்லாம் வாசிக்கின்றான். உழைப்பில் பெரும்பகுதியை இவற்றிற்கே செலவழிக்கின்றான். 'விசர்ப் பெடியன். இவன்ர வயசுப் பெடியள் எல்லாம் பிள்ளையும் குட்டியுமென்று இருக்கேக்கை, உவன் வாழ்க்கையை வீணாக்கிறானோ, என்றும் நினைப்பான். ஒரு முறை ஆவல் தாங்காமல் கல்யாணப் பேச்சை எடுத்துக் கிழவன் நல்லாய் வாங்கிக் கட்டிக் கொண்டான். அன்றிலிருந்து மகனிடம் திருமணப் பேச்சை எடுக்கும் எண்ணத்தையே கிழவன்


வழக்கம் போல் வாடி வந்திருக்கின்றான். இதென்ன கையில் ஒரு கூடு... இரண்டு முயல்கள் அதில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. இதென்ன கூத்து? எதற்கு இவன் முயல்களைக் கொண்டு வந்திருக்கின்றான்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முயல்களின் கவனத்தைத் திசைதிருப்பியதில் கிழவனிற்குத் தற்காலிக வெற்றி. மீண்டும் வந்து சோபாவில் சாய்கின்றான். மகனைப் பற்றிய நினைவும் மனைவியைப் பற்றிய நினைவும் மீண்டும் படம் விரிக்கின்றன.*



கைவிட்டு விட்டான். சூடுகண்ட பூனை. மகன் என்னதான் செய்தாலும் பேசினாலும் கிழவனிற்கு ஆத்திரமே வருவதில்லை. தோளிலும் மார்பிலுமாக மாறிமாறிப் போட்டெடுத்த புதல்வனின் மேல் எந்தத் தந்தையாவது, தாயாவது ஆத்திரம் அடைவதுண்டா? கிழவனிற்கிருந்த கவலையெல்லாம் தான் திடகாத்திரமாகவிருந்து மகனிற்கு நல்லதொரு நிலையை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லையே என்பது தான். மற்றக் கிழவர்கள் செய்வது போல் சமூக உதவிப்பணமெடுத்து அதனை புதல்வனிற்குத் தந்து விடலாமா என்று தயங்கிக் கேட்டான். மகன் கிழவனை வாங்கு வாங்கென்று வாங்கிப் போட்டான். "நான் உழைக்கேக்கை உனக்கென்னணை குறைச்சல்... என்ர உசிர் இருக்கிற வரையில் உன்னை வெல்பெயார் எடுக்க விடமாட்டன். உனக்குக் காசு தேவையென்றால் என்னட்டைக் கேளு தாறன்." காலம் எவ்வளவு மாறிப் போய் விட்டது, கிழவன் சிந்தித்தான்.

மகன் வரும் சத்தம் கேட்கின்றது. கிழவன் சோபாவிலிருந்து எழுந்து வந்து கதவைத் திறக்கின்றான். வழக்கம் போல் வாடி வந்திருக்கின்றான். இதென்ன கையில் ஒரு கூடு... இரண்டு முயல்கள் அதில் விளையாடிக் கொண்டிருக்கின்றன. இதென்ன கூத்து? எதற்கு இவன் முயல்களைக் கொண்டு வந்திருக்கின்றான்? "அப்பு என்ர ரெஸ்ராரண்ட் முதலாளியின்ர முயல்கள். அவனிற்கு வைத்திருந்து அலுத்துப் போட்டுது. கறியாக்கலாமாவென்று யோசித்துக் கொண்டிருந்தான். பாவமாயிருந்தது. வாங்கி வந்திட்டன். ஒரு மூலையில் இருந்திட்டுப் போகட்டுமே. கரட்தான் இங்கை சரியான மலிவு. வேண்டிப் போட்டால் தின்னுட்டுப் போகுங்கள் உனக்கும் பிராக்காய் இருக்குமணை."

கிழவனிற்குச் சிரிப்பாக விருக்கின்றது. மகனை நினைக்கப் பாவமாகவுமிருக்கின்றது. பெருமிதமாகவுமிருக்கின்றது. 'இவன் எவ்வளவு நல்லவனாகயிருக்கின்றான். முயல்களிற்காக எவ்வளவு உருகிப்போனான் பொடியன்.' கிழவனிற்குக் கண்கள் இலேசாகக் கலங்கி விட்டன. முயல்களைப் பார்த்தான். அழகான வெள்ளை முயல்கள் கிழவனைப் புதிர் நிறைந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தன. "இரண்டும் ஆண் முயல்களணை" ,மகன் முயல்க் கூட்டை யன்னலோரமாக வைத்துவிட்டு சேர்ட்டைக் களைந்தான். முகம் கழுவ வாஸ்ரூம் சென்றான்.


கிழவன் வழக்கம் போல் சோபாவில் சாய்ந்திருக்கின்றான். மகன் வழக்கம் போல் வேலைக்குப் போய் விட்டான். சுவரோரம் கூட்டிற்குள் முயல்களிரண்டும் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டிருந்தன. பல்கணியிலிருந்து புறாக்களிரண்டு முணுமுணுத்தபடியிருந்தன. காலைப் பொழுதிற்குரிய ஒரு விதமான மோனம் விரவிக்கிடந்தது. தொலைவில் வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. அவற்றில் பஸ் இரையும் ஓசை மட்டும் தனியாகக் கேட்டது. உலகம் முழுவதுமே காலை நேரம் இப்படித்தானிருக்குமோ வென்று பட்டது. கிழவனின் கவனம் திரும்புகின்றது. கூட்டிற்குள் முயல்களின் அட்டகாசம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. கிழவனிற்கே சிறிது வெட்கமாகவிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன வெட்கங் கெட்ட முயல்கள்.... ஒன்றையொன்று தழுவ முயன்றபடி முயல்களைச் சொல்லி என்ன... மனிசர் மட்டுமென்ன உசத்தியோ....' என்ற எண்ணம் பரவியதும் கிழவனிற்குக் கூட இலேசாகச் சிரிப்பு வருகின்றது. 'எது எதையும் அதனதன் இயல்பான வாழ்க்கை வட்டத்திலிருந்து பிரித்துச் செயற்கையான சூழலில் போட்டால் இதுதான் பிரச்சனையோ....' கிழவனிற்கு முயல்களிடத்தில் ஒரு வித அநுதாபம் ஏற்பட்டது. சின்னக் கூட்டிற்குள் நாள் முழுக்க வளைய வந்தபடி, அந்தச் சிறிய கூட்டிற்குள் வாழ்வதற்கு முயன்றபடி, வளைய வளைய வந்தபடி.... அலுப்பதேயில்லையோ.... அல்லது இயல்பூக்கம் அடைந்து விட்டனவோ... இந்த விடயத்தில் தனக்கும் முயல்களிற்குமிடையில் உள்ள வித்தியாசம் எத்தகையதாகவிருக்கலாம் என எண்ணமிட்டான். இலேசாக ஒரு சிரிப்பு முகிழ்த்தது. மகன் வாழக்கையை ஒப்பிட்டுப் பார்த்தான். வித்தியாசம் இருக்க முடியுமாவென்று பட்டது.

கிழவனின் சிந்தனையை முயல்களின் அட்டகாசம் மீண்டும் கலைத்தது. பிரிட்ஜைத் திறந்து கரட் கொண்டுவந்து கூட்டினுள் போட்டான். முயல்களின் கவனத்தைத் திசை திருப்பியதில் கிழவனிற்குத் தற்காலிக வெற்றி. மீண்டும் வந்து சோபாவில் சாய்கின்றான். மகனைப் பற்றிய நினைவும், மனைவியைப் பற்றிய நினைவும் மீண்டும் படம் விரிக்கின்றன. கிழவனை அசதி பற்றியிழுக்கத் தொடங்கியது. கிழவனின் கம்பீரத்தில் மயங்கிப் பெருமிதத்திலிருந்த கிழவியின் தோற்றம் நெஞ்சை நிறைக்கின்றது. கிழவன் பழைய நினைவுகளில் ஆழ்ந்து விடுகின்றான். ஒரு மழைக்காலத்தில் தான் ஊரின் தெற்குக் கோடியிலிருந்த மயானத்தில் கிழவியை எரித்தார்கள். ஒன்றிற்குமே கலங்காதவன் என்று பெயரெடுத்தவன் கிழவன். அவனே கலங்கிப் போனான். கிழவியுடன் வாழ்ந்த, கிழவி மரித்த மண்ணில் தனது மூச்சும் அடங்கவேண்டுமென்றிருந்தவனைப் புத்திரப்பாசம் இங்கு இழுத்துக் கொண்டு வந்து விட்டதோ.... இப்பொழுது கிழவனுக்கு புத்திரனைப் பற்றிய கவலை பீடிக்கத் தொடங்குகின்றது. "உனக்கென்னடி ராசாத்தி... நேரத்தோடை போய்ச் சேர்ந்து விட்டாய். பொடிக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்கிற பொறுப்பையுமல்லவா சுமத்திப் போட்டாயடி...." மகனைப்பற்றிய நினைவுகள் பரவத் தொடங்க கிழவன் முணுமுணுக்கின்றான். "இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இவன் இப்படியே கோப்பை கழுவிக் கொண்டு...." கிழவன் எவ்வளவு பொறுப்பு வாய்ந்தவனாகயிருக்கின்றான். எவ்வளவு தூரம் கவலைப்படுகின்றான். முயல்களின் கவனத்தைக் கிழவனின் முணுமுணுப்பு கலைத்து விடுகின்றது. அவை ஒரு கணம் விளையாட்டை நிறுத்திவிட்டு அவனை வியப்புடன் நோக்குகின்றன. கிழவன் நல்லாத்தானேயிருந்தான், இப்ப என்ன நடந்து விட்டதோ? சிறிது நேரம்தான், முயல்கள் மீண்டும் விளையாட்டில் இறங்கி விட்டன. 'வெட்கங்கெட்ட முயல்கள்' கிழவனின் இதழ்கள் இலேசாக முணுமுணுக்கின்றன. இலேசாகச் சிரிப்புக் கூட வருகின்றது.



'எது எதையும் அதனதன் இயல்பான வாழ்க்கை வட்டத்திலிருந்து பிரித்துச் செயற்கையான சூழலில் போட்டால் இதுதான் பிரச்சனையோ....' கிழவனிற்கு முயல்களிடத்தில் ஒரு வித அநுதாபம் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமும் துக்கமும்

– மாறன்

இருள் சூழ்ந்த
மயான அமைதி
காற்றும் மரங்களும்
போட்ட சத்தம் கூட
இராணுவ வண்டிகளின்
இரைச்சலாகவே என் தலைக்குள் கேட்டது
துயின்று போனேன்
என் தலைக்குச்
சமாதானம் சொல்லி. . .

ஆம்
நான் துயின்று போனேன்
என் நினைவுகளும்
கனவுகளும் மட்டும்
உறங்க மறுத்தன.

மீண்டும் மீண்டும
நாய்களின் ஓலங்களும்
ட்ரக் வண்டிகளின் சத்தமும்
நெருங்கிக் கொண்டிருந்தன.

விமானங்களின் குண்டு வீச்சுக்கும்
ஹெலிகளின் சூட்டுக்கும்
என் உடலை மறைத்து
மறைத்து தப்பித்துக் கொண்டிருந்தேன்.

அயலூரில் சாவு
பக்கத்து வீட்டில் சாவு,
எம்மவர்களின்
மரண ஓலங்கள்
வானத்தை முட்டிக் கொண்டிருந்தது.

முந்த நாள்
பக்கத்து வீட்டு
பார்வதி மாமியின்
பார்த்தீபன்
வர்க்கம் பற்றி
தர்க்கம் பேசியதற்காய்
"தத்துவம் பேசுகிறாயோ?"
என்று மரத்தில் கட்டி
மண்டையில் போடப்பட்டிருந்ததும்
என் மூளையை
பிடுங்கிக் கொண்டிருந்தது.

எதிரியைக் கொல்வதா
எதிரியின் எதிரியைக்
கொல்வதா என்பதில்
என் கனவுகளும் நினைவுகளும்
சண்டை போட்டுக் கொண்டிருந்தன.

இன்றைய இரவுகளும்
நாளைய விடியல்களும்
தமக்குத் தாமே
விலங்கு போட்டுக் கொண்டிருந்தன.
மனிதம் குப்புறப் படுக்க
துப்பாக்கிகள் மட்டும்
ஒய்யாரமாய் நீட்டி நிமிர்ந்து
படுத்துக் கொண்டிருந்தன.

நான் மட்டும்
தூக்கத்தில் விம்மி, விம்மி
அழுது கொண்டிருந்தேன்
பாவம் மக்களென.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே குரலில் பேசுவதிலுள்ள வில்லங்கம்

*தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம் இரண்டு முக்கியமான அம்சங்களைக் கவனிக்க வேண்டும்: ஒன்று தமிழின விடுதலை, மற்றது ஜனநாயகம். இவை தொடர்பான ஆய்வுகளிற் தமிழ்த் தேசியவாதத்தின் சில முக்கியமான பண்புகள் கவனிக்கப்படுவதில்லை. எனவே அவற்றை நினைவூட்டுவது பயனுள்ளது*

– சி. சிவசேகரம்

ஈழத்தமிழர் சார்பாக பேசும் உரிமை எவருடையது என்ற கேள்வி மீண்டும் மீண்டும் எழுகிறது. ஈழத்தமிழர் அனைவரும் ஒரே குரலிற் பேச வேண்டும் என்ற ஆதங்கம் பழையது. எப்போதும் இருந்து வந்துள்ள பிரச்சனை, அந்தக் குரல் எவருடையதாக இருக்க வேண்டும் என்பது தான். இன்றைய சூழலில் விடுதலைப் புலிகள் அந்தக் குரலுக்கு உரிமை கொண்டாடலாமா என்பது பற்றி விவாதிக்கப்படுகிறது. அதனோடு சேர்ந்து, விடுதலைப் புலிகளின் சனநாயக மறுப்பும் மனித உரிமை மீறல்களும் பற்றிய கேள்விகள் எழுகின்றன. சிலர் அவர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கிறார்கள். வேறு சிலர் அவர்களை ஃபாஸிஸவாதிகள் என்கிறார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கங்களும் பல கடந்த பத்தாண்டுகளுள் வெகு தூரம் பயணஞ் செய்துவிட்டன. ஆயினும் அதிகம் முன்னேறியுள்ளதாகக் கூறுவது கடினம். மாக்ஸியவாதிகளைத் துரோகிகளாகவும் இன விரோதிகளாகவும் அடையாளங் காட்டியவர்கள் பலர் இன்று பேரினவாத அரசினதும் இந்திய மேலாதிக்க ஆட்சியாளர்களதும் தயவிற் தங்கியிருக்கிறார்கள். இது மட்டுமன்றி இனஒழிப்புப் போரில் அரச படைகளுடன் ஒத்துழைக்கிறவர்களும் உள்ளனர். தமிழீழம் என்ற கோரிக்கை பாரிய முறையில் விடுதலைப் புலிகளால் மட்டுமே முன்வைக்கப்படுகிறது. பிரிவினை தவிர்த்த நியாயமான தீர்வுகளை எல்லாம் பத்து வருடங்கள் முன்பு ஏளனஞ் செய்த இயக்கத் தலைமைகள் தமது சுவடுகளை மணலால் மூடிவிட்டு, ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் என்ன கிடைக்கும் என்று தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடமிருந்து பிரிந்த சில சாய்மனைக் கதிரைப் போராளிகள் மட்டும் விடுதலைப் புலிகளை நிராகரித்துத் தமிழீழத்தை வென்றெடுப்பது பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம் இரண்டு முக்கியமான அம்சங்களைக் கவனிக்க வேண்டும்: ஒன்று தமிழின விடுதலை, மற்றது ஜனநாயகம். இவை தொடர்பான ஆய்வுகளிற் தமிழ்த் தேசியவாதத்தின் சில முக்கியமான பண்புகள் கவனிக்கப்படுவதில்லை. எனவே அவற்றை நினைவூட்டுவது பயனுள்ளது எனக் கருதி இக் கட்டுரையை எழுதுகிறேன். தமிழ்த் தேசியவாதம் தன்னை அடையாளப் படுத்துவதிற் கண்ட பிரச்சனைகளும் அதன் தலைமைகளது சனநாயகப் பண்பும் பற்றியே இங்கு அதிக கவனம் எடுக்கப்படும்.

தேசியவாதத்தினுள் அடக்கு முறையின் கூறுகளும் உள்ளன. சில வரலாற்றுச் சூழல்களில் அது மனித சமத்துவக் கோட்பாடுகளால் வழி நடத்தப் பட்டுள்ளது. இன ஒடுக்கலுக்கு எதிரான போராட்டங்கள், தேசிய விடுதலை, மேலாதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக ஒரு நாட்டின் இறைமையைப் பேணும் செயற்பாடுகள் போன்றவற்றிற் தேசியவாதம் முற்போக்கான முறையில் இயங்க முடியும். இத்தகைய விடுதலை சார்ந்த வரலாற்றுப் பணிகட்குப் புறம்பான நிலமைகளில், அது தனது குறுகிய பார்வையை முதன்மைப் படுத்திப் பிற்போக்குச் சக்தியாகச் செயற்படுகிறது. சிங்களப் பேரினவாதமாயினும் ஜேர்மன் ஃபாஸிஸமாயினும் இத்தகைய குறுகிய பார்வையால் உந்தப்பட்டே பிற மக்களை ஒடுக்க முற்பட்டன. தேசிய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அந்த நேரத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் "இன்று அவர்களுக்கு, நாளை நமக்கு" என்று கூறியதற்காக தீர்க்கதரிசி எனப் போற்றப்பட்டார். அந்தத் தீர்க்க தரிசனத்துள் இருக்கும் ஒரு முக்கியமான சொல் 'அவர்கள்'. யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகளைப் பொறுத்தவரை, மலையக மக்கள் அன்றும் இன்றும் 'அவர்கள்' தான்.

விடுதலை இயக்கங்களுள்ளும் இக் குறுகலான பார்வை சாத்தியமான ஒன்றே. தேசியம் அடிப்படையான ஒரு சமூகத் தன்மை என்று கருதும் எவரும், இத்தகைய குறுகிய பார்வைக்குத் தம்மை உரியவர்களாக்குவது எளிது.

இலங்கையிற் தமிழ்த் தேசிய உணர்வின் தோற்றம், சிங்களப் பேரினவாதத்தின் வளர்ச்சியின் விளைவானது. இலங்கையின் சுதந்திரம் வரைலயிலான காலத்திலும் அதற்குச் சிறிது பின்னருங்கூடத், தமிழர்களது பிரதிநிதிகளாக இருந்தோர், யாழ்ப்பாண வேளாளருள் ஒரு அற்பச் சிறுபான்மையினரது நலன்களைப் பற்றிய அக்கறை உடையவர்களே. இலங்கைக்குச் சர்வசன வாக்குரிமையை வழங்குவதற்கு பிரித்தானிய எசமானர்கள் ஆலோசித்தபோது, அதை இவர்களிற் கணிசமானோர் எதிர்த்தனர். பெண்களும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் வாக்குரிமை பெறுவதை இவர்கள் எதிர்த்ததில் வியப்பில்லை. ஆயினும், இன்றும் இவர்களைத் தமிழர்கள் அனைவரதும் நலனுக்காகப் போராடிய தலைவர்களாகவும் சனநாயகவாதிகளாகவும் பலர் கொண்டாடுவதே வியப்புக்குரியது.


இந்த வேளாள மேட்டுக்குடி ஆதிக்கச் சிந்தனை மட்டக்களப்பு, வன்னிப் பகுதி மக்களைத் தாழ்வான வர்களாயும் மேற்குக் கரையோரத்துத் தமிழ்க் கத்தோலிக்க மக்களைத் தம்மில் ஒரு பகுதியினர் அல்லாதவராயும் மலையக மக்களை அந்நியராகவும் கருதியது. இவர்களது சனநாயகம் இந்தச் சிறுபான்மையினரது நலன்களை உறுதிப்படுத்தும் ஒரு உத்தியாக அல்லாது வேறெதுவுமாக இருக்கவில்லை. 1948ல் மலையகத் தமிழர் வாக்குரிமையற்றோராக்கப் பட்டபோது தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்தோரால் 1949ல் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியால் இந்த மனோபாவத்திலிருந்து விடுபட இயலாமலே இருந்தது. அந்த நேரத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் "இன்று அவர்களுக்கு, நாளை நமக்கு" என்று கூறியதற்காக தீர்க்கதரிசி எனப் போற்றப்பட்டார். அந்தத் தீர்க்க தரிசனத்துள் இருக்கும் ஒரு முக்கியமான சொல் 'அவர்கள்'. யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகளைப் பொறுத்தவரை, மலையக மக்கள் அன்றும் இன்றும் 'அவர்கள்' தான்.



சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாகும் என்று இலங்கையின் பிரதான சிங்களத் தேசியவாதக் கட்சிகள் இரண்டும் பிரகடனம் செய்து 1956 ல் பொதுத் தேர்தலில் இறங்கும் வரை, (அன்று அம்பாறையையும் உள்ளடக்கிய) மட்டக்களப்பு மாவட்டத்திற் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் இரண்டுமே வேரூன்ற முடியவில்லை. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களை அரசியல் அடிப்படையில் ஒன்றிணைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியது அரச கரும மொழிச் சட்டமே எனலாம். சிங்களம் அரச கரும மொழியானாற் தமிழ் அழியும், தமிழினம் அழியும் என்று பிரச்சாரம் செய்யப்பட்டாலும், தமிழரசுக் கட்சித் தலைமையின் அக்கறை, தமிழ் மொழி மட்டுமே பேசும் பரந்துபட்ட மக்களது நலனை விட, ஆங்கிலம் படித்து ஆங்கிலத்திற் கருமமாற்றுவோரது நலன்களையே சார்ந்திருந்தது. இலங்கையிற் தமிழ் மொழிக் கல்வியின் விருத்தியில், இலவசக் கல்வியும் தாய்மொழிப் போதனையும் பற்றி எடுக்கப்பட்ட அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்மானங்களினளவுக்குத், தமிழ்த் தேசியவாதக் கட்சிகளது பங்களிப்பு அமையவில்லை எனலாம். தமிழரசுக் கட்சியைச் சார்ந்து உருவாகிச் செயற்பட்ட தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் போன்ற அமைப்புகள், நடுத்தர வர்க்கத் தமிழர்களது நலனையே வலியுறுத்தின. இவற்றின் செல்வாக்கு '60களின் முற்பகுதியில் இருந்தளவுக்கு, அதன் பின் எப்போதுமே இருக்கவில்லை.

1949ல் மலையகத் தமிழர் பிரச்சனையைக் காரணங்காட்டி உருவான தமிழரசுக் கட்சி, 1957ல் ஏற்பட்ட பண்டாரநாயக-செல்வநாயகம் உடன்படிக்கையில் அப் பிரச்சனையைத் தற்காலிகமாக ஒதுக்குவதற்கு உடன்பட்டது. 1960 களில் அக்கட்சி மலையகத்திற் தனக்கு ஆதரவான ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்க முற்பட்டுத் தோல்வி கண்டது. இவ்வாறே, வட கிழக்கின் முஸ்லிம் மக்களைத் தம் தலைமைக்குக் கீழ்க் கொண்டு வருவதிலும் அது தோல்வி கண்டது. கட்சியின் பேரில் பாராளுமன்ற ஆசனங்களைப் பிடிக்கும் இவர்களது தேவையை அறிந்த முஸ்லிம் பிரமுகர்கள், இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தித் தமிழ் வாக்காளர்களது ஆதரவுடன் தமது போட்டியாளர்களைத் தோற்கடித்துத், தருணம் வாய்த்த போது ஆளுங் கட்சிக்குத் தாவியது 1956, 60 தேர்தல்களின் பின் நடந்தது. இங்கே நிகழ்ந்த தவறு முஸ்லிம் சமூகத்தினதாகச் சிலராற் காட்டப்பட்டாலும், உண்மையில் தமிழரசுக் கட்சி முஸ்லிம்களது பிரச்சனையைக் கருத்திற் கொண்டு தனது அரசியலை விருத்தி செய்யவில்லை என்பதே முக்கியமான உண்மை.

1949ல் தமிழரசுக்கட்சி உருவானபோது முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கொள்கை, மலையகத் தமிழரது சுயாட்சியையோ முஸ்லிம்களது விருப்பு வெறுப்புக்களையோ கணிப்பில் எடுக்கவில்லை. அது மட்டுமன்றிப், பிற தேசிய சிறுபான்மைகளது நலன்கள் பற்றிய அக்கறையும் அக் கட்சியிடம் இருக்கவில்லை. சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாகச் சிங்கள முற்போக்குச் சக்திகளையும் வடக்குக், கிழக்கு மாகாணத் தமிழர் அல்லாத பிற தேசிய இனத் தலைமைகளது ஆதரவைத் திரட்டும் தேவையையும் அது உணரவில்லை. ஏனெனில், இக் கட்சியின் சிந்தனை தமிழ்க் காங்கிரஸின் தமிழ்த் தேசிய உணர்வின் முக்கிய குறைபாடுகளினின்று விடுபடவில்லை. 1956ல் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இக் கட்சி பெற்ற அமோகமான வெற்றியையடுத்து, மூதவை (ஸெனற்) உறுப்பினராகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இவர்களாற் தெரியப்பட்டார். ஆயினும், 1977 வரை, யாழ்ப்பாணத்தின் 40வீத தொகையினரான பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த எவருமே தமிழரசுக் கட்சியினது சார்பிலோ தமிழ்க் காங்கிரஸ் சார்பிலோ தேர்தலில் நிற்கவில்லை. இந்த மக்களுக்காகப் போராடிக் குரல் எழுப்பினோர் இடதுசாரிகள் மட்டுமே. தமிழரசுக்கட்சியின் மூதவை நியமனங் கூட, வடக்கிற் தாழ்த்தப்பட்ட சாதியினர் தமது உரிமைகளை வலியுறுத்த முற்பட்ட பின்னரே நிகழ்ந்தது.


1965ல் இரண்டு முக்கிய தமிழ்க் கட்சிகளும் யூ.என்.பி. ஆட்சியிற் பங்காளிகளாயின. வடக்கில் 1966ல் வெடித்தெழுந்த தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தை நசுக்குமாறு குரல்

1949ல் தமிழரசுக்கட்சி உருவானபோது முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கொள்கை, மலையகத் தமிழரது சுயாட்சியையோ முஸ்லிம்களது விருப்பு வெறுப்புக்களையோ கணிப்பில் எடுக்கவில்லை. அது மட்டுமன்றிப், பிற தேசிய சிறுபான்மைகளது நலன்கள் பற்றிய அக்கறையும் அக் கட்சியிடம் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1957ல் திருகோணமலையிலிருந்த பிரித்தானிய துறைமுகத் தளமும் கட்டுநாயக விமானத்தளமும் அகற்றப்படுவதைத் தமிழ்த் தேசியவாதிகள் எதிர்த்தனர். உழுபவர்கட்கு அதிக உரிமை வழங்குமாறு உருவாக்கப்பட்ட நெற்காணிச் சட்டத்தையும் அவர்கள் யூ.என் பியுடன் சேர்ந்து எதிர்த்தனர். இவை எல்லாம் எந்த வர்க்கங்களது நலன் சார்ந்து இவர்கள் இருந்தனர் என்பதையே காட்டியது.



கொடுத்தவர் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தரான அமிர்தலிங்கம். இதன் மூலம் தமிழ்த் தேசியவாதத்தின் அன்றைய சாதிய அடையாளத்தை அவர்கள் உறுதிப்படுத்தினர்.

1957ல் திருகோணமலையில் இருந்த பிரித்தானிய துறைமுகத் தளமும் கட்டுநாயக விமானத்தளமும் அகற்றப்படுவதைத் தமிழ்த் தேசியவாதிகள் எதிர்த்தனர். உழுபவர்கட்கு அதிக உரிமை வழங்குமாறு உருவாக்கப்பட்ட நெற்காணிச் சட்டத்தையும் அவர்கள் யூ.என் பியுடன் சேர்ந்து எதிர்த்தனர். இவை எல்லாம் எந்த வர்க்கங்களது நலன் சார்ந்து இவர்கள் இருந்தனர் என்பதையே காட்டியது. 1961ல் பெற்றோலியக் கம்பனிகள் தேசியமயமாக்கப்பட்ட போதும் தமிழரசுக்கட்சி எதிர்த்து வாக்களித்தது. இவர்களது மாக்ஸிய எதிர்ப்பு ஒரு புறம் தமிழ் மேட்டுக்குடிகளது நலன்கள் பற்றிய அக்கறையால் ஏற்பட்டது. மறுபுறம், வடக்கில் இவர்கட்கு மாற்றுச் சக்தியாக இயங்கியவர்கள் இடதுசாரிகளே என்பது ஒரு முக்கிய காரணம்.

இடது சாரிகள் மீது அபாண்டம் சுமத்தி, அவர்களைச் சிங்களவர்களது எடுபிடிகளாகவும் தமிழ்த் துரோகிகளாகவும் காட்டுவதிற் தமிழரசுக்கட்சியின் பிரசாரக் கருவிகள் மும்முரமாகவே செயற்பட்டன. இடதுசாரிக் கட்சிகள் இலங்கை தழுவிய கட்சிகளாக இருந்தமையும், சிங்களப் பேரினவாதத்தின் எழுச்சியும், 1960களிற் பாராளுமன்ற இடதுசாரிகளின் அரசியற் சந்தர்ப்பவாதமும், சகல இடதுசாரிகள் மீதும் இவர்கள் சேறு பூசுவதற்கு வசதியாயிற்று, பண்டாரநாயக-செல்வநாயகம் உடன்படிக்கைக்குக் கம்யூனிஸ்ட் கட்சி அளித்த ஆதரவு பற்றியும் 1961 சத்தியாக்கிரகத்தின்போது இடதுசாரிக் கட்சிகள் தெரிவித்த ஆதரவும் அனுதாபமும் பற்றியும், இன்று கூடத் தமிழ்த் தேசியவாதிகள் பேசுவதில்லை.

1957ல் தமிழரசுக்கட்சியின் சிறுபிள்ளைத்தனமான ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் சிங்கள இனவெறியர்களது காடைத்தனத்துக்குத் தூபமிட்டது. 1961 சத்தியாக்கிரகம் எதுவித முன்னேற்பாடும் இல்லாது தொடக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கச்சேரிவாயிலில் பொலிஸாரின் மூர்க்கத்தனத்தால் அரசு தமிழ் பொது மக்களது பகையைச் சம்பாதிக்கவும் சத்தியாக்கிரக இயக்கம் பரவவும் நேர்ந்தது. அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்ததும் போராட்டம் முடங்கிவிட்டது. இப்போராட்டத்தை யொட்டி ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுத் தபாற் சேவை, தமிழரசுக் கட்சி கேட்பது சமஷ்டியல்ல, பிரிவினையே என்ற சிங்களப் பேரினவாதப் பிரச்சாரத்துக்கு வலிமை சேர்த்தது. இந்த இரண்டு நடவடிக்கைகளிலும், தமிழரசுக் கட்சிக்குள் இருந்த ஒரு சிறு குழு, பிற தலைவர்களது கலந்தாலோசனையின்றி நடந்து கொண்டதன் விளைவாகவே அவசியமற்ற தவறுகள் நேர்ந்தன. அதே வேளை, இப் போராட்டங்களை மக்கள் போராட்டங்களாக வளர்த்தெடுக்கும் ஆற்றல் தமிழரசுக்கட்சிக்கு இருக்கவில்லை.

தமிழரசுக் கட்சியின் அரசியற் தலைமை கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கிய ஒரு குழுவினிடமும் யாழ்ப்பாணத்து மேட்டுக்குடிகளின் பிரதிநிதிகளிடமுமே இருந்து வந்தது. பேரளவிற், கிழக்கு மாகாணத்தைச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தவர்கள் கட்சியின் தலைமைப் பொறுப்புக்களில் அமர்த்தப் பட்டாலும், அரசியற் தீர்மானங்கள் யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகளது நலன்களை ஒட்டியே எடுக்கப்பட்டன. 1960 களின் முற்பகுதி வரை நடுத்தர வர்க்கத்தினரான அரச ஊழியர், ஆசிரியர்கள் போன்றோரது செல்வாக்கு தமிழரசுக் கட்சிக்குள் அதிகரித்தாலும், 1965ல் அக்கட்சி ஐ.தே.கவுடன் அதிகாரப் பகிர்வுக்கு இணங்கிய பிறகு, படித்த, உத்தியோகம் பார்க்கிற, பணக்காரச் சாதிமான்களது ஆதிக்கம் மேலும் ஓங்கியது. 1965ல் மந்திரிப்பதவியை ஏற்கத் தமிழரசுக்கட்சி உடன்பட்ட பின்பு, மக்களாற் தெரிந்தெடுக்கப்பட்ட எவருமே பதவி ஏற்பது இல்லை என முடிவு செய்து, கொழும்புக் கனவானான மு. திருச்செல்வத்தை அமைச்சராக்கினார்கள். இதன் பின், இக் கட்சி ஒரு வெகுஜன ஸ்தாபனமாகவும் மக்கள் போராட்ட இயக்கமாகவும் தன்னைக் காட்டிக் கொள்வது கூட இயலாது போயிற்று. இதன் விளைவாக, 1970 தேர்தலிற், தன் வரலாற்றில் முதற் தடவையாக, இக்கட்சி பெற்ற வாக்குகளின் விகிதாசாரம் வீழ்ச்சி கண்டது. குறிப்பிடத்தக்க விதமாக, அமிர்தலிங்கம் தனது சொந்தத் தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டார்.

செல்வநாயகத்துக்குத் தமிழரசுத் தந்தை, தீர்க்கதரிசி, ஈழத்துக் காந்தி போன்ற பலவேறு தொப்பிகள் அணிவிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் அவரை ஒரு அரசியல் விக்கிரகமாக்கித் தமிழரசுக் கட்சிக்கு ஒரு வகையான புனிதத்தை உருவாக்கும் முயற்சிகளே. மோகனதாஸ் காந்திக்கும் செல்வநாயகத்துக்குமிருந்த ஒரு ஒற்றுமை, அவர்களது வர்க்கச் சார்பு. முன்னையவர் அகிம்சையை ஒரு போராட்டக் கருவியாகக் கையாள்வதில் ஓரளவு வெற்றி கண்டவர். பின்னையவர் அதைப் போராட்டத்துக்கு மாற்றுச் சாதனமாகப் பயன்படுத்தியவர். 1970 ல் ஐக்கிய முன்னணி மிகுந்த பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிய போது செல்வநாயகத்தாற் கூற முடிந்ததெல்லாம். "இனிக் கடவுள் தான் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும். "இது தான் தமிழரசுக் கட்சியின் போராட்டத்தின் சாராம்சம்.

1970ல் உருவான பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சனை, தரப்படுத்தல், 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம், தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சி, பொலிஸ் அடக்கு முறை, புதிய குடியரசு அரசியல் யாப்பில் சிறுபான்மையினரது உரிமைகளின் பாதுகாப்புக்கான பகுதிகளது நீக்கம் போன்ற பல நிகழ்வுகள், தமிழ் மக்களிடையே போராட்ட உணர்வைத் தூண்டத் தொடங்கின. இக் காலகட்டத்தில் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் பலர், தோட்டங்கள் தேசியமயமானதையடுத்துத், தமது இருப்பிடங்களின்று விரட்டப்பட்டும், வேலை நாட்கள் போதாமையால் வெளியேறியும் வடக்கு நோக்கிப் புலம்பெயர்ந்தனர். இவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்த காணிச் சொந்தக்காரர்களாற் கொடுமையாகச் சுரண்டப்பட்டபோது, இவர்களுக்காகத் தமிழரசுக்கட்சியோ தமிழ்க் காங்கிரஸோ குரல் கொடுக்கவில்லை. காந்தியம் போன்ற சமூக சேவை அமைப்புக்களே இவர்கட்கு வாழ்க்கை வசதிகளையும் சொந்த முயற்சியால் முன்னேறும் வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் பாடுபட்டன.

தமிழரசுக் கட்சியும் (பின்னர்) கூட்டணியும் வன்முறையை மறுக்கும் சனநாயக அமைப்புக்களாகத் தம்மை பிரகடனம் செய்தவை.




1970ல் உருவான பல்கலைக்கழக அனுமதிப் பிரச்சனை, தரப்படுத்தல், 1974 தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம், தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சி, பொலிஸ் அடக்கு முறை, புதிய குடியரசு அரசியல் யாப்பில் சிறுபான்மையினரது உரிமைகளின் பாதுகாப்புக்கான பகுதிகளது நீக்கம் போன்ற பல நிகழ்வுகள், தமிழ் மக்களிடையே போராட்ட உணர்வைத் தூண்டத் தொடங்கின.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை தொடர்பாகத் தமிழரசுக்கட்சியும் கூட்டணியும் என்ன தான் சொன்னாலும் அவர்களது சாத்வீகப் போராட்டக் கொள்கை அவர்களது இயலாமையின் விளைவேயல்லாது போராட்டப் பாதை பற்றிய தெளிவான பார்வையின் விளைவானதல்ல. நமது சாதியச் சமூகம் அகிம்சையின் வழி இயங்கிய ஒன்றல்ல. ஒடுக்கப்பட்ட மக்கள் வன்முறைக்கு உட்பட்டே வாழ்ந்து வந்துள்ளனர்.



பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர் தெரிவிற் தொகுதி மக்களதும் கட்சிக் கிளையினதும் கருத்தை விடக், கொழும்பு வாழ் பிரமுகர்களதும் கட்சியின் உயர்மட்டத் தலைவர்களதும் கருத்துக்கள் எவ்வளவு முக்கியமாயிருந்தன என்பதை, 1970க்குப் பிற்பட்ட காலத்தில் வட்டுக்கோட்டை, காங்கேசன்துறைத் தொகுதிகட்கான இடைத்தேர்தல் நியமனம் ஏற்படுத்திய பூசல்களினின்று அறியலாம். இது இந்தக் கட்சிகட்கு மட்டுமே உரிய பிரச்சனையல்ல. ஆயினும், பாராளுமன்ற அரசியலில் மேட்டுக்குடி மாந்தரின் குடுமிப்பிடி அரசியலின் முக்கியத்துவம் பெரிது என்பதை அண்மையிற் திருகோணமலைத் தொகுதி ஆசனத்திற்கான மோதலின் போதும் கண்டோம். மட்டக்களப்பில் 1977ல் சி. ராஜதுரையைக் கவிழ்ப்பதற்காகக் கூட்டணித் தலைமை எடுத்த முயற்சியின் தீய விளைவுகளையும் கூட்டணி விரைவில் அனுபவித்தது. இந்தத் தேர்தல் அரசியல் என்பது, வெகுசனங்களை ஏமாற்றும் அரசியலே ஒழிய வெகுசன அரசியல் அல்ல என்பதை மக்கள் அறிந்தாலும், பாராளுமன்ற அரசியலுக்கு ஒரு நல்ல மாற்று உருவாகும் வரை, அவர்கள் அதில் ஈடுபடுவது தவிர்க்க இயலாததே. இந்தத் தேர்தல் அரசியல் சனநாயகம் அல்ல. அது ஒரு சனநாயகத் தோற்றம் மட்டுமே. அரசியல் பொருளாதார அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் மட்டுமே, சனநாயகம் இயலுமானதாகும். இது வரை தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் கோரி வந்துள்ள பரவலாக்கம், தமது கைகளில் அதிகபட்ச அதிகாரத்தைத் தக்க வைக்கும் பரவலாக்கமேயல்லாது, அதிகாரத்தை மக்களது தளத்திற்கு விரிவுபடுத்தும் பரவலாக்கமல்ல.

வன்முறை தொடர்பாகத் தமிழரசுக்கட்சியும் கூட்டணியும் என்ன தான் சொன்னாலும் அவர்களது சாத்வீகப் போராட்டக் கொள்கை அவர்களது இயலாமையின் விளைவேயல்லாது போராட்டப் பாதை பற்றிய தெளிவான பார்வையின் விளைவானதல்ல. நமது சாதியச் சமூகம் அகிம்சையின் வழி இயங்கிய ஒன்றல்ல. ஒடுக்கப்பட்ட மக்கள் வன்முறைக்கு உட்பட்டே வாழ்ந்து வந்துள்ளனர். சமூக வன்முறை அன்றாட நிகழ்வாக இல்லாதபோதும் அது பற்றிய அச்சம் நிலையான ஒன்றாகவே இருந்தது. அவர்கள் சமூக நீதிக்காகத், தனிப்பட்ட முறையிலோ மக்கள் குழுவாகவோ, குரலெழுப்பும் போதும் செயற்படும் போதும் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர். இந்த வேளைகளில் எல்லாம், உரிமைக் குரல் எழுப்புவோரைக் கலகக்காரர்களாகவும் தமிழினத்தின் ஒற்றுமைக்கு ஆப்பு வைப்போராகவுமே தமிழ்த் தேசியவாதிகளது அன்றைய தலைமை காட்டி வந்துள்ளது. தமிழ் மக்களது உரிமைக்கான போராட்டம் ஆயுதந் தரிக்குமாயின், அந்த ஆயுதங்கள் தேசிய இன ஒடுக்குதலை மட்டுமன்றிச் சாதிய ஒடுக்குமுறை உட்பட்ட பிற ஒடுக்குமுறைகளையும் தூக்கியெறியக்கூடும் என்பதையும் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் அறிந்திருந்தார்கள். அதே வேளை, தமது அதிகாரத்துக்குச் சவாலாக உருவான அரசியற் தலைவர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப் பட்டபோது அதைக்கண்டிக்கத் தயங்கியதை 1970 களிலிருந்து கண்டுள்ளோம். பாராளுமன்ற அரசியற் பேரங்கள் மூலம் தமிழர்களது தேசிய இன உரிமைகளை வெல்லவோ நிலைநிறுத்தவோ இயலாது என்பது தெளிவான பின்னர், தமிழரசுக் கட்சியும் கூட்டணியும் தட்டிக்கொடுத்து ஊக்குவித்த கிளர்ச்சிப் போக்குகள், அவர்களது



கட்டுப்பாட்டை மீறி வளர்ந்தன.

முன் குறிப்பிட்ட போக்குகளின் விளைவாக நிகழ்ந்த அரசியற் கொலைகளும் மிரட்டல்களும் கூட்டணியைத் தீண்டும் வரை அவர்கள் அவற்றைக் கண்டுங்காணமலே இருந்தனர். ஒரு புறம் தலைமைப் போட்டியின் விளைவாகவும், மறு புறம் கூட்டணியின் இயலாமை 1980-81ல் அம்பலமானதன் விளைவாகவும் பிரிந்து சென்ற சந்திரகாசன், ஈழவேந்தன், கோவைமகேசன் போன்றோர் உருவாக்கிய தமிழ் ஈழ விடுதலைக் கூட்டணியும் இந்த வன்முறையைக் கண்டிக்கவில்லை. தமது அரசியற் நிலைப்பாட்டை எதிர்த்தவர்களை இனத்துரோகிகள் என்று நிந்தித்த இந்தத் தலைமைகளின் போக்கின் தொடர்ச்சியாகவே, 1980களின் முற்பகுதியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட்டோருக்கு எதிரான மிரட்டல்களும் வன்முறையும் கொலைமுயற்சிகளும் அமைந்தன. இவற்றின் தோற்றுவாயைத் தமிழ்த் தேசியவாதக் கட்சிகட்குட் தேட வேண்டுமே ஒழிய, வெளியில் அல்ல.

கூட்டணித் தலைமையாயினும் பிற மேட்டுக்குடிகளாயினும், இந்த விதமான வன்முறைப் போராட்டத்தின் பொறுப்பை இளைஞர்களின் மீது சுமத்திவிட்டு அதன் விளைவான அரசியல் இலாபத்தைத் தாம் அடையலாம் என்ற எதிர்பார்ப்பு உடையோராக இருந்தனர். இன்று வரையிலும் இந்த மனோபாவம் ஒரு பகுதியினரிடம் தொடர்கிறது. இது ஒரு புறமிருக்க, மக்கள் ஆதரவுடன் நடக்கும் வெகுசனப் போராட்டங்களை விட அதிகமாகப் பாராளுமன்ற அரசியற் பேரங்களையே நம்பியிருந்த தேசியவாதத் தலைமை இலங்கைக்கு வெளியே ஆதரவைத் தேடத் தொடங்கியது. 1979ன் பின் இலங்கை – இந்திய உறவின் சீர் குலைவு, இந்தியாவில் ஒரு வலிய ஆதரவுச் சக்தியை உண்டாக்கியது. இந்தியாவின் பிராந்திய அரசியல் நோக்கம் பற்றிய தெளிவு இல்லாமல், கூட்டணி மட்டுமன்றிப், பல்வேறு விடுதலைப் குழுக்களும் இந்தியாவின் ஆதரவை நாடின. இதன் பின், ஈழத்தமிழர்களது குரல் இந்திய மேலாதிக்கத்தின் குரலாகவும் ஒலிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டதை நாமறிவோம். விடுதலை இயக்கங்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி மூலம் அவற்றைத் தனது பூரண ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவருவதில் இந்திய அதிகார வர்க்கம் கணிசமான வெற்றியுங் கண்டது. இந்திய ஆதரவுடன் வேகமாக வளர்த்த விடுதலை இயக்கங்களுடன் ஒப்பிடுகையில் விடுதலைப் புலிகள் சுயாதீனமாகவே இயங்கினார்கள் எனலாம். இதுவே பிற்காலத்தில் இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகட்குமிடையிலான முரண்பாட்டின் மூல காரணமும் எனலாம்.


அயல் நாடுகளின் ஆதரவு பற்றி, முக்கியமாக மேலை முதலாளித்துவ நாடுகளது ஆதரவு பற்றித், தமிழ் மக்களிடையே குறிப்பிடத்தக்களவு மயக்கங்கள் இருந்து வந்துள்ளன. தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்திற்கு எந்த அயல் நாடும் தரக் கூடிய ஆதரவு அந்நாட்டுத்தேசிய நலன்களுடனும் இலங்கை அரசுடனுள்ள உறவுடனும் தொடர்புடையது என்பதை நாம் மறந்துவிடலாகாது. இந்தியாவின் தலையீட்டைப் பற்றிய எதிர்ப்பார்ப்புக்களை வரவேற்பதில் தமிழ்தேசியவாதத் தலைமைகளது பங்கு பெரியது. இன்றுங் கூட ஐரோப்பிய நாடுகளின் குறுக்கீடு பற்றிய சபலம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. இது மட்டுமன்றிப்

அயல் நாடுகளின் ஆதரவு பற்றி, முக்கியமாக மேலை முதலாளித்துவ நாடுகளது ஆதரவு பற்றித், தமிழ் மக்களிடையே குறிப்பிடத்தக்களவு மயக்கங்கள் இருந்து வந்துள்ளன. தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்திற்கு எந்த அயல் நாடும் தரக் கூடிய ஆதரவு அந்நாட்டுத் தேசிய நலன்களுடனும் இலங்கை அரசுடனுள்ள உறவுடனும் தொடர்புடையது என்பதை நாம் மறந்துவிடலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜரோப்பிய அரசாங்கங்களின் மனித உரிமை அக்கறை, அவர்களது முதலாளித்துவ நலன்களைப் பேணும் ஒரு கருவியே ஒழிய வேறில்லை. இலங்கை அரசாங்கத்தின் மிகக் கொடுமையான மனித உரிமை மீறல்கள் தென்னிலங்கையில் 1989பின் நிகழ்ந்த போது, ஒரு புறம் கண்டனத் தீர்மானங்கள், மறுபுறம் அரசாங்கம் கவிழாத விதமான ஆதரவு, பின்பு மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றத்துக்கு பாராட்டு என்ற விதமாக நாடகமாடினார்கள்



பிராந்திய வல்லரசுகளின் தலையீடு என்ற விதமான எதிர்பார்ப்பு பலவேறு வகைகளில் எழுவதை நாம் காணலாம்.
1983ல் தமிழர் விரோத வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பின்பு மேலை நாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பொதுசன அபிப்பிராயம் வலியதாயிருந்தது. இதனையடுத்து அகதிகள் பெருந் தொகையில் வந்ததும், இலங்கை அரசாங்கத்தின் அண்மைக் காலப் பிரசாரத்தின் வெற்றியும், விடுதலை இயக்கங்களிடையிலான மோதல்களும் வன்முறையும் மனித உரிமை மீறல்களும், தமிழ் அகதிகள் மீதான பகைமை உணர்வை வளர்க்கவும் விடுதலைப் போராட்டம் பற்றிய அக்கறை குறையவும் உதவின. 1986க்குப் பின் ஜரோப்பிய வலதுசாரி ஏடுகள், முக்கியமாக அதிக விற்பனையுடைய நாளேடுகள், தமிழ் அகதிகட்கும் இனவிடுதலைப் போராட்டத்துக்கும் எதிரான கருத்துக்களை ஊக்குவிக்கும் முறையிற் செய்திகளைத் திரித்து வெளியிட்டன.

ஜரோப்பிய அரசாங்கங்களின் மனித உரிமை அக்கறை, அவர்களது முதலாளித்துவ நலன்களைப் பேணும் ஒரு கருவியே ஒழிய வேறில்லை. இலங்கை அரசாங்கத்தின் மிகக் கொடுமையான மனித உரிமை மீறல்கள் தென்னிலங்கையில் 1989பின் நிகழ்ந்த போது, ஒரு புறம் கண்டனத் தீர்மானங்கள், மறுபுறம் அரசாங்கம் கவிழாத விதமான ஆதரவு, பின்பு மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றத்துக்கு பாராட்டு என்ற விதமாக நாடகமாடினார்கள். 1994 ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அவர்களது நலன்களைப் பாதிக்காததால் இன்றைய ஆட்சியும் அவர்களது ஆதரவைப் பெறுகிறது.
தமிழ் மக்களது அடிப்படை உரிமைகட்கும் இன விடுதலைக்குமான போராட்டத்தின் நியாயத்தை மேலை நாட்டு மக்களிடம் விளக்கும் தேவை உள்ளது. மேலை நாட்டு மனித உரிமை இயக்கங்களுக்கும் பிற பொது நிறுவனங்கட்கும் அரசியற் கட்சிகட்கும் தமிழ் மக்களின் நிலையை விளக்கும் தேவை உள்ளது. ஆயினும் விடுதலைப் போராட்டத்தை ஒரு மக்கள் போராட்டமாக வளர்த்தெடுப்பதற்கு மாற்றீடாக எந்த அயல் ஆதரவும் அமைய முடியாது. ஐ.நா. சபையின் தலையீடு, இந்தியாவின் குறுக்கீடு என்பன பற்றிய மயக்கங்கள் நம்மிடையே இன்னமும் மிகுதியாக உள்ளன. நாம் நமது வரலாற்று அனுபவங்களையும் உலக வரலாற்று அனுபவங்களையும் ஆழமாக ஆராயும் தேவையையே இது உணர்த்துகிறது.

தமிழ்த் தேசியவாதிகள் தம்மை யாருடன் இணைத்து நோக்கி வந்துள்ளனர் என்பது அவர்களது அரசியல் முனைப்பை அடையாளங்காட்ட ஓரளவு உதவும். 1950 கள் வரையில் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவர்கள் ஈழத் தமிழ்த் தலைவர்களது உதாரண புருஷர்களாக இருந்தனர். 1956க்குப் பின்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. 1971ல் இந்திய ஆளும் வர்க்கத்துடனான நெருக்கத்தைத் தமிழரசுக் கட்சி நாடியது. 1971ல் வங்காள தேசப் பிரிவினையில் இலங்கை அரசாங்கத்தின் நடு நிலைமை இந்தியாவுக்கு எரிச்சலூட்டியதை நினைவு கூரலாம். 1980ல் அதிகாரத்துக்கு மீண்ட இந்திரா காந்திக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இருந்த பாரிய முரண்பாடு, கூட்டணியை இந்தியாவுக்கு நெருக்கமாக்கியது. இச் சூழலில் இந்தியா, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளை முடுக்கி விடுவதில் அக்கறை காட்டியதில் வியப்பில்லை. 1983ன் பின்பு, இந்தியா தமிழீழத்தை விடுதலை செய்யும் என்ற கனவு பல விடுதலைப் போராட்டக் குழுகளிடம் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. அமைதி காக்கும் படையின் வருகை வரை, இந்தியா பற்றிய பிரமைகள் வலியனவாகவே இருந்தன.

1960 களின் முற்பகுதியில், இஸ்ரேலின் உருவாக்கத்தைத் தமிழரசுக் கட்சிக்குள் இருந்த ஒரு தீவிர தமிழ்த் தேசியவாதப் பிரிவு மிகவுங் கொண்டாடியது. இதன் விளைவாக, லியொனிட் யூரிஸ் எழுதிய 'எக்ஸோடஸ்' என்ற நூல் தமிழாக்கப்பட்டுச் சுதந்திரனிற் தொடர் கட்டுரையாக வந்தது. 1966ல் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் இஸ்ரேல் பற்றிய மோகம் தணிய நேரிட்டது. 1971-1974ல் அமிர்தலிங்கம் ஈழத்து முஜிபுர் என்று அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. முஜிபுர் ரஹ்மானின் அரசியற் செல்வாக்கின் சரிவும் அவரது கொலையும் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தன. பின்னர் அமிர்தலிங்கம் ஈழத்து அரபாத் என்று அழைக்கப்பட்டார். இலங்கையிற் பலஸ்தீன விடுதலை பற்றிய அக்கறையின் வளர்ச்சியில் இடதுசாரிச் சக்திகட்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. இந்த அடையாளத்தைக் தமிழ்த் தேசியவாதத் தலைமை நாடியதற்கு, அன்று, தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவாகி வளர்ந்த முற்போக்கான போராட்டச் சிந்தனைகட்கும் ஒரு பங்கு உண்டு. பலஸ்தீன விடுதலையுடனும் பிற ஏகாதிபத்திய விரோத விடுதலை இயக்கங்களுடனும் தமிழ்ப் போராளிக் குழுக்கள் கண்ட ஒற்றுமை உணர்வு இன்னமும் தொடர்கிறது. இதே வேளை, விடுதலைப் புலிகளின் ஆதரவுச் சக்திகளில் ஒரு பகுதியினர், 'எக்ஸோடஸ்' என்ற ஸியோனிஸ நூலைத் தமிழிற் தொடராக வெளியிடுவது, அங்கு இன்னமும் பழைய பிற்போக்குச் சிந்தனையின் வேர்கள் உள்ளதையே நமக்குக் காட்டுகின்றது. தமிழ்த் தேசியவாதம், தனது அடையாளத்தைத், தெளிவாக, உழைக்கும் வர்க்க அடிப்படையில் அமைக்காதளவில், இத்தகைய முரண்கள் எதிர்பார்க்க வேண்டியனவே.

'தமிழ்ப் பேசும் மக்கள்' என்ற அடையாளம் இலங்கையின் சிறுபான்மை இன மக்களைப் பெருமளவில் ஒன்று திரட்டும் நோக்கையுடையதாக இருந்தது. வேண்டுமனால் இதைத் தென்னிந்தியாவின் திராவிட இன அடையாளத்துடன் கொஞ்சம் ஒப்பிடலாம். தமிழ்ப் பேசும் மக்களின் வெவ்வேறு பிரிவினர்களின் தனித்துவமான தன்மைகளும் குறிப்பான பிரச்சனைகளும் இந்த அடையாளத்திற்குச் சில நெருக்கடிகளைத் தோற்றுவித்தன. தமிழரசுக் கட்சி இந்த அடையாளத்தை வலியுறுத்திய போது., யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகளின் வெளிவெளியான அடையாளத்தைக் கொண்ட தமிழ்க் காங்கிரஸினதும் அதற்கு முந்திய பெருங்குடி மக்களதும் தலைமைகளினின்றும் வேறுபட்ட ஒரு தோற்றத்தை உருவாக்கியது. முன்னைய அடையாளம், தாழ்த்தப்பட்ட சாதியினரின் குரலை மறுத்து, அனைவருக்காகவும் பேசும் உரிமையை குடித் தலைவர்கட்கு ஒதுக்க முற்பட்டது. தமிழரசுக் கட்சியின் புதிய பரந்துபட்ட தமிழ் இன அடையாளமும் வெகு விரைவிலேயே உதிரத் தொடங்கிவிட்டது.


தமிழரசுக் கட்சி கேட்ட சமஷ்டி, வடக்குக் கிழக்கு மாகாணங்களின்

விடுதலைப் புலிகளின் ஆதரவுச் சக்திகளில் ஒரு பகுதியினர், 'எக்ஸோடஸ்' என்ற ஸியோனிஸ நூலைத் தமிழிற் தொடராக வெளியிடுவது, அங்கு இன்னமும் பழைய பிற்போக்குச் சிந்தனையின் வேர்கள் உள்ளதையே நமக்குக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தமிழரசுக் கட்சி கேட்ட சமஷ்டி, வடக்குக் கிழக்கு மாகாணங்களின் அதிகாரத்தைத் தமிழ்ப் பேசும் மக்களின் பேரிலான ஒரு ஆட்சிக்கு உட்படுத்த முயன்றபோது மலையகத் தமிழர் பற்றிய தீர்வு ஆலோசனை அவர்களிடம் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. முஸ்லிம்களிற் பெரும்பாலானோர் இம் மாகாணங்கட்கு வெளியிலேயே வாழ்ந்தனர்.



அதிகாரத்தைத் தமிழ்ப் பேசும் மக்களின் பேரிலான ஒரு ஆட்சிக்கு உட்படுத்த முயன்றபோது, மலையகத் தமிழர் பற்றிய தீர்வு ஆலோசனை அவர்களிடம் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. முஸ்லிம்களிற் பெரும்பாலானோர் இம் மாகாணங்கட்கு வெளியிலேயே வாழ்ந்தனர். தமிழரசுக் கட்சியின் சமஷ்டித் தீர்வு, இலங்கை முழுவதும் பரவி வாழும் முஸ்லிம்களின் உரிமைகள் பற்றிய அக்கறை இல்லாததாகவே இருந்தது. 1956 தேர்தல் வெற்றியை அடுத்து நடந்த திருகோணமலை மாநாட்டுக்குச் சற்று முன்பு, மட்டக்களப்பு மாவட்டத்திற் தமிழரசுக்கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவர், தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்திடம் நாங்கள் எங்களுக்கு ஒரு "இஸ்லாமிஸ்தான்" வேண்டுமென்று கேட்டால் ஒப்புக் கொள்வீர்களா என்று கேட்டபோது, செல்வநாயகத்தால் மறுக்க முடியவில்லை. இதை அந்த முஸ்லிம் உறுப்பினர் மாநாட்டு மேடையிற் கூறியபோது எல்லாரும் கைதட்டி ஆரவாரித்தாலும், இக் கேள்வி, முஸ்லிம்களின் தனித்துவத்தை வலியுறுத்தியது என்பதைத் தமிழ்த் தலைவர்கள் கவனிக்காமல் இருந்திருக்க முடியாது. ஒவ்வொரு தேர்தலின் முன்பும் வசதியாக ஒரு முஸ்லிம் வேட்பாளரைத் தெரிவதும் தேர்தலின் பின்பு அவர் கட்சி மாறுவதும், முஸ்லிம்களின் நம்பகமற்ற போக்காக விளங்கிக் கொள்ளப்பட்டதேயொழியத் தமிழரசுக்கட்சியால் முஸ்லிம்களது பிரதிநிதியாகச் செயற்பட முடியாதமையின் விளைவு என்பது சரியாக உணரப்படவில்லை.

1956க்குப் பின், தமிழரசுக் கட்சித் தலைமை மட்டக்களப்புத் தமிழர்களைத் தன் அரவணைப்புக்குட் கொண்டு வர மும்முரமாக முற்பட்டாலும், யாழ்ப்பாண விரோத உணர்வு, எப்படியவாது, தமிழ்த் தேசிய வாதத்துக்கு முரணான முறையில் யாரையாவது ஒரு தமிழரை மட்டக்களப்பு மாவட்டம் தெரிவு செய்தே வந்தது. தமிழரசுக்கட்சித் தலைமை 1965ல் யூ.என்.பி. ஆட்சியில் இணைந்து, 1970ல் தமிழர்களைக் காப்பாற்றும் பொறுப்பைக் கடவுளிடம் ஒப்படைத்த பிறகு, தமிழ் மக்கள் முன்னளவுக்கு அதை நம்பும் நிலைமையில் இருக்கவில்லை. தரப்படுத்தல், 4வது தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதங்கள், புதிய அரசியலமைப்பு வரைவு போன்றவை தமிழ் மக்களிடையே தாம் ஒரு ஒடுக்கப்பட்ட இனம் என்ற உணர்வை வலியுறுத்தியதாலேயே, ஏதோ வகையிலான போராட்ட ஐக்கியத்துக்கான சூழ்நிலை உருவானது. ஆயினும், 1974ல் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸையும் தொண்டமானையும் மட்டுமன்றி ஐ.தே.க பிரமுகர்களையும் இணைத்துத் தன்னை வலுப்படுத்த எடுத்த முயற்சி, 1977 தேர்தலுக்குச் சிறிது முன்னமே குலைந்துவிட்டது. தொண்டமானும் ஐ.தே.க. தமிழர்களும் தமது நலன்களைப் பேணப் பிரிந்து போய் விட்டார்கள். 1977ல் தரப்படுத்தல், மாவட்ட அடிப்படையிலான தெரிவு என்ற வடிவு பெற்றவுடன், கிளிநொச்சிக்குத் தனி மாவட்டம் கேட்கப்பட்டதும், தமிழரசுக் கட்சியும் (கூட்டணியும்) காட்ட முயன்ற இன ஒற்றுமையின் வறுமையையே புனலானக்கியது. 1983 வன்முறையின் பின்னரே வடக்குக் கிழக்கின் தமிழ் மக்கள் ஒன்றுபட்டுப் போராடுவதற்குச் சாதகமான நிலமை உருவானது.

தமிழ் இன விடுதலைக்கான ஆயுதமேந்திய போராட்டம் விரிவு பெற்ற சூழ்நிலையிற் கூட, அதற்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களது ஆதரவின் வரையறைகளைப் போராட்ட இயக்கங்கள் விளங்கிக் கொள்ள இயலாமற் போனதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆயினும், வட கிழக்கு முஸ்லிம்கள் தமிழ்த் தேசத்தின் ஒரு பகுதியினர், எனவே அந்த விடுதலை போராட்டத்தை நிபந்தனையின்றி ஆதரிக்கவும் விடுதலை இயக்கங்களின் ஆணைகளை ஏற்கவும் கடமைப்பட்டவர்கள் என்ற மனோபாவம் இவற்றுள் முக்கியமானது. இதன் விளைவாகவே, தமிழ் முஸ்லிம் உறவுகள் கிழக்கு மாகாணத்திற் சீர்குலைய நேர்ந்தது. இதை எவ்வாறு சீர் செய்வது என்ற தெளிவு தமிழ்த் தேசிய வாதிகள் பலருக்கு இன்னும் இல்லை. இன்றுங்கூட, முஸ்லிம்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதி என்று வாதிப்போர் உள்ளனர். அதேவேளை, இந்தப் பிரச்சனையை எளிதாகத் தீர்க்கும் முறையில், முஸ்லிம்கள் ஒரு தேசம் என்று, முஸ்லிம் அரசியற்கட்சிகள் கூடக் கூறத் துணியாதவாறு, வாதிக்கிற முன்னாள் விடுதலைப் போராளித் தலைவர்களும் இருக்கிறார்கள்.

முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தனித்துவத்தை ஏற்று, அவர்களது தேவைகளைத் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயத்துக்கான போராட்டத்துடன் இணைத்துப், பிரச்சனைகளை அணுகும் மனப்பக்குவம் எந்த விடுதலை இயக்கத் தலைமையிடத்தும் இது வரை காணப்படவில்லை. எல்லாருக்காகவும் தமது குரலிற் பேசும் மனோபாவம் இன்னமும் தொடர்கிற காரணம், தமிழ்த் தேசியவாதத்தின் சிந்தனை மரபுடன் தொடர்புடையது.

ஆயுதமேந்திய போராட்டத்தை யொட்டிய நெருக்கடிக்குத் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் அதிகளவில் முகங்கொடுக்க நேரிட்டது. கல்வி, உத்தியோகத்துறைகளிற் காட்டப்பட்ட பாரபட்சம், உயர்சாதியினரையும், குறிப்பாக, நடுத்தர வர்க்கத்தினரையுமே பாதித்தது. அரசாங்கத்தின் படைகள் ஏற்படுத்திய நெருக்குவாரமோ, சகல தமிழர்களது இருப்பையும் அவர்களது மண்ணிலேயே கேள்விக்கு உட்படுத்தியது. தப்பி ஓடும் வசதிகூடத் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு அதிகம் இல்லாததால், விடுதலை இயக்கங்களில் இணைந்து போராடும் நிலை அவர்கட்கே அதிகம் ஏற்பட்டது. நெருக்கடியின் உக்கிரம் அதிகமாக, ஆயுதமேந்தியோரில் தாழ்த்தப்பட்ட சாதி இளைஞர்களது விகிதாசாரமும் அதிகமாகியதை நாம் அறியலாம்.

எவ்வாறாயினும் குறிப்பிட்ட சில இயக்கங்களுட் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தோரின் எண்ணிக்கை அதிகமாகயிருந்ததன் காரணமாக, 1987ல் அவர்கள் சம்பந்தப்பட்ட இயக்கங்களிடம் அதிகாரம் வந்தபோது, பழைய சாதியக் கொடுமைகட்கெதிராகப் பழிவாங்கும் முனைப்புடன் சிலர் செயற்பட்டதால், அரசியல் ரீதியாக அவர்கள் சார்ந்த இயக்கம் வீண் பகைமையைச் சம்பாதித்ததையும் நாம் அறிவோம். ஆயினும் சாதியத்தைத் தளரவைக்க அந்த நடவடிக்கைகள் உதவவில்லை. 1990களில் அரச படைகட்கு எதிராக நின்று போராடும் சக்திகளிடையே, தாழ்த்தபட்ட சாதியோர், பெண்கள் ஆகியயோரது தொகை அதிகமாகியதன் விளைவாகச், சமூகரீதியாக சில முக்கியமான மாற்றங்கள் இயலுமாயின. ஆயினும், தமிழ்த் தேசியம் பேசும் மேட்டுக் குடிகளிடையேயுள்ள சாதித் தடிப்பு இன்னமும் அகலவில்லை என்பது கசப்பான ஒரு உண்மை. அவர்கள்




முஸ்லிம்களதும் மலையகத் தமிழரதும் தனித்துவத்தை ஏற்று, அவர்களது தேவைகளைத் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணயத்துக்கான போராட்டத்துடன் இணைத்துப், பிரச்சகைளை அணுகும் மனப்பக்குவம் எந்த விடுதலை இயக்கத் தலைமையிடத்தும் இது வரை காணப்படவில்லை. எல்லாருக்காகவும் தமது குரலிற் பேசும் மனோபாவம் இன்னமும் தொடர்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலங்காலமாகப் பிளவுண்ட ஒரு சமுதாயம் ஒரே குரலிற் பேச முடியாது என்பதையும், அவ்வாறு ஒரு குரலை உருவாக்க முனையும் போது, பெரும்பாலோரது நலன்கள் புறக்கணிக்கப்படக் கூடும் என்பதையும் நாம் மனதிலிருத்துவது அவசியம். மக்கள் தமது குரலை உயர்த்திப் பேசும் வரை அவர்களது குரல்கள் களவாடப்படவும் பறிக்கப்படவும் நேரும்.*



தமிழர்களது விடுதலைப் போராட்டம், தமிழர் அனைவருக்காகவும் பேசும் அவர்களது குரலை மறித்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள். இதன் விளைவாகவே, "இதுவரை போராடியது போதும், இனிச் கெஞ்சி மன்றாடியாவது சமாதானத்துக்கு வருவோம்" என்றவாறான வாதங்கள் சிலரால் முன்வைக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் ஒரு வெகுஜன இயக்கமல்ல. அவர்களது அணுகுமுறை ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதுமல்ல. போராட்டச் சூழலும் அதன் பல்வேறு நிர்ப்பந்தங்களுமே அவர்களைப் பொதுமக்களது கருத்தை மதிக்குமாறு செய்து வந்துள்ளது. அவர்களது அணுகுமுறை அடிப்படையில் ராணுவப் பார்வையை உடையது. அவர்களது தவறுகளை விட அதிகளவில் அரசாங்க படைகளது கொடுமைகள் மக்களைப் பாதிக்கின்றன. நியாயமான தீர்வு ஒன்றை இயலாதவாறு செய்வதில் இலங்கை அரசாங்கங்களது பங்கே பெரியது. இச் சூழலிற்,போர் மூலமே தீர்வை அணுகும் நிலை மேலும் தொடர்கிறது. ஆயினும், போர் தீர்வைக் கொண்டுவரப் போவதில்லை. இலங்கை மக்கள் அனைவருமே சமாதானத்தை நாடுகிறார்கள். ஆயினும் அரசியற் தலைமைகள் அதற்கு மாறாகவே செயற்படுகின்றன. இது நமது சனநாயகம் எவ்வளவு போலியானது என்பதையே காட்டுகிறது. போரின் முடிவு மேலும் மேலும் சனநாயகத்தின் மீதே தங்கியுள்ளது. இந்த வகையில், சமாதானத்துக்கான ஒரு வலிய சன நாயக இயக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது.

அரசின் இன ஒழிப்பு யுத்தம் உள்ள வரை, அதற்கு எதிரான போராட்டமும் ஆயுதமேந்தும் தேவையும் தவிர்க்க முடியாதவை. அதே வேளை, நாட்டின் அரசியலைச் சனநாயகப்படுத்தி அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தும் ஒரு புதிய சனநாயக இயக்கத்துக்குமான தேவை அதிகரித்து வருகிறது. தென்னிலங்கையில் இது சமாதான இயக்கமாகவும் வடக்கு-கிழக்கு பகுதியில் இது இனவிடுதலை இயக்கத்தைச் சனநாயகப்படுத்தும் நடவடிக்கையாகவும் விரிவுப் படுத்தப்பட வேண்டி உள்ளது.

தேசிய இனப் பிரச்சனை ஆயுதத் தீர்வையே நாடும் வரை, தீர்வு பற்றிப் பேசுவோர் போரிடும் படைகள் மீது ஆளுமை உள்ளோராக இருப்பது தவிர்க்க இயலாதது. அவர்களது நலன்கள் மக்களது நலன்களாக இல்லாதளவிற், போர் நீடிக்கும் என்பதை நாம் உணர்வோம். கடந்த பதின்மூன்று ஆண்டுக் காலப் போரினின்று நாம் கற்க வேண்டிய பாடங்களுள் முக்கியமானது சனநாயகம் தொடர்பானது. அது இல்லாமல் எந்தத் தேசிய இனத்துக்கும் நன்மையில்லை.

காலங்காலமாகப் பிளவுண்ட ஒரு சமுதாயம் ஒரே குரலிற் பேச முடியாது என்பதையும், அவ்வாறு ஒரு குரலை உருவாக்க முனையும் போது, பெரும்பாலோரது நலன்கள் புறக்கணிக்கப்படக் கூடும் என்பதையும் நாம் மனதிலிருத்துவது அவசியம். மக்கள் தமது குரலை உயர்த்திப் பேசும் வரை அவர்களது குரல்கள் களவாடப்படவும் பறிக்கப்படவும் நேரும். ஒரே குரலிற் பேசுவதை வலியுறுத்துவோர் இன்றுவரை அந்த முயற்சியின் தீய விளைவுகளை எண்ணிப் பார்ப்பது நல்லது. பரந்து பட்ட மக்களின் பல்வேறு குரல்களிடையே உள்ள ஒற்றுமைகளை அடையாளங் கண்டு அதை வலியுறுத்துவதன் மூலமே நியாயத்துக்கான போராட்டத்தை வலிமைப்படுத்தவும் அதற்கான ஆதரவை விரிவு படுத்தவும் இயலும் .

*-3.11.96-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிசும் பொதுமக்களும்

*தமது அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்காக 1995ம் ஆண்டுக்கு முன் வறிய மக்கள் பெற்று வந்த அரைகுறை பொதுநலப் பணத்தில் பெருந்தொகையை வெட்டி அந்தப் பணத்தை பொலிஸுக்கு வழங்கும் நடவடிக்கையைத்தான் இன்றைய ஒன்ராறியோ மாகாண அரசும் செய்து வருகிறது. இத்தனைக்கும் இந்த மக்களை "சமூகநலப் பணத்தைப் பெறும் சோம்பேறிகள்" என்றுதான் இந்த அரசாங்கங்கள் அழைத்து வருகின்றன.*

எம். சிவகுருநாதன்

மெற்றோ (மாநகர) சபை தனது 1997ம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்திலிருந்து 50 வீதத்தை பொலிஸ் இலாகாவிற்கு ஒதுக்கியிருக்கிறது. இன்னொரு விதமாகக் கூறுவதெனில் மெற்றோ மாநகர எல்லைக்குள் வசிக்கும் மக்களால் சொத்து வரியாக மெற்றோவுக்கு கொடுக்கப்படும் ஒவ்வொரு டொலரிலும் 50 சதம் பொலிஸிற்க்கு வழங்கப்படுகிறது. சொத்து வரி எனும் போது மெற்றோ மாநகரில் வாழும் ஒவ்வொருவரும் அவர் சொந்த வீடு வைத்திருந்தாலென்ன, வாடகை வீட்டில் (அப்பாட்மென்ற் உட்பட) இருந்தாலென்ன, தான் வாழும் வீட்டினது சார்பில் அல்லது தொழில் நடாத்தப் பாவிக்கப்படும் கட்டிடத்தின் சார்பில் செலுத்தி வரும் வரியாகும்.

1990 ம் ஆண்டில் மெற்றோ மாநகர சபை தனது வரவு செலவுத் திட்டத்திலிருந்து 40 வீதத்தை தான் பொலிஸ் இலாகாவுக்கு வழங்கியது. ஆனால் 1997ல் இது 50 வீதம் ஆகக் கூடியுள்ளதை கவனத்தில் எடுத்தாக வேண்டியுள்ளது. 1997ம் ஆண்டில் மெற்றோ மாநகரசபையிடமிருந்து பொலிஸிற்க்கு 494 மில்லியன்கள் கிடைக்கவுள்ளன. அதேவேளை ரொரன்ரோ மாநகர எல்லைக்குள் வாழ்ந்து வரும் மக்களுக்கு மெற்றோ மாநகரசபையால் வழங்கப்பட்டு வரும் சேவைகளுக்கு ஒதுக்கி வந்த பணத்தின் தொகையில் 5 வீதம் தொடக்கம் 10 வீதம் வரையான வெட்டு விழுந்துள்ளது.

இதைவிட பொலிஸ் இலாகாவின் அதிபர், தங்களுக்கு 494 மில்லியன்கள் போதாது, 499 மில்லியன்கள் வேண்டும் என்று மெற்றோ மாநகர சபை அங்கத்தவர்களை கேட்டு அவர்களுக்கு நெருக்கடி கொடுக்கு முகமாக ஒரு பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார். இதற்கு ஆதரவாக 22 பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவு அமைப்புக்கள் பொலிசார் கேட்பதை கொடுக்குமாறு கோரியுள்ளன. அல்லாவிடின் அதிகரிக்கும் வன்முறையை கட்டுப்படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளன. (பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் பொலிஸாரின் குணம் தெரியாமலா இவ்வமைப்புக்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளன?)

பொலிசாருக்கு இன்னும் 6 வீதம் சம்பள உயர்வு கோரும் பொலிஸ் சங்கம் ஒருபுறம். இதுதொடர்பான முடிவு விரைவில் எடுக்கப்படும் எனஅறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவ்வளவு தொகையும் மக்களிடமிருந்து அறவிடப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சக்கணக்கான வரிப்பணத்திலிருந்துதான் பொலிஸிற்க்கு வழங்கப்படுகிறது. அதே வேளையில் தமது அடிப்படை தேவையை பூர்த்தி செய்வதற்காக 1995ம் ஆண்டுக்கு முன் வறிய மக்கள் பெற்று வந்த அரைகுறை பொதுநலப் பணத்தில் பெருந்தொகையை வெட்டி அந்தப் பணத்தில் ஒரு பங்கை பொலிஸுக்கு வழங்கும் நடவடிக்கையைத்தான் இன்றைய ஒன்ராறியோ மாகாண அரசும் செய்து வருகிறது. இத்தனைக்கும் இந்த மக்களை "சமூகநலப் பணத்தைப் பெறும் சோம்பேறிகள்" என்றுதான் இந்த அரசாங்கங்கள் அழைத்து வருகின்றன. உண்மையென்னவெனில், ஒன்ராறியோவில் இருந்து நூற்றுக்கணக்கான பாரிய தொழில்களை மெக்சிக்கோவுக்கு இடம் மாற்றியமையால்தான் லட்சக் கணக்கான மக்கள் தமது வேலைகளை இழந்து சமூகநலப் பணத்தில் தமது வாழ்க்கையை நடாத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டனர்.

இது இப்படியிருக்க, இவ்வளவு தொகையான பணம் பொலிஸ் இலாகாவினால் எப்படி செலவழிக்கப்படுகிறது? பொலிஸாருக்கு உயர்ந்த சம்பளம், சலுகைகள், வாகனங்கள் போன்ற ஆடம்பரமான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. பொலிஸ் இலாகாவிற்கு சொந்தமான நூற்றுக்கணக்கான குதிரைகளுக்கு மட்டும் பல இலட்சம் டொலர்கள் செலவழிக்கப்படுகின்றன. வெறும் காட்சிக்காக பாவிக்கப்படும் இந்தக் குதிரைகளின் தொகையைக் குறைத்தாலே அதிலிருந்து பெறக்கூடிய பணத்தை கொண்டு உறைவிடமில்லாமல் வீதிகளில் படுத்து குளிரில் மரணமாகும் மக்களுக்கு உணவு, இடம் கொடுக்க முடியும். பட்டினியிலும் வறுமையிலும் வாழும் குழந்தைகளை காப்பாற்றலாம். அவசர சிகிச்சைக்கு அநுமதிக்கப்பட்டு பல மணித்தியாலங்கள் காத்திருப்பதினால் பாதிக்கப்படும் நூற்றுக்கணக்கான நோயாளிகளைக் காப்பாற்ற முடியும். ஆனால் நடப்பதோ வேறு.

இத்தனை வசதிகளை மக்களின் இலட்சக் கணக்கான வரிப்பணத்தில் பெற்று வரும் பொலிஸ் என்ன செய்கிறது? 1996ல் பூர்வீகக்குடி, கறுப்பினம், தென்னாசிய இனம் போன்ற நிறத்தவர்களான 6 பொதுமக்களை பொலிசார் சுட்டுக் கொன்றுள்ளனர். கொல்லப்பட்டவர்கள் வேற்று நிறத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலோ? 1997லிலும் இதே நிலை தொடர்கிறது. தனது 16 வயது மகன் Faraz Suleman கொல்லப்பட்டது ஏன்? என்ற கேள்வியை கேட்டு பாராளுமன்ற வாசலிலும், பொலிஸ் நிலையத்தின் முன்னாலும், "பொலிஸையும், இந்த அரசையும் நம்பினேனே, அதற்கா எனக்கு இந்தத் தண்டனை" என்று கதறிய தாயின் குரலுக்கு நீண்ட நாட்களின் பின் சமீபத்தில் பதில் கிடைத்திருக்கிறது. சம்பந்தப்பட் போலிஸ் உத்தியோகத்தர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான பூர்வாங்க வழக்கு விசாரணை நியூமார்க்கட் நீதி மன்றத்தில் யூன் 9ம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

1978ம் ஆண்டிலிருந்து 17 கறுப்பினத்தவர்கள் பொலிஸாரினால் சுடப்பட்டுள்ளார்கள். அவர்களில் 11பேர் மரணமடைந்தனர். 1995 புரட்டாதி மாதம் 4ம் திகதி பூர்வீகமக்கள் "இப்பவாஸ்" என்ற இடத்திலுள்ள தமது பூர்வீக நிலத்தை மீளப் பிடித்துக் கொண்டபோது வெறுங்கையுடன் நின்ற பூர்வீக ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் மீது பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியது. இதில் டட்லி ஜோர்ஜ் என்ற பூர்வீகக் குடிமகன் கொல்லப்பட்டான். இதில் சம்பந்தப்பட்ட போலிஸ் அதிகாரி குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார். பொதுமக்களினால் பாரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டபோதும், மைக் ஹரிஸ் அரசாங்கமோ இது தொடர்பாக எந்தப் பகிரங்க விசாரணையும் நடாத்த மறுத்து வருகிறது. நாஜிஅமைப்பை உருவாக்கிய சுண்டல் (Zundel) குழுவினருக்கு பொலிஸார் (R.C.M.P) பண உதவி வழங்கியதும் அனைவருக்கும் தெரிந்ததே.

அரசாங்கம் என்பது மக்களின் வரிப்பணத்தை அறவிட்டுத்தான் தனது காரியங்களை செய்கிறது. மக்களின் வரிப்பணத்தில் தான் பொலிசும் இயங்குகிறது. மக்களின் வரிப்பணம் என்பது மக்களின் உழைப்பு. அது மக்களுக்குத் தெரியாமலே அவர்களின் வாடகை, பொருள் நுகர்வு, சேவைக்காக வழங்கப்படும் பணம் முதலிய வற்றினூடாக அரசாங்கங்களினால் வரியாக அறவிடப்படுகிறது, வரிசெலுத்துபவர்களுக்கு நீதியைத் தட்டிக் கேட்க உரிமையுண்டு. அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும் உரிமையுண்டு.


●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருடம் கனடா வருகை தந்திருந்த 'நந்தலாலா', 'தீர்த்தக்கரை' போன்ற மலையகத்தின் இதயத்துடிப்பான சஞ்சிகைகளின் ஆசிரியர்களில் ஒருவரும் சட்டத்தரணியுமான திரு. ஜோதி குமாருடன் ஒரு சந்திப்பு.

பேட்டி கண்டவர் வ.ந.கிரிதரன்



ஒரு சஞ்சிகை தேவையென்ற கருத்து உருவாயிற்று. 'காலநிர்ப்பந்தமா' என்று நீங்கள் கேட்கலாம். ஆம், கால நிர்ப்பந்தம்தான் காரணம். ஆனால், கால நிர்ப்பந்தமென்பது மலையகமென்றதொரு யதார்த்தத்திற்குள் மட்டும் எல்லைப்படுத்தப் படவில்லை. பல்வேறு கூறுகள் அதனை தீர்மானித்தன, நிர்ப்பந்தித்தன.

◆? திரு. ஜோதி குமார் நீங்கள் ஆரம்பத்தில் 'தீர்த்தக்கரை' சஞ்சிகையை வெளியிட்டீர்கள். தற்போது 'நந்தலாலாவை' வெளியிடுகின்றீர்கள். ஏன் 'தீர்த்தக்கரை'யென்ற பெயரிலிருந்து 'நந்தலாலா' என்ற இந்தப் பெயர் மாற்றம்?

☞ தீர்த்தக்கரை என்ற சஞ்சிகை நண்பர்களால் ஒன்று சேர்ந்து வெளியிடப்பட்டது. 1983 வன்செயலின் பின்னர் தீர்த்தக்கரை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பலர் அதிலிருந்து பிரிந்து சிதறுண்டதொரு நிலையில் .... அவர்களனைவரையும் மீண்டும் ஒன்றிணைத்து அதே பெயரில் சஞ்சிகையை வெளியிடுவது முடியாததொரு காரியமாகவிருந்தது. எனவே அதில் ஈடுபட்டிருந்த சில நண்பர்கள் தீர்த்தக்கரை வெளிவராரத நிலையில் பிறிதொரு சஞ்சிகையை ஆரம்பிக்கலாமென்று கருதினார்கள். அதன் விளைவாக உருவானதுதான் நந்தலாலா. இரண்டையும் ஒரே சஞ்சிகையென்று கூறமுடியாது. இரண்டும் வேறு வேறான சஞ்சிகைகள். ஆனால் ஒரே இலக்கிய தர்மத்தை, ஒரே போக்கினை கொண்டவையென கூறலாம்.

◆? ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த அளவில் 'நந்தலாலாவின்' பங்களிப்பு எத்தகையதாகயிருக்க வேண்டுமெனக் கருதுகின்றீர்கள்? மலையக இலக்கியக் களத்தையே பின்னணியாகக் கொண்டு இயங்கவேண்டுமெனக் கருதுகின்றீர்களா? அல்லது....


☞ அது சகல சமூககங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. மலையகத்தை மாத்திரம் உள்ளடக்க வேண்டுமென்ற அவசியமில்லை, மலையகம் என்ற எல்லையைத் தாண்டிவரவேண்டிய நிர்ப்பந்தமிருக்கின்றது. அதனால், மலையகமென்ற அதாவது அதனுடைய யதார்த்தப்போக்கினை, அதனுடைய குணம்சங்களை வெளிப்படுத்தும் அதே சமயம், பல சமூகங்களிற்கிடையே புரிந்துணர்வினை தோற்றுவிக்குமொரு சஞ்சிகையாகவும் இலக்கியப் பாலமாகவும் இருக்கவேண்டுமென எண்ணுகின்றோம்.

◆? உங்களுடைய எழுத்துலக அனுபவத்தை சிறிது கூறமுடியுமா? இதுவரை கால எழுத்துலக, இலக்கிய அனுபவங்களின் விளைவாகத் நீங்கள் எத்தகைய உணர்வினைக் கொண்டிருக்கின்றீர்கள்?

☞ பொதுவாகத் தீர்த்தக்கரை, நந்தலாலாவில் செயற்பட்டவர்கள், செயற்படுகின்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லோருமே ஒரு புரிந்துணர்வுடன் செயற்பட்டவர்கள், செயற்படுகின்றவர்கள். உதாரணமாக, எம்மிடம் பிரசுரத்திற்கென வரும் படைப்புக்களை நாம் பொதுவாகத் திருத்துவதில்லை. பொதுவாக, அவற்றை எழுதியவர்களைக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்து, அவற்றின் குறை நிறைகளை விவாதித்து, அப்படைப்புக்களை அப்படைப்பாளிகளினூடாகவே எவ்வளவு முன்னேற்ற முடியுமோ, அவ்வளவு தூரம் முன்னேற்றுவதற்கு முயல்வோம். அது ஒரு நல்ல அம்சம். இரண்டாவது ,படைப்புக்களைத் தேர்ந்தெடுப்பதில் சரியான கவனமாகவிருப்போம். வாசகர்களிற்கு அவை பிடிக்குமாவென்பது தெரியாது. ஆகவே, பல்வேறுபட்ட வாசகர்களிடமும் அவற்றை வாசிக்க கொடுப்போம். அது சாதாரண இளைஞனிலிருந்து சாதாரண டீச்சர் ஆக எல்லாவகையானவர்களிடமும் வாசிக்கக் கொடுப்போம். அவர்கள் அபிப்பிராயம் சொல்லும்பொழுது விமர்சனரீதியாக அபிப்பிராயம் சொல்லமாட்டார்கள். சும்மா சொல்வார்கள், பிடித்திருக்கின்றதா இல்லையாவென்று . அடுத்த கேள்வியென்ன கேட்போமென்றால், அப்படைப்பு எவ்விடத்தில் தொய்வது போல் படுகின்றது என்பதுதான். இதற்கு அவர்கள் ஏதாவது சொல்லக்கூடும். இவற்றிலிருந்து தான் நாம் சில விடயங்களைக் கிரகித்து, சரி இந்தப்படைப்பைப் போடலாமா, போடக்கூடாதா, எவ்வாறு திருத்தப்படவேண்டும் போன்றவற்றைத் தீர்மானிப்போம். இப்படியான தொரு போக்கு எம்மிடையே நிலவுகின்றது. இதனால் நந்தலாலாவில் நல்ல படைப்புக்கள் வெளிவருவதாக நீங்கள் கருதினால் அதற்குரிய 'கிரடிட்'டை இந்த மாதிரி வாசகர்களிற்குத்தான் நாம் கொடுக்கவேண்டும். அவர்களிற்கூடாகத்தான் நாமும் படிக்கின்றோம். நாங்களெல்லாம் பெரிய கலைஞர்களென்ற எண்ணமே எம் நண்பர்களிடையே இருக்கவில்லை. இதுவுமொரு நல்ல விஷயம்.

அடுத்ததென்னவென்றால் எல்லாருமே Committed. உதாரணமாக 'தீர்த்தக்கரையோ' 'நந்தலாலாவோ' அவை வந்த காலகட்டங்களில், மலையகத்தைப் பொறுத்தவரையில் போர்ப்பிரகடனங்களாகத்தான் வெளிவந்தன. மலையகத்தைப் பொறுத்தவரையில் தொண்டமானிற்கெதிராக விமர்சனங்கள் வைக்கமுடியாததொரு நிலையிருந்தது. இந்நிலையில் தொண்டமானிற்கெதிராகக் காத்திரமான விமர்சனங்களை நந்தலாலா முன்வைத்தது. மலையகம் பற்றிய வரலாறு சம்பந்தமான ஆங்கில நூலினை நடேசன் வெளியிட முயன்றபொழுது – அப்பொழுது ஆட்சியிலிருந்தது ஐ.தே.க– பலரால் அவரிற்கு தொல்லைகள் ஏற்பட்டன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்கெதிரான விடயங்கள் பல இருப்பதாகக் கூறி எச்சரிக்கப்பட்டார். இந்நிலையில் நடேசன் என்னுடன் தொடர்பு கொண்டு அந்நூலினை இருபாகங்களாக வெளியிடலாமேயெனக் கருத்து வெளியிட்டார். 'நந்தலாலா' நண்பர்களினால் அதனை ஏற்க முடியவில்லை 'அப்படி பாதிப்பு வந்தால் வெளியிடும் நமக்குத்தானே முதற்பாதிப்பு' என்று கூறினார்கள். இவ்விதமாக பிரச்சனைகளிற்குத் துணிச்சலுடன் முகம் கொடுக்கின்ற பண்பு அந் நண்பர்களிடமிருந்தது. இதனால் உக்கிரமான இலக்கியத்தையோ எழுத்துக்களையோ தரக்கூடியதொரு களத்தை எம்மால் அமைக்கக் கூடியதாகவிருந்தது. இது எனது இலக்கிய அனுபவத்தில் நல்லதொரு விஷயம்.

*'தீர்த்தக்கரையோ' 'நந்தலாலாவோ' அவை வந்த காலகட்டங்களில் , மலையகத்தைப் பொறுத்தவரையில் போர்ப்பிரகடனங்களாகத் தான் வெளிவந்தன. மலையகத்தைப் பொறுத்தவரையில் தொண்டமானிற்கெதிராக விமர்சனங்கள் வைக்கமுடியாததொரு நிலையிருந்தது. இந்நிலையில் தொண்டமானிற்கெதிராகக் காத்திரமான விமர்சனங்களை நந்தலாலா முன்வைத்தது.*

♦? நல்லது ஜோதிகுமார், இவ்விதமாகப் பாடுபட வேண்டு மென்றதொரு எண்ணம் எவ்விதம் தங்களிடத்தே உருவானது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ தீர்த்தக்கரை வெளிவந்த காலகட்டம் 1980 தான். அதே காலகட்டத்தில் வெளிவந்த முக்கிய சஞ்சிகைகளாகக் 'குமரன்' ....போன்ற வற்றைக் கூறலாம். செ.கணேசலிங்கனின் 'குமரன்' சஞ்சிகையைத்தான் கூறுகின்றேன். இது இடதுசாரிப் போக்கினைக் கொண்டது. அதே சமயம் மறுபுறத்தே 'பூரணி' 'அலை' போன்றன வெளிவந்தன. அக்காலகட்டத்தில் இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களிற்கெதிராக நிறைய விமர்சனங்கள் வெளிவந்தன. 'கலை கலைக்காக' என்ற விமர்சனக் கோட்பாடு ஒரு புதிய வடிவத்தை எடுக்கத் தொடங்கியது. அது எத்தகைய வடிவமென்றால்... 'மார்க்ஸியத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் உங்கள் படைப்புக்களில் அழகியல் போதாது' என்றார்கள். அதாவது 'கலை கலைக்காக' என்பதன் புது வடிவம் தான் இது. இப்ப என்னவென்றால் 'மார்க்ஸியத்தை ஏற்றுக்கொள்கின்றோம், ஆனால் உங்கள் படைப்புக்களை நிராகரிக்கப் போகின்றோம்' என்பது போன்ற போக்கு ஏற்பட்டது. அந்த நேரத்தில் எமக்குக் 'குமரன்' எழுத்துக்களுடன் அவ்வளவு உடன்பாடு இருக்கவில்லை. 'அதன் கலாபூர்வமான வெளிப்பாடு போதாது. பிரச்சாரத்தன்மையாகத் தெரிகின்றதென எம்மில் பலபேர் நினைத்தார்கள். இந்நிலையில் புதியதொரு சஞ்சிகையை வெளியிடவேண்டிய தேவையிருந்தது. அதற்காகத்தான் 'தீர்த்தக் கரை' யென்ற சஞ்சிகையை முக்கியமாக வெளிக் கொணர்ந்தோம். பல கூறுகள் ஒன்றாக இணைந்திருக்கலாம். இது ஒரு கூறு. இன்னும் பல வேறு கூறுகள் இருந்திருக்கலாம். அதாவது 'தீர்த்தக்கரையின்' தோற்றத்திற்கான கூறுகளைக் கூறுகின்றேன். உதாரணமாக, மலையக சமூக உருவாக்கம், இனத்துவ அடையாளங்கள் போன்றவற்றைக் கூறலாம்.

நண்பர்கள் எல்லோரிற்கும் பாரதியாருடன் கூட நெருக்கம். பாரதியைப் பெரிதும் மதிப்பவர்கள். இந்த இணைப்புகள் பற்றிய கேள்விகள், மலையக யதார்த்தத்தை எந்த அளவிற்கு வேலுப்பிள்ளைக்குப் பிறகு படைப்பாளிகள் முன்வைத்தார்கள் என்பன போன்ற கேள்விகள் எல்லாம் எம்மிடையே எழுந்தன. இவையெல்லாம், இக்காரணங்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்ததினால் ஒரு சஞ்சிகை தேவையென்ற கருத்து உருவாயிற்று. 'காலநிர்ப்பந்தமா' என்று நீங்கள் கேட்கலாம். ஆம், கால நிர்ப்பந்தம்தான் காரணம். ஆனால், கால நிர்ப்பந்தமென்பது மலையகமென்றதொரு யதார்த்தத்திற்குள் மட்டும் எல்லைப்படுத்தப் படவில்லை. பல்வேறு கூறுகள் அதனை தீர்மானித்தன, நிர்ப்பந்தித்தன.

◆? அண்மைய ஈழத்து மலையக இலக்கியத்தைப் பொறுத்தவரையில் ஒரு விழிப்புணர்வினைக் காண முடிகின்றது. பல எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் மலையகத்தின் பங்களிப்பை பல பத்திரிகைகளில் வெளிப்படுத்தி வருகின்றார்கள. மு. நித்தியானந்தனைக் குறிப்பிடலாம். 'மலையகச் சிறுகதைகள்', 'தீர்த்தக்கரைச் சிறுகதைகள் போன்ற காத்திரமான சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. பொதுவாக, அண்மையில் ஈழத்திலிருந்து வெளிவந்த தமிழ்ப்படைப்புகளுடன் ஒப்பிடுகையில், மேற்படி மலையகப் படைப்புக்கள் சற்று காத்திரமானவையாகத் தென்படுகின்றன. மலையகத் தமிழிலக்கியம் ஒரு விதமான உற்சாக நடைபோடுவதாகத் தெரிகின்றது. இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள் ஜோதி?

☞ மலையக இலக்கியம் மாத்திரம் மற்றையவற்றுடன் ஒப்பிடும்பொழுது உற்சாகமாகவுள்ளதென்பதை ஏற்றுக் கொள்வது கஷ்டம். மலையக இலக்கியத்திலும் இருவகையான போக்குகளையும் காணலாம். உற்சாகமான



மலையக இலக்கியம் மாத்திரம் மற்றையவற்றுடன் ஒப்பிடும்பொழுது உற்சாகமாகவுள்ளதென்பதை ஏற்றுக் கொள்வது கஷ்டம். மலையக இலக்கியத்திலும் இருவகையான போக்குகளையும் காணலாம். உற்சாகமான போக்கும் உண்டு, உற்சாகம் குன்றிய போக்கும் உண்டு. மலையகத்தில் சில போக்குகள் உள்ளன. அதாவது இன்றைய இலக்கியத் தளத்தில் நடக்கின்ற எல்லா முரண்பாடுகளையும் உள் வாங்க முடியாததொரு நிலைமை.



போக்கும் உண்டு, உற்சாகம் குன்றிய போக்கும் உண்டு. மலையகத்தில் சில போக்குகள் உள்ளன. அதாவது இன்றைய இலக்கியத் தளத்தில் நடக்கின்ற எல்லா முரண்பாடுகளையும் உள் வாங்க முடியாததொரு நிலைமை காணப்படுகின்றது. இன்றைய தமிழ் இலக்கியம் எந்தெந்த நெருக்கடிகளினூடாக வந்து சேர்ந்துள்ளது? இன்று இருக்கின்ற இலக்கியத் தளத்தில் காணப்படுகின்ற முரண்களிற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி இருக்கின்றதா? முரண்களின் தொடர்ச்சியா? இவற்றின் சாராம்சத்தை உள்வாங்க முடியாததன்மை மலையகத்தில் இருக்கின்றது. அதாவது மலையகத்தின் சில இலக்கியப் போக்குகளில் உள்ளன. அதே சமயத்தில், எல்லாவற்றையும் மிகக் கவனமாக ஆராய்ந்து, அவதானித்து அதன் சாராம்சத்தைப் புரிந்து, அதன் நிலையைச் சரியாக வரையறை செய்து, அதற்கூடாக ஒரு காத்திரமான இலக்கியப் போக்கினை அடுத்தப்படிக்கு முன்னெடுக்கும் தன்மையும் காணப்படுகின்றது. எனவே இரண்டு அம்சங்களுமுள்ளன. இது தவிர, மலையகம் என்று ஜீவிக்கும் நிலை, அதனுடைய இருப்பு – அதாவது அது ஒரு சமூகவியற் கேள்வி– அது எத்தகையதொரு ஜீவனை இவர்களிற்குள் செலுத்துகின்றது? இவையெல்லாம் சேர்ந்துதான் உற்சாகம், உற்சாகமின்மை இவற்றிற்கெல்லாம் தலைமை வகிக்கின்றன. உதாரணமாக, முக்கியமாக நான் கூறுவதென்னவென்றால்... ஒரு கட்டத்தில் வடக்கில் நல்ல கவிஞர்கள் தோன்றினார்கள். ஜெயபாலன் எனக்கு மிகவும் பிடித்த கவிஞன், அவருடையதொரு கவிதை , வன்னியைப் பற்றியது. 'எங்கள் மண்ணும் எங்கள் முகமும்' என்ற கவிதை. அதிகமாக அதுபோன்ற கவிதைகள் தமிழில் தோன்றவில்லையென்றுகூறலாம். 'பாஞ்சாலி சபதம்' மாதிரி சில நெடுங்கவிதைகளைப் பற்றிக் கதைக்கக் கூடும். ஆனால் அது மாதிரியொரு நெடுங்கவிதை இங்கு இன்னொரு தளத்திலை, இன்னொரு பரிமாணத்திலை வந்திருக்கிறது. இதனுடைய தோற்றத்தைக் கவனமாக ஆய்வு செய்தால்... அங்கேயும் அந்த புத்தி ஜீவிகளை, நடுத்தர வர்க்கத்தவர்களை, ஒரு வரலாற்றுக் கட்டம் அப்படியே தூக்கி மக்கள் மத்தியில் வீசியுள்ளது. 'மக்கள் மத்தியில் போய் பிடித்து வா' என்பது போல். எல்லா விழுப்பாடுகளையும் கடந்து போய், அவர்கள் எல்லாவற்றையும் தொட்டு உணர்ந்து ,கிரகித்து உள்வாங்கி, வந்து, கவிதை படிக்கும் போது அது இயற்கையை நேசிக்கிறதாகயிருக்கு, வாழ்க்கையை நேசிக்கிறதாகயிருக்கு, மக்களை நேசிக்கிறதாகயிருக்கு, மக்கள் அவர்களை நேசிக்கிறதாகயிருக்கு. இப்படிப் பல பரிமாணங்கள் கொண்ட படைப்புக்களை அவர்கள் உருவாக்குகின்றார்கள். அது பாரதியாகட்டும், ஜெயபாலனாகட்டும். ஆகவே, இந்தப் போக்கு, அதாவது இத்தகைய புத்திஜீவிகளை, மத்தியதர வர்க்கத்தினரைத் தூக்கி வாழ்க்கையினுள் வீசி, அலைய வைத்து அப்பிடியே கொண்டு வந்து திரும்பச் சேர்க்கின்றபோக்கு....

◆? . ஒரு வித அக்கினிப் பிரவேசம்.

☛ ஆம், இந்தப் போக்கு வடகிழக்கில் இருக்கு. இன்றைக்கு இத்தகைய போக்கு தமிழகத்தில் இல்லை. ஒப்பீட்டளவில், விகிதாசாரத்தில் ஜெயபாலன் போன்றவர்களின் இத்தகைய பண்பு கூடும் பொழுது உற்சாகமான இலக்கியங்கள் வந்து சேரும். அவற்றின் தாக்கங்கள் மறைமுகமாகவிருக்கலாம். நேரடியாகவிருக்கலாம். ஒரு எழுத்தை, கலைஞனை இத்தகைய சமூகவியற்காரணிகளே உருவாக்குகின்றன. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தற்போது மலையகத்தில் நிலவும் சூழலினை,

செ.கணேசலிங்கனின் 'குமரன்' சஞ்சிகை இடதுசாரிப் போக்கினைக் கொண்டது. அதே சமயம் மறுபுறத்தே 'பூரணி' 'அலை' போன்றன வெளிவந்தன அக்காலகட்டத்தில் இடதுசாரி இயக்கங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களிற்கெதிராக நிறைய விமர்சனங்கள் வெளிவந்தன. 'கலை கலைக்காக' என்ற விமர்சனக் கோட்பாடு ஒரு புதிய வடிவத்தை எடுக்கத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகளைக் கவனத்திலெடுக்க வேண்டியிருக்கின்றது.



◆? மலையக மக்களின் பிரச்சனைகள் பற்றி 'மறுமலர்ச்சி' காலகட்ட எழுத்தாளர்களான அ.செ.மு, அ.ந.கந்தசாமி போன்றோர் சிறுகதைகள் படைத்திருக்கின்றார்கள். இவ்விதம் மலையகத்தைச் சேராத எழுத்தாளர்களின் மலையகம் பற்றியப் படைப்புக்களை பதிவு செய்வதுண்டா?

☞ அவர்களுடைய படைப்புக்களை நிச்சயம் பதிவு செய்யவேண்டும் என்ன காரணமென்றால், மலையக இலக்கிய மென்னும்போது இவையெல்லாம் உள்ளடங்கித்தானுள்ளது. அதுதான் மலையக இலக்கியத்தின்வளர்ச்சி. இதனை விளங்கிக் கொள்வது வரப்போகும் எழுத்தாளர்களிற்கு மிகவும் முக்கியமானது. இரண்டாவது, அவர்களது பங்களிப்பை அறிந்து கொள்ளவேண்டும். மூன்றாவது என்னவென்றால், மலையகத்தைச் சாராத எழுத்தாளர்கள் கூட எப்படி மனிதநேயத்துடன் அணுகியிருக்கின்றார்கள், அப்படி அம் மனித நேயத்தை வெளிப்படுத்தும் போது எவ்வளவு தூரம் அதில் வெற்றியடைந்திருக்கின்றார்கள், என்ற கேள்வீளெல்லாம் வரும். அப்படியொரு கோணத்திலிருந்து பார்க்கும்போது கூட பதிவு செய்தலென்பது மிகவும் முக்கியமானதாகின்றது.

◆? இவ்விதம் பிற பிரதேசங்களைச் சேர்ந்த படைப்பாளிகளின் மலையகம் பற்றிய படைப்புக்கள் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமைகின்றன?

☞ நீங்கள் என்ன கேட்கின்றீர்ளென்றால், எழுதலாமா? எழுதக்கூடாதா? என்பதைத் தானே? தலித்திலக்கியத்தைப் பொறுத்த வரையில் எழுதக் கூடாதென்கின்றார்கள். என்ன காரணமென்றால்,பிரச்சினையை பிழையாக வெளிப்படுத்துகின்றார்கள் என்ற நோக்குத்தான். எங்களைப் பொறுத்தவரையில்... யாரும் எழுதலாம். ஏனென்றால், அது ஏகபோக சொத்தல்ல. பிழையாக எழுதினால் அதற்கான விமர்சனமும் வெளிவரும். ஆனால், விஷயம் என்னவென்றால், இவ்விதம் வெளியிலிருந்து வந்து எழுதும் போது, மலையக மக்கள் என்கின்ற சமூகத்தின் உள் விதிமுறைகளை, அதாவது அச் சமூகத்தின் வாழ்வைத் தோற்றுவிக்கும் அந்த நெளிவு சுளிவுகளை, சிலவேளை இவ்விதம் வெளியிலிருந்து வரும் எழுத்தாளர்கள் விட்டு விடுகின்றார்கள். மேலோட்டமாக அவதானிப்புக்களை எழுத முற்படுகின்றார்கள். உதாரணமாக, வெளியிலிருந்து பலர் அட்டைகளைப் பற்றி அதிகம் எழுதியிருக்கின்றார்கள். ஆனால் வேலுப்பிள்ளையைப் பொறுத்த வரையில் அட்டையைப் பற்றியும் குளிரைப் பற்றியும் எழுதினது மிகக் குறைவு. அதிலிருக்கின்ற சில, வாழ்க்கையைத் தோற்றுவித்திருக்கின்ற உன்னதங்களை, மனிதநேயங்களை – அதாவது அவர்களும் மனிதர்கள் தான் என்பதை – இறுக்கிக் காட்டுகின்ற பண்புகளைத் தான் வேலுப்பிள்ளையின் படைப்புக்களில் காண முடியும். அதற்காக நாம் வெளிப்படைப்பாளிகள் மலையகத்தப்பற்றி எழுதக் கூடாதென்று சொல்லக் கூடாது. ஏனென்றால் வேலுப்பிள்ளையும் மனிதன் தான். வெளியிலிருந்து வந்து எழுதியவரும் மனிதர் தான். இரண்டு பேரிற்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால் வேலுப்பிள்ளை நெருங்கின அளவிற்கு மற்றவர்களால் நெருங்கமுடியவில்லை. அதற்கு கொஞ்சக்கலாம் தேவை. கூடக் Commitment தேவை. அவங்களோடு ஒட்டிப் பழகவேண்டிய, சந்தர்ப்ப சூழ்நிலைகளை ஏற்படுத்திக்

இவ்விதம் வெளியிலிருந்து வந்து எழுதும் போது, மலையக மக்கள் என்கின்ற சமூகத்தின் உள் விதி முறைகளை, அதாவது அச் சமூகத்தின் வாழ்வைத் தோற்றுவிக்கும் அந்த நெளிவு சுளிவுகளை சிலவேளை இவ்விதம் வெளியிலிருந்து வரும் எழுத்தாளர்கள் விட்டு விடுகின்றார்கள். மேலோட்டமாக அவதானிப்புக்களை எழுத முற்படுகின்றார்கள்.

●—●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்ளவேண்டியதொரு நிர்ப்பந்தம் தேவை. இவையெல்லாம் இருந்தால், நான் நினைக்கின்றேன், அவர்களும் நல்ல இலக்கியம் செய்வார்கள். உதாரணமாக, மலையகத்திலிருந்து வந்த சில படித்தவர்களும் அந்த மக்களிடமிருந்து அன்னியப்பட்டுவிட்டார்கள். படித்தவர்களின் இத்தகயை அன்னியப்பட்டுப்போகின்ற தன்மையும் மலையகத்தில் உண்டு. அதற்கு நிறைய சமூகவியற்காரணிகள் உண்டு. ஒரு காரணம், நிலம் சொந்தமில்லை. இவ்விதம் அன்னியப் பட்டவர்களும் மலையகத்தைப் பற்றி எழுதும் போது குளிர், அட்டையென்று எழுதிய கதைகளும் உண்டு. ஆகவே இவ்விரண்டு வகையினரிற்குமிடையில் பெரியதொரு வித்தியாசத்தைப் பார்க்கின்றேன். நாங்கள் சொல்லக் கூடுவது என்னவென்றால்... அது எந்த மக்களாகவுமிருக்கலாம். மலையகம் மட்டுமல்ல அது வடகிழக்கு மக்களாகவுமிருக்கலாம். வடக்கு கிழக்கு மக்களைப் பற்றி எழுதும் போது கூட அப்பகுதி எழுத்தாளர்கள் எவ்வளவு தூரம் அம்மக்களுடன் உண்மையில் நெருங்குகின்றார்கள், அம்மண்ணின் ஆழவேரோடு எப்படி அவர்கள் ஆழமாகப் போய்ப் பின்னிப்பிணைகின்றார்கள்.. இவையெல்லாம் கேள்விகள். அந்த அளவிற்கு நீங்கள் போகும் போதுதான் அனுபவங்கள் உங்கள் இதயம் பூராவும், உங்கள் சிந்தனை பூராவும் 'சித்தமும் நீயே, சிந்தனையும் நீயே' என்பது போல் ஒன்றாக ஒட்டி வருகின்றன. அப்படி ஒட்டி வருகையில்தான் எழுத்து வந்து வனப்பாக விழுகின்றது. வனப்பு என்று சொல்லும்போது, வாழ்க்கையில் நம்பிக்கையும், மக்கள் மேல் நேயமும் இவையெல்லாம் ஒத்துவருகின்றன. அதுதான் தேவை. பிரித்துச் சொல்லமுடியாது. 'நீ எழுது' அல்லது 'நீ எழுதாதே' என்று சொல்லுவது 'தப்பு' என்று நினைக்கின்றேன்.

♦? இலக்கியத்தில் அழகியலின் பங்களிப்பு பற்றி உங்கள் எண்ணம் என்ன?

☛ அழகியல் பற்றி நிறைய வாதிக்கப்பட்டிருக்கு. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு அளவுகோல் வைத்திருக்கிறார்கள். இந்த அளவு கோலிற்கு ஒரு சமூகவியற்பின்னணி, நிலைப்பாடு இருக்கின்றதைக் கண்டு கொள்ளலாம். அழகியல் என்பது, உள்ளடக்கத்துனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. உதாரணமாக, 'தாஸ்தவாஸ்கி' யை எடுத்தால் அவர் நல்ல தேர்ச்சி மிக்க ஒரு எழுத்துக் கலைஞர். அவரது எழுத்துத் திறனில் அழகியலை எடுத்தீர்களென்றால் எந்தவொரு குறையும் காண முடியாது. உள்ளடக்கத்தை எடுத்தீர்களென்றால்... கோர்க்கி சொல்லுவார், 'புண்களை உயர்த்திக் காட்டுவதற்கு ஒருவனுக்கும் உரிமையில்லை' என்று . அது அந்தரங்கமானது. அது ஒரு நிராகரிக்க வேண்டிய தன்மை அப்படியென்று அவர் சொல்லுவார். ஆகவே, அழகியல் என்பது பல்வேறு தளங்களிலை இருக்கு. ஒரு தளம் எழுத்துத் திறன், இன்னொரு தளம் அதனுடைய உள்ளடக்கம். இன்னுமொரு தளம் இருக்கு. அது எத்தகையதொரு பாதிப்பை மனிதனில் ஏற்படுத்துகின்றது என்பது. சோகமா...? அவலமா...? கோபமா.....? அதனுடைய இறுதி விளைவென்ன? அப்படிங்கிற ஒரு கேள்வியையும் கணக்கிலெடுத்து அழகியல் சம்பந்தமாக நோக்க வேண்டும்.

♦? ஆக அழகியல் முக்கியமென்று சொல்லுகிறீர்கள்.

☛ மிகவும் முக்கியம். சுலோகத்தன்மையுடன் எழுதக் கூடாது. அழகியல் தன்மையுடன் கலாபூர்வமாகயிருக்க வேண்டும். அது சரி, அதனை ஏற்றுக்

*அழகியல் பற்றி நிறைய வாதிக்கப்பட்டிருக்கு. ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு அளவுகோல் வைத்திருக்கிறார்கள். இந்த அளவு கோலிற்கு ஒரு சமூகவியற்பின்னணி, நிலைப்பாடு இருக்கின்றதைக் கண்டு கொள்ளலாம். அழகியல் என்பது உள்ளடக்கத்துடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றேன். அப்புறம் கலாபூர்வமான வெளிப்பாடென்று வெளிக்கிட்டால் ... இன்னும் நிறைய பிரச்சனைகள் இருக்கு....

♦? இலக்கியப் படைப்பு காலபூர்வமாகவும் அதே சமயம் சமுதாயப் பயன்பாடு மிக்கதாகவும் இருக்கவேண்டும்?

☞: அப்படிச் சொல்லலாம். ஆனால், அதே சமயத்தில் ... அந்த எழுத்து இசைக்கும் நாதமென்ன? அதனுடைய ராகமென்ன? அவலமா? அதன் சமூகவியற் கண்ணோட்டம் என்ன என்பது நோக்கபடவேண்டும். மனிதனைப்பற்றிய அதனுடைய சாராம்சம் , அது இசைக்கின்ற ராகத்தின் சாராம்சம், அவல கீதமாக இருந்தால் அதனை நிராகரிக்க வேண்டும்.



♦? பொதுவாக தாஸ்தவாஸ்கி, டால்ஸ்டாய் கதைகளைப் பார்க்கும் பொழுது....

☞: டால்ஸ்டாயை நான் குறிப்பிட மாட்டேன்.

♦? நான் என்ன சொல்ல வருகின்றேனென்றால் தாஸ்தவாஸ்கியின் 'குற்றமும் தண்டனையும்', டால்ஸ்டாயின் 'புத்துயிர்ப்' போன்றவற்றின் முடிவு மதப் பிரச்சாரமாக அமைந்து விடுவதைக் கூறுகின்றேன்....

☞ ஆனால் டால்ஸ்டாயில் அவலச் சுவையில்லை

♦? ஒரு படைப்பாளியை அவனுடைய படைப்புக்களினூடு ஆராயவேண்டுமென ஒரு சாராரும், அவனது வாழ்க்கைப் பின்னணியில் அவனுடைய படைப்புக்கள் ஆராயப்படவேண்டுமென இன்னொரு சாராரும் கருதுகின்றார்களே? நீங்களென்ன நினைக்கின்றீர்கள்?

☞ ஒரு படைப்பு மாத்திரம் தான் சமூகப் பெறுமானத்தைப் பெறுகின்றது. அது மாத்திரம் தான் சமூகத்திற்காகக் கொடுக்கப்படுகின்றது. அவன் தன்னைக் கொண்டு வந்து நிறுத்தவில்லை 'என்னை விமர்சி' யென்று . அவனொரு அரசியல் வாதி மாதிரி பிரகடனம் செய்யவில்லை. தன் படைப்பை மட்டும்தான் சமூகத்தின் முன்னால் வைக்கின்றான். ஆகவே, அந்தப் படைப்பு எழுத்தில் வரும்போது எங்களிற்கொரு உரிமை இருக்கு அதனை விமர்சிக்க. ஆகவே அத்துடன் விடுவது நல்லதென நினைக்கின்றேன். அது ஒரு பக்கம் இரண்டாவது பக்கம் என்னவென்றால்... ஒரு படைப்பைப் படிக்கையில் அதிலிருக்கின்ற நேர்மையை நாம் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது அது உண்மையான படைப்பா? செய்யப்பட்டதொரு படைப்பா? ஒரு இயல்பானதொரு தோற்றமா? இயல்பானதொரு சிருஷ்டியா? Genuine Creationஆ இல்லையாவென்பதை உணர்ந்து கொள்ளலாம்.... உதாரணமாக பல கவிதைகள் வெளி வருகின்றன. ஆனால் பாரதியின் கவிதைகளில் அதிக ஒளியிருப்பது எல்லோரிற்கும் தெரியும். அதிக உண்மையிருப்பது எல்லோரிற்கும் தெரியும். அதிலிருந்து அவனுடைய வாழ்க்கை எப்படிப் பட்டது என்பதை நாம் ஓரளவிற்கு ஊகிக்கலாம். அந்த அளவிற்கு மனிதஞானம் இன்றைக்கு வளர்ந்திருக்கு. ஆகவே, கட்டாயம் அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையைத் தேடி ஆராய வேண்டியதென்ற அவசியம் இல்லை.

படைப்பு மாத்திரம் தான் சமூகப் பெறுமானத்தைப் பெறுகின்றது. அது மாத்திரம் தான் சமூகத்திற்காகக் கொடுக்கப் படுகின்றது. அவன் தன்னைக் கொண்டு வந்து நிறுத்தவில்லை 'என்னை விமர்சி' யென்று. அவனொரு அரசியல் வாதி மாதிரி பிரகடனம் செய்யவில்லை. தன் படைப்பை மட்டும்தான் சமூகத்தின் முன்னால் வைக்கின்றான். ஆகவே எங்களிற்கொரு உரிமை இருக்கு அதனை விமர்சிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◆? படைப்புக்களினூடே அப் படைப்பாளியின் முரண்பாடுகளை அறிய முடியும்...?

☞: அப்படித்தான் அந்த அளவிற்கு ஞானம் வளர்ந்திருக்கு. அப்படியிருக்கும் போது கூட சிலர் ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள். தனிப்பட்ட வாழ்க்கையை– ஒவ்வொருத்தனும் தன்னுடைய வாழ்க்கையையே ஆராய முடியாமல் இருக்கும்போது, இன்னொரு மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றி நாம் ஆய்வு செய்ய முடியாது. அதிலிருக்கின்ற எல்லா முரண்பாடுகளையும் நாம் அறிய முடியாது. எங்கள் கண்களுக்குத் தெரிகின்ற சில முரண்களை நாங்கள் தூக்கிப் பிடித்துக் கொள்கின்றோம். ஆகவே பிறிதொரு மனிதனின் வாழ்க்கையைப் பற்றி நாங்கள் எப்படி அரைகுறையாக ஆய்வு செய்து சொல்வது? அது சரியா? அது தர்மமா? இல்லை. முதலாவது, இத்தகைய விமர்சனப் போக்கே தர்மமற்றது. இரண்டாவது ,சரி அப்படியே ஏற்றுக் கொண்டாலும் எவ்விதம் அவனைப் பற்றி முழுதும் கூற முடியும்.

நீண்ட நேரமாக நந்தலாலா ஜோதிகுமாருடன் நிகழ்ந்த பேட்டியின் தொடர்ச்சியை நீங்கள் அடுத்த இதழில் பார்க்கலாம். மலையக இலக்கியத்தின் போக்குகள் பற்றிய உரையாடலைத் தொடர்ந்து, இப் பேட்டியில் மனித விடுதலை, பெண்ணியம் போன்ற விடயங்களும் பேசப்பட்டன,


# தேடகம் நூலகம்

1994 மே மாதம் 24ம் திகதி தேடகம் தீ வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் தீக்கிரையானது. ஆயினும் ரொரன்டோவில், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களின் தமிழ் அறிவியல்சார் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு மீண்டும் இவ் நூலகத்தை பூரண அளவில் இயங்கவைப்பதற்கு அனைவரது உதவியையும் தேடகம் வேண்டி நிற்கிறது. நல்ல நூல்களை அன்பளிப்பு செய்ய விரும்புவோரும், நிதி மற்றும் வேறு உதவிகளை செய்ய முன்வருவோரும் தேடகம் நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

566 Parlimeant St. Toronto ON. Canada M4X 1P8.


TEL & FAX :(416) 975 4750




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவ யதார்த்தவாத சினிமா

## சில குறிப்புகள்



நவ யதார்த்த வாதக் கோட்பாட்டை முதலில் முன் வைத்தவர் Umberto என்ற இயக்குனர். இவர் இது பற்றி குறிப்பிடுகையில் 'கற்பனை ஒழிக்கப்படவேண்டும். இது பிரச்சனையின் பின்னணியை, அதன் ஆழத்தை அழிக்கிறது.' என்றார். வாழ்க்கையை வாழ்க்கையாக காட்டாது விமர்சனத்துடன் காட்டப்பட வேண்டும் என்றார்.

ரதன்

1930 களின் ஆரம்பத்திலிருந்து சினிமாவில் கோட்பாடுகள் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இது சினிமாவின் வளர்ச்சியைக் எடுத்துக் காட்டியது. எனினும் இந்த வளர்ச்சி ஹொலிவுட்டின் வளர்ச்சியைத் தொடர்ந்து பின்தள்ளப்பட்டு விட்டது. நவீன தொழில்நுட்பம், புதிய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் போன்றன ஒரு சாராரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதனால், உண்மைகள் வெளிக் கொணரப்படும் தன்மை குறைந்துவிட்டது. இதனையும் மீறி உண்மைகள் வெளிவருகின்றன. ஆனால் இதன் பரவல் மிகக் குறைவு. இதற்குத் திரைப்படங்களும் விதிவிலக்கல்ல. நல்ல படங்களை பார்ப்பதற்கு திரைப்பட விழாக்களின் வருகையையே எதிர் நோக்க வேண்டியுள்ளது.

யதார்த்தவாத (REALISM) சினிமாவின் வளர்ச்சிக்கு ரஷ்யப் படங்களின் பங்களிப்பு முக்கியமானது. 1930 களில் ரஷ்யப் படங்கள் பல மாறுதல்களைக் கொண்டு வெளிவரத் தொடங்கின–


1. கலையரங்குகளுக்கு வெளியில் மக்கள் மத்தியில் தொழிலகங்களில், காடுகள், மலைகள், கிராமங்களில் படங்கள் எடுக்கப்பட்டன.

2. தொழில் முறை நடிக, நடிகையர் இப்படங்களில் நடிக்கவில்லை. சில படங்களில் நாயகனோ, நாயகியோ இல்லை. புரட்சி போன்ற சமூக அரசியல் நிகழ்வுகளை வெளிக் கொணர்ந்த இவ்வாறான படங்கள் திரைக்கதைகள் இன்றி வரலாற்றை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டன. தனி மனிதனின் கண்ணோட்டத்தில் காண்பிக்காமல், வாழ்க்கையை யதார்த்தமாக காட்ட விரும்பினார்கள். ஐன்ஸ்ரைனின் ஒக்ரோபர் புரட்சிபற்றிய படம் இவ்வாறான தொன்றாகும்.


3. இப் படங்கள் சமதர்ம கோட்பாடுகளை முன் வைத்து எடுக்கப்பட்டன. ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர் மக்களை மாற்றும் முயற்சிக்கு இப்படங்கள் பயன்படுத்தப்பட்டன. பிராச்சாரப் படங்கள் என்ற விமர்சனம் இப்படங்கள் குறித்து வைக்கப்பட்டன. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Roberto Rosselini*
நவ யதார்த்தவாத சினிமாவின் தொழிற்பாடு குறித்து பின்வருமாறு கூறுகிறார்,
'யதார்த்தத்தில் உள்ள பிரச்சனைகளை நேரடியாக காட்டுவதன்மூலம் மக்களை அவற்றுக்கான தீர்வை நோக்கி சிந்திக்க தூண்டுவதே சினிமாவின் தொழிற்பாடு.



அதே நேரத்தில் இப்படங்கள்சமூக, உளவியல் யதார்த்தங்களைப் பிரதிபலிக்கின்றன என்றும் பாராட்டப்பட்டன. இப் படங்களில் பெரும்பாலானவை ஊமைப் படங்களே.
இதன் பின்னர் ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலத்தில், நாசிகளின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் பிரச்சாரப் படங்கள் பெருமளவு வெளிவந்தன. பல இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் இவ்வாறான படங்களைத் தயாரிக்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். REICH FILM CHAMBER என்ற அமைப்பு ஹிட்லரின் பிரச்சார அமைச்சரின் கீழ் தொடக்கப்பட்டு அதற்கான விதிமுறைகள், கோட்பாடுகள் என்பனவும் தீர்மானிக்கப்பட்டன. இதே சமயம் இத்தாலியிலும் பாசிச அமைப்புக்காக பல படங்கள் எடுக்கப்பட்டன. அங்கும் இயக்குனர்கள் பலர் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பின்னாளில் நல்ல படங்கள் எடுத்த பல இயக்குனர்கள் பாசிசத்துக்கு ஆதரவாக படங்களை இயக்கியுள்ளார்கள்.

இக் காலகட்டத்தில் குறிப்பாக 2ம் உலப்போரின் பின்னால் திரைப் படங்களில் யதார்த்தம் (REALISM) நவயதார்த்தம் (NEO REALISM) குறித்து சர்ச்சைகள் எழுந்தன.

<u>யதார்த்த சினிமா</u>

சினிமா என்பது ஒரு மாயை. வாழ்வில் நடை பெறும் காட்சிகளை, சம்பவங்களை அப்படியே காட்டுவதுதான் யதார்த்தவாத சினிமா. வீதியில் ஒருவன் நடந்து செல்கிறான். இதனை அவ்வாறே காட்டுவது தான் யதார்த்தவாதம். உதாரணமாக, ஒரு கிராமம் அழிக்கப்பட்டது. இதனை தத்ருபமாகக் காட்டலாம். அங்கு பலர் இறக்கிறார்கள். பலர் உடமைகளை இழக்கிறார்கள். குழந்தைகள் சிதறி ஓடுகிறார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். கதிரையின் நுனியில் இருந்து நாமும் படத்தை ரசிக்கிறோம். ஏனென்றால், உண்மையான சம்பவம்போல் தத்ருபமாக காட்சிகள் காட்டப்படுகின்றன.

எனினும், இதன் பிண்ணனி என்ன? யார் இதனை செய்தார்கள்? ஏன் அழிக்கப்பட்டது? போன்ற எதுவுமே திரையரங்கத்தை விட்டு வெளியேறும் பொழுது எமக்குத் தெரியாது. இத்தகைய தன்மைகளைக் கொண்டதுதான் யதார்த்தவாத சினிமா. 1920 களின் பின்னர் ரஷ்யாவில் வெளிவந்த ஒக்டோபர் புரட்சி பற்றிய படம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

<u>நவ யதார்த்தவாதப் படங்கள்</u>

ஒரு திரைப்படமானது படைப்பாளியின் பார்வையுடன் வெளிவர வேண்டும் என்ற கோட்பாடு 2ம் உலகப் போரின் பின்னால் முன்வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் பாசிசப்படங்களை தயாரித்த *Roberto Rosselini* பின்னால் நவயதார்த்தவாதத்தின் முதல் படத்தை வெளிக் கொணர்ந்தார். இவர், 'யதாத்தத்தில் உள்ள பிரச்சனைகளை நேரடியாகக் காட்டுவதன்மூலம் மக்களை அவற்றுக்கான தீர்வை நோக்கிச் சிந்திக்கத் தூண்டுவதே சினிமாவின் தொழிற்பாடு.' என்று கூறினார்.

2ம் உலகப்போரின் பின்னர் போரின் பாதிப்புகள் குறித்தான படங்கள் இத்தாலியில் வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போரின் பின்னணிகளை விமர்சன நோக்குடன் காட்டுவதன் மூலம் இப்படங்கள் மனித விடுதலைக்கான தடைகளைச் சுட்டிக்காட்டின. இப் படங்கள் போரில் வெற்றி பெற்றவர்களை காட்டவில்லை. மாறாக போரால் பாதிக்கப்பட்டவர்களையே காட்டியது. இதுவே யதார்த்தப் படங்களுக்கும் நவ யதார்த்தப் படங்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு. யதார்த்தப் படங்கள் பார்வையாளர்களை ஆய்வுக்கு தள்ளலாம். அதாவது பார்வையாளர்கள் விரும்பின் படம் கூறிய விசயத்தின் பின்னணியை ஆராயலாம். ஆனால் நவ யதார்த்தவாதப் படங்கள் சமூக, வரலாற்றுப்பின்னணியை விமர்சிக்கும் நோக்குடனயே வெளிவருகின்றன.

நவயதார்த்தவாதக் கோட்பாட்டை முதலில் முன் வைத்தவர் Umberto என்ற இயக்குனர். இவர் இது பற்றி குறிப்பிடுகையில் 'கற்பனை ஒழிக்கப்படவேண்டும். இது பிரச்சனையின் பின்னணியை, அதன் ஆழத்தை அழிக்கிறது.' என்றார். வாழ்க்கையை வாழ்க்கையாக காட்டாது விமர்சனத்துடன் காட்டப்பட வேண்டும் என்றார். 2ம் உலகப் போரில் பாசிசம் அழிக்கப்பட்டதன் பின்னால் இத்தாலியில் ஒரு புதிய நிலை காணப்பட்டது. போரினால் ஏற்பட்ட அழிவுகள், பொருளாதார மந்தம், பாதிக்கப்புகள், உயிர்இழப்புகள் போன்றவை போரை விமர்சன நோக்குடன் பார்க்கத் தூண்டியது. இச் சந்தர்ப்பத்தை இத்தாலிய இயக்குனர்கள் முழுமையாக பயன்படுத்தினார்கள்.


புதிய மனிதவாழ்வு போரின் பின்னர் தொடங்கப்படுகிறது. புதிதாக ஜனநாயகம் பிறந்துள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சி, புதிய ஆட்சி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. வாழ்வில் பல புதிய கோலங்கள் மலர்ந்துள்ளன. மனித ஏற்றத் தாழ்வுகள், தொழிலாளி ஆளும்வர்க்க வேறுபாடு, கலாச்சார மாற்றங்கள் போன்ற கோலங்களை கவனமாக அவதானித்து வாழ்வை நிர்மாணிக்க வேண்டிய கட்டம் இது. எனவே, வாழ்வை விமர்சன நோக்குடன் பார்ப்பதே பார்வையாளர்களுக்கு தாம் வழங்கும் மிகச் சிறந்த பரிசுகள் என நினைத்த இத்தாலிய இயக்குனர்கள், தமது படைப்புகளை அவ்வண்ணமே உருவாக்கினார்கள். இத்தாலிய நாட்டின் அவலங்கள் வெளிக் கொணரப்படுகின்றன என்ற விமர்சனம் முன் வைக்கப்பட்டாலும், அவ் அவலங்களின் காரணங்களும் வெளிப்பட்டன என்பதும் உண்மைகளே.

இதில் உள்ள முக்கிய அம்சம் ஒன்று மற்ற மனிதர்கள் மீது இப் படைப்பாளிகள் கொண்டுள்ள அக்கறையாகும். Fellini ஒரு கட்டத்தில் 'எனது படங்கள் அன்பிலிருந்து வெளிப்படுவன' எனக் குறிப்பிட்டார். இவ் நவ யதார்த்தவாத இயக்குனர்கள் மனித வாழ்வு மாறுதல்களுக்கு உட்படவேண்டும் என நினைத்தார்கள். வறுமையாலும் போராலும் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனின் நிழல்களை, அவலங்களை சித்தரித்தார்கள். மனித நேயம் இவர்களது படங்களில் வெளிப்பட்டது. குறிப்பாக பிரச்சினைகளை தனிமனித பிரச்சனைகளாக மட்டும் பார்க்காது, அவற்றை அரசியல் பார்வையூடாகவும் விமர்சித்தார்கள்.

நவ யதார்த்தவாதப் படங்கள் முதலாவது தலைமுறையுடன் நின்று




வாழ்வை விமர்சன நோக்குடன் பார்ப்பதே பார்வையாளர்களுக்கு தாம் வழங்கும் மிகச் சிறந்த பரிசுகள் என நினைத்த இத்தாலிய இயக்குனர்கள் தமது படைப்புகளை அவ்வண்ணமே உருவாக்கினார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> ஒரு படைப்பானது படைப்பாளியின் தனிப்பட்ட கண்களால் பார்க்கப்படாது, ஒட்டுமொத்தமான உளவியல், சமூகப் பார்வைகளுடனும் பார்க்கப்பட வேண்டும். இதுவே நவ யதார்த்தவாதம் என்கிறார் Antonioni. ஆனால், படம் எடுக்கும் முறைகளை எந்தவொரு வரையறைகளுக்குள்ளும் ஒடுக்க முடியாது, என்பதையும் அவர் வலியுறுத்தினார்.



விடவில்லை. ஐம்பதுகளில் மூன்று புகழ் பூத்த இயக்குனர்கள் பல படைப்புக்களை வெளிக் கொணர்ந்தார்கள். Carlo Lizzani, Fedrico Fellini ,Michaelangelo Antonioni ஆகியோரே இவர்கள். இவர்களுடன் Vittorio De Sica, Jean Renoir, இந்தியாவின் சத்யயித்ரே, மிருணால் சென், போன்றோரையும் சிறந்த நவ யதார்த்தவாத இயக்குனர்களாகக் குறிப்பிடலாம். நன யதார்த்தவாதக் கொள்கை, 'நீ என்னத்தைக் காட்டுகிறாய் என்பதைக் கேட்கவில்லை. அதனை எப்படிக் காட்டுகிறாய் என்றே கேள்வி எழுப்புகிறது' என்கிறார் Fellini. 'ஒரு படைப்பானது படைப்பாளியின் தனிப்பட்ட கண்களால் மட்டும் பார்க்கப்படாது, ஒட்டுமொத்தமான உளவியல், சமூக, வரலாற்றுப் பார்வைகளுடனும் பார்க்கப்பட வேண்டும். இதுவே நவ யதார்த்தவாதம்' என்கிறார் Antonioni. ஆனால், அதேவேளை, படம் எடுக்கும் முறைகளை எந்தவொரு வரையறைகளுக்குள்ளும் ஒடுக்க முடியாது, என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

நவ யதார்த்தவாதத்தின் முதல் படமான Open city என்ற படத்தை இயக்கியவர் Roberto Rosselini. Vittorio De Sicaவின் Bicycle Thief என்ற பிரசித்திபெற்ற நவ யதார்த்தவாதப் பாணியிலான படம் தான் தன்னையே மாற்றியது என்றார் சத்யஜித் ரே.

இப்படத்தில் வேலையில்லாது அல்லல்படும் ஒருவன் சித்தரிக்கப்படுகிறான். வேலை கிடைப்பதற்கு சைக்கிள் அவசியம். சைக்கிளோ அடமானத்தில். மனைவியின் திருமண நகைகளை விற்று சைக்கிள் மீட்கப்படுகிறது. வேலை கிடைக்கிறது . ஆனால் முதல் நாளே சைக்கிள் களவு போய்விடுகிறது. கள்ளனை பெரும் சிரமத்தின் பின் தேடிக் கண்டு பிடித்தால் அவன் காக்காய் வலிப்புக் காரன். இறுதியாக வேறொரு சைக்கிளை திருடுவது என முடிவு செய்து, திருட முற்படும் போது பிடிபட்டு தர்ம அடி வாங்குகிறான். ஆனால் இறுதியில் கூட்டம் அவனை மன்னித்து, விட்டு விடுகிறது. இங்கு வாழ்விற்கும் படைப்புக்கும் இடையில் அதிக இடைவெளி இல்லை.

சினிமாவின் நூற்றாண்டு வரலாற்றில் நவ யதார்த்தவாதக் காலம் முக்கியமான தொன்றாகும். இன்று இத்தாலியிலும் சரி, உலகின் ஏனைய பாகங்களிலும் சரி இவ்வாறான படங்களின் வருகை மிகவும் குறைவு. இது மிகவும் கவலைக்குரியதாகும். அவ்வாறு வரும் ஒரு சில படங்களும் பல தடைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இது இன்றைய காலகட்டத்தின் அவலங்களில் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணைவன்

**–அருள் தாஸ்**



வியாழன் வெள்ளி இரவுகள் கனத்தவை. அதுவும் சில வீதிகள் இரவில் உறங்காமல் பெருமூச்செறிவன. தேடுதலும் காத்திருத்தலுமாய் செயின்ட் லோரண்ட் வீதி உயிர்த்திருந்தது. வீதி வெளிச்சத்தில் நழுவி விழும் நிழல்கள் பஸ் ஜன்னலில் சரிந்து ஓடின. பஸ் கடந்து கொண்டிருந்த ஒரு முக்கிய சந்திப்பில் இரவு நேர ரெஸ்ரோரண்ட் அருகினில் சிலபெண்கள் பார்த்திருந்தனர். அவர்களின் உடைகளிலிருந்தே காத்திருப்பிற்கான அர்த்தம் புரிந்தது. எத்தனை ருபங்களை பிழிந்து அதன் பரிமாணங்களையும், நெருஞ்சி முட்களின் அநுபவங்களையும் பெற்றிருப்பர். இவர்களிடம் போய் கோணல் மனதுகளின் அநுபவம் கேட்டால்?
ஏன் எனக்குள்ளும் பல முறிவுகள், சற்றுமுன் ஒரு பொழுதில் நான் அவர்களில் பதிந்திருந்தேனா..?... அது கண்டிப்பாக ஐக்கியம் அல்ல, ஊசலாட்டம். காலத்தின் ஊசல் என்னில் சாய்ந்ததையே ஆசை என்று கொள்கிறேனா..?...

அவர்களின் உடைகளிலிருந்தே காத்திருப்பிற்கான அர்த்தம் புரிந்தது. எத்தனை ருபங்களை பிழிந்து அதன் பரிமாணங்களையும், நெருஞ்சி முட்களின் அநுபவங்களையும் பெற்றிருப்பர். இவர்களிடம் போய் கோணல் மனதுகளின் அநுபவம் கேட்டால்?

நேரம் விடிகாலை, இரண்டரை மணி ஆகியிருந்தது. அடுத்த நிறுத்தத்தில் இறங்கி இன்னுமொரு பஸ் எடுத்தால்தான் வீடு செல்ல முடியும். அல்லது நடக்க வேண்டும். யாருமற்று அமைதி கவிந்த வீதியில் நிற்பதை நினைக்கவே வேர்க்கிறது. எதிர்பார்க்கப்படாத அமைதி சங்கடத்தையோ, பயத்தையோ உண்டு பண்ணிவிடுகிறது. இருப்பினும் கூடடைய வேண்டும்.... இறங்கினேன்.

தொலைவில் பஸ் வருவதற்கான அறிகுறி இல்லை. தரிப்பிடத்தில் நேரசூசியைப் பார்க்கலாமென அருகினில் சென்றேன்.
நின்றான் ஒருவன்..?...
இளைஞன்.
லத்தின் அமெரிக்க இடையர்கள் போடுவது போன்ற தொப்பி இணைந்த ஜாக்கெட், அதன் முழு முதுகிலும் FILA என்ற எழுத்துக்கள் சிவப்பில். கண்களை மூடுமளவுக்கு தொப்பியை இழுத்து விட்டதாலோ என்னவோ முகம் தண்ணி இல்லாத கிணறு போல கனிவற்றிருந்தது. அதில் அலட்சியமாக ஓர் ஆட்டுத்தாடிவேறு. தனியாக உலவுபவை மிக மூர்க்கமாக இருக்குமாமே, யானையும் அப்படித்தான். வீதியில் பஸ்ஸின் முகமும் தெரிவதாயில்லை. எப்போது வருமோ அதுவும் தெரியவில்லை. நேற்று புரட்டிய வாரப்பத்திரிகை என் கண்ணில் வந்து போனது. அமெரிக்காவில் 24 நிமிடங்களுக்கு ஒரு கொலை நடைபெறுகிறதாம். இரவு பஸ் எப்படியும் ஒருமணித்தியாலத்திற்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைவெளியில் தான் வரும். ஒருமணித்தியாலத்தில் இரண்டு இருபத்தினான்கு நிமிடங்கள்., நடப்பதே உசிதம்., நடந்தேன். குளிர்காற்று வீசியது., இருந்தும் நெஞ்சை சற்று நிமிர்த்தியே நடந்தேன்.

ஒரு லைட் கம்பத்தை கடந்தபோதுதான் **கவனித்தேன்**., என் நிழலுக்கு சற்றுக் கீழிறங்கி இன்னொரு நிழலும் வீதியில் விழுந்தது., **நகர்ந்தது**. இப்போது திரும்பிப் பார்க்க வேண்டும். கட்டளை போயும் கழுத்துத் திரும்பவில்லை. ஆழமூச்சிழுத்துக் கொண்டு சற்றுத்திரும்பி குறுட்டுப் புள்ளி பார்ப்பது போல பார்த்தேன். பஸ் தரிப்பில் பார்த்த அதே உருவம் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. உடல் சற்று வெப்பமாகியது போல உணர்ந்தேன். தேர்ந்த உதைபந்தாட்டக்காரனுடையது போன்றதல்ல என் மூளை., இருந்தும் விரைந்து நடக்க வேண்டும். என்று காலை எட்டப் போட்டேன்.

ஜாக்கெட்டுக்குள் நுழைத்திருந்த கையை வெளியே விட்டு சற்று வீசவும் செய்தேன்., என்னை நானே ஏமாற்றிக் கொண்டு. ஊரிலென்றால் இளைய நாட்களில் எங்காவது இரவில் நடைப்பயணம் வாய்த்துவிட்டால் பாடுவது வழக்கம்., அது நாயையும், பேயையும் விரட்ட. சுற்றி வர எந்த ஜன்னலிலும் வெளிச்சமில்லை. நிலவு வெளிச்சத்தில் மாடுகள் படுத்திருப்பது தெரிவது போல வீதி இருகரையும் கார்கள்தான் கிடந்தன.

அவனது ஆரம்ப எதிர்கொள்ளலின் காட்சிகள்தான் மூளையிலிருந்து வழிந்தன. துவக்கா? கத்தியா? பணம் மட்டும்தான் குறியாய் இருக்குமா? உயிரும் தேவையாய் இருந்தால்? தொலைபேசிக்கு பாவிக்கவென்று வைத்திருக்கும் "குவாட்டரைத்" தவிர என்னிடம் பணமேதுமில்லை. இதுவே அவனை எரிச்சலடைய வைத்து, அவன் ஆயுதம் பிரயோகிக்கலாம். உயிர் பலியாகும். மனைவியின் கழுத்தை நெரிக்க வேண்டுமென்ற ஆத்திரம் பிறந்தது. என் பொக்கற் காலியாக இருப்பதற்கு அவளது திருவினைதான் காரணம்., சம்பளநாட்களில் குடிகாரக் கணவன் மாரிடம் பணம் வேண்டுவதற்காக மனைவியர் சாராயக்கடைக்கு முன் காவல் இருப்பார்களாமே.! அதேபோல ஒவ்வொரு வியாழனும் வேலையிலிருந்து வீடு வரும் போது பரந்த சிரிப்பும் கோப்பித்தண்ணியுமாக வரவேற்று எல்லாப் பணத்தையும் வேண்டி விடுகிறாள். சிகரட்டுக்கும், பியருக்கும் நிறையச் செலவழிக்கிறியள், என்ற குற்றச்சாட்டு கூறியபடி. ஊரிலிருந்து அம்மாவோ, அக்காமாரோ தீடீரென கொழும்பு வரும் போது மனைவியின் கைதான் என் கவலையைத் தவிர்க்கிறது. இருந்தும் இந்தச் சந்தர்ப்பத்தில்.....

எந்த இடத்தில் அவன் என்னை நெருங்குவான் என்று ஊகிக்க முடியவில்லை. பக்கத்தில் "ஜென்தலோன்" மெட்ரோ நெருங்குகிறது. அதனருகில் எப்போதும் ஒரு யூகோஸ்லாவியக் கிழவன் படுத்திருப்பான். மாஜி மல்யுத்த வீரன், இப்போது வீடற்றவன். சற்று தெம்பு வர சுற்றும் முற்றும் பார்த்தேன். வழமையாகப் படுத்திருக்கும் இடத்தில் கிழவனைக் காணவில்லை. எந்த பீதியுமற்ற அவன் எங்கே போய்த் தொலைந்தான். மைனஸ் 20 குளிரில் கூட படுத்திருப்பானே? சிலவேளை அவனுக்கும் ஏதாவது நடந்ததோ..?... அவனிடம் என்ன இருக்கிறது இழப்பதற்கு, அந்தப் போர்வையைத் தவிர. என்னிடம் மட்டும் பெரிதாக என்ன இருக்கிறது, என் மனைவியையும் குழந்தையையும் தவிர..?... அவர்கள் தானே என் ஆதாரவேர்கள்.


மிகத்தெளிவாக அருகினில்

*ஒரு லைட் கம்பத்தை கடந்தபோதுதான் கவனித்தேன்., என் நிழலுக்கு சற்றுக் கீழிறங்கி இன்னொரு நிழலும் வீதியில் விழுந்தது., நகர்ந்தது. இப்போது திரும்பிப் பார்க்க வேண்டும். கட்டளை போயும் கழுத்துத் திரும்பவில்லை. ஆழமூச்சிழுத்துக் கொண்டு சற்றுத்திரும்பி குறுட்டுப் புள்ளி பார்ப்பது போல பார்த்தேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்துச் சத்தம் கேட்டது. காது இப்போது ஒரு மனிதக்குரலுக்காக தயாராகிவிட்டது. ஓடினால் என்ன என்று யோசித்தேன். சுமார் நூறு மீட்டருக்குள் என்னை எந்தச் சிறுவனாலும் பிடித்துவிட முடியும். அதற்கும் வாய்ப்பில்லை., நடந்தேன். அதிக தூரமில்லை., என்னுடைய வீட்டிற்கு திரும்பும் சந்திச் சிக்னலும் தெரிய ஆரம்பித்து விட்டது. இப்போது வேறொரு பிரச்சனை முளைத்து விட்டது. சிலபேர் எடுத்த எடுப்பிலேயே எதுவும் செய்து விடுவதில்லை. முதலில் கண்காணிப்பு, பின் தாக்குதல். இவன் இந்த வகையைச் சார்ந்தவனோ..?... என் அகால வீடு திரும்பலையும், என் வீட்டையும் அறிந்து பின் நான் வீட்டிலில்லாத நேரத்தில் வீட்டையுடைத்து களவு செய்ய நினைத்து, மனைவி குழந்தைக்கு ஆபத்து வந்தால்..?... கண்டிப்பாக இவன் வீடு தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் வைக்கக்கூடாது. வீட்டுக்கு திரும்பும் சந்திப்பில் ஓர் இரவு நேரக் கடையுண்டு. அதற்குள் நுழைந்து அங்கு இல்லாத ஒரு பொருளைக் கேட்டு நேரத்தைக் கடத்திவிட்டு பின்னர் வீடு போய்ச் சேருவோம்., என முடிவெடுத்து அக்கடையில் இல்லாத பொருள் எது என்று மூளையைக் குடைந்து கொண்டே வந்ததில் கடையும் வந்து விட்டது. உள்ளே நுழைவதற்காக அழைப்பு மணியை அடித்தேன். உள்ளிருந்து கடைச்சிப்பந்தி மிக நுட்பமாக என்னை பார்வையால் ஆராய்ந்த பின்னர்தான், கதவைத் திறந்தான். இவனுக்கும் எவ்வளவு பாதுகாப்பு. இரவில் கண்ணாடிக் கூண்டை விட்டு வெளியே வரவே மாட்டான். பொருளைத் தேடுவது போல இரண்டொரு நிமிடங்களைக் கடத்தி விட்டு வெளியே வந்தேன். பின் தொடர்ந்தவனைக் காணவில்லை. வானம் வெளுத்தது போல மனது குளிர்ந்தது. வீட்டிற்கு போகும் சந்தியில் திரும்பும்போதுதான் கவனித்தேன். அடுத்த பஸ்தரிப்பிலுள்ள நேரசூசியை அந்த உருவம் ஆராய்ந்து கொண்டிருந்தது.



## இலங்கை ஓவியர்

# ஜோர்ஜ் கீற்
# (George Keyt)
## 1901 - 1993



"HORSEMAN" oil on canvas 1956



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலப்பெயர்வும் சுயம் பற்றிய குழப்பங்களும்

*சுயத்தின் ஆரோக்கியம் பல்வேறு உறவுகளில் தங்கியிருக்கின்றது. எனவே, போரினாலும், குடியகல்வினாலும் சக உறவுகளில் இருந்து மனிதர்கள் பலவந்தமாகப் பிரிக்கப்பட்டபோது சுயத்தின் இருப்புப்பற்றிய ஆதங்கமும் குழப்பமும் ஏற்பட்டுப் போயின. இது சுயத்தில் உருவாகும் பிரச்சனையின் ஒரு பரிமாணமே.*

**நேசன்**

அண்மையில் எனது யூத நண்பர் ஒருவரிடம் நான் எவ்வாறு எனது நாட்டை miss பண்ணுகின்றேன் என்பது பற்றி உரையாடிக் கொண்டிருந்தேன். நாட்டைப் பிரிந்து வாழும் எனது உள்ளுணர்வுகளைப் பற்றி நீண்ட நேரம் அவதானித்துக் கேட்ட எனது நண்பர் என்னை உற்றுநோக்கியபடி "நீர் எனது பாட்டியைப் போல் கதைக்கின்றீர்" என ஓர் போடு போட்டார். குழம்பிய நான், வயதானவர்கள் போல் நான் அரட்டை அடிக்கின்றேன் என நீர் எண்ணினால் அதற்காக மன்னிக்கவும் எனக் கூறினேன். இல்லை, இல்லை நான் அந்த அர்த்தத்தில் கூறவரவில்லை எனக் கூறிய அவர் தனது பாட்டி தனது 90வது வயதிலும் நாஜி ஜேர்மனி காலத்திற்கு முன், ஜேர்மனியில் வாழ்ந்த தனது சிறுபராய கிராம வாழ்க்கை பற்றியும் தான் பிறந்த மண்ணில் வாழ்ந்தபோது பெற்ற ஆத்ம திருப்தி பற்றியும் ஏக்கத்தோடு கூறுவார். நாஜி ஜேர்மனியின் சித்திரவதை முகாம்கள், கொலைகள் காரணமாகக் நாட்டை விட்டு வெளியேறினாலும் மண்ணைவிட்டுப் பிரிந்த சோகம் 60 வருடங்களுக்குப் பின்னும் அவரை வாட்டுகின்றது என்றார். நான் ஒரு கணம் மலைத்துப் போனேன். கடந்த 60 வருடகலமாக அவரது சுயம் ஜேர்மனிக்கும் கனடாவிற்கும் இடையில் ஊசலாடுவதை என்னால் காணக் கூடியதாக இருந்தது.

மனித வாழ்வில் மண்வாசனையின் தாக்கம், அதிலும் இளம் பராயத்தில் வாழ்ந்த இடத்தின் தாக்கம், மிக அழுத்தமானது. குறிப்பிட்ட இன, மொழி, காலத்திற்கு அப்பாற்பட்ட இத் தனிமனித உணர்வு, சகல நாடுகளிலும் குறிப்பாக போர்க்காலச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட அகதிகளால் எப்போதுமே அனுபவிக்கப்பட்ட ஒன்று. கிரேக்க, ஆரிய படையெடுப்புக் காலங்களிலிருந்து இன்றுவரை போர்களின் வெளிப்படை மனவடுவாக இது விளங்குகின்றது.

இலங்கையில் போர்க்காலச் சூழ்நிலையில் நாட்டை விட்டு வெளியேறிய அனைவரும் இந்த மனவடுவைச் சுமந்தவர்கள்தாம். சிறுவர்களிலும் பார்க்க இருபதுகளிலும் அதற்கு மேற்பட்ட வயது வந்தவர்களிலும் இம்மனவடுவின் தாக்கம் மிக அழுத்தமானதே. குறிப்பாக மேற்குலகில் மாபெரும் நகரங்களில் உயர்ந்து நிற்கும் கொன்கிறீட் காடுகளில் வாழும் வயது முதிர்ந்த பெற்றோரின் வாழ்வு மிக அவலமானது. இம்மனவடு அவலத்தின் ஆழமும் தாற்பரியமும் தான் என்ன?

**மனித உறவுகளும் சுயமும்**

பொதுவாக மனித சுயத்தின் பரிணமத்தை நாம் மனித உறவுகளின் அடிப்படையிலும், சமூக பாரம்பரியங்கள், சமய சடங்குகள், ஒழுக்க விழுமியங்கள், கலை ஆக்கங்கள், அரசியல் இலட்சியங்கள் போன்றவற்றின் அடிப்படையில் இனம் காணும் பழக்கத்தை கொண்டிருக்கின்றோம். இதன் தாக்கத்தினாலேயே நாம் குடியகல்விற்குப் பின்பு பெற்றோரை, அண்ணன் தங்கையை, உறவினரை, சுற்றத்தாரை, நண்பர்களை, கல்லூரியை, பல்கலைக்கழகங்களை, கோயில்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சங்கங்களை, கட்சியை, இயக்கத் தோழர்களை பிரிந்த ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றோம். இப்பிரிவு எமக்கு ஏக்கத்தைத் தருவதற்குக் காரணம் மேற்கூறிய உறவுகள் எமது சுயத்தின் ஆக்கத்திற்கும் கட்டுமானத்திற்கும் பங்களிப்பைச் செய்திருந்தன. சுயத்தின் வடிவமும், ஆரோக்கியமும் இவ் உறவுகளின் தொடர்புகளினால் பல்வகையில் பேணப்பட்டு வந்தன. சுயத்தின் ஆரோக்கியம் இவ் உறவுகளில் தங்கி இருந்ததினால் போரினாலும், குடியகல்வினாலும் சக உறவுகளில் இருந்து மனிதர்கள் பலவந்தமாகப் பிரிக்கப்பட்டபோது சுயத்தின் இருப்புப்பற்றிய ஆதங்கமும் குழப்பமும் ஏற்பட்டுப் போயின. இது சுயத்தில் உருவாகும் பிரச்சனையின் ஒரு பரிமாணமே. மனித உறவுகளின் பிரிவுபற்றிய பிரச்சனையும் அதனால் சுயத்தில் ஏற்படும் தாக்கம் பற்றியும் பல மட்டங்களிலும் உரையாடப் பட்டு வருவதினால் இக்கட்டுரை சுயம் பற்றி இன்னுமொரு கோணத்தில் கவனத்தைச் செலுத்தும்.

**மண்ணும் சுயமும்**

போரில் ஏற்பட்ட இழப்புக்கள், மனித உறவுகளின் பிரிவு, துயரங்கள் ஒருபுறம் இருக்க "மண்ணை" விட்டுப் பிரிந்த ஏக்கம் பலரின் அன்றாட பேச்சுக்களில் வருவது சகஜம். மண்ணைவிட்டு பிரிந்த இந்த உணர்விற்கு பல அர்த்தங்களும் அதில் எழும் பல பரிமாணங்களும் இருக்கின்றன. இவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்க எண்ணுகின்றேன். முதலாவது வகை மண்ணின் அர்த்தம் "தேசியவாத அரசியல் அர்த்தம்" ஆகும். இதை "மண்" என்ற சொல் தமிழ்த் தேசியவாத சொல்லாடல் மரபில் கையாளப்பட்ட பாவனையில் பார்க்கலாம். இந்தப் பாவனையை அன்றாட தமிழ்த் தேசியவாதப் பத்திரிகைகளிலும், மண்ணில் ஓங்கி அறைந்து உணர்ச்சிவசப்பட்டுப் பாடிய தமிழ்த் தேசியவாதக் கவிஞர்களின் பேர்போன கவிதைகளிலும் காணலாம். தனிப்பட்ட அல்லது கட்சி நலன்களும், எதிர்பார்ப்புகளும் கொண்ட இவ்வரசியல் பாவனையின் வீச்சும், பாதிப்பும் அனைவருக்கு பரிட்சயமானதால் அது பற்றி புதிதாக ஒன்றும் நான் சொல்வதற்கில்லை.

இரண்டாவது அர்த்தம் மனிதமேலாதிக்கப் பார்வையிலிருந்து எழுந்த ஒன்றாகும். இங்கு மனிதர் தம்மை உலகத்தின் "மையமாக" வரித்து, உலகிற்கும் தமக்கும் உள்ள தொடர்பை "பயன்" அடிப்படையில் மதிப்பீடு போட்டுப் பார்க்கும் பார்வையையே மனித மேலாதிக்கப் பார்வை என நான் குறிப்பிடுகின்றேன். மனிதரின் வளர்ச்சிக்கு இயற்கையை ஓர் தடையாக அல்லது எதிரியாகப் பார்க்கும் வழக்கம் குறிப்பாக மேற்குலகில் நீண்ட காலம் இருந்தது. கட்டுப்படுத்த முடியாத இயற்கையை கட்டுப்படுத்துவது மனிதனின் ஆளுமையாகவும் சவாலாகவும் பார்க்கும் ஓர் உலகப்பார்வை இங்கு எழுந்தது. மனிதர் மண்ணையும், அதிலெழுந்த வளங்களையும் தமக்கேற்ற நுகர்வுப் பொருட்களாகவும், தமக்கு தேவையற்றவையை கழிவுகளாகவும் பார்க்கும் ஓர் மனப்போக்கை இதை ஒட்டி வளர்த்தனர்.


இவ்வாறான ஓர் மனப்பாங்கு எமக்கும் எமது புறச்சூழ்நிலைக்கும் (இயற்கைக்கும்) இடையே "பயன்" அடிப்படையிலான நுகர்வுமுறை உறவை வளர்த்தது. இம்மனப்பாங்கின் தாக்கம் பல அரசியல் கொள்கைகளையும் நியாயமாகப் பாதித்திருந்தது. இவ் அரசியல் கொள்கைகள் தமக்கான உலகப் பார்வையை முன்வைத்தபோது மனிதமேலாதிக்கம்



மனிதரின் வளர்ச்சிக்கு இயற்கையை ஓர் தடையாக அல்லது எதிரியாகப் பார்க்கும் வழக்கம் குறிப்பாக மேற்குலகில் நீண்ட காலம் இருந்தது. கட்டுப்படுத்த முடியாத இயற்கையை கட்டுப்படுத்துவது மனிதனின் ஆளுமையாகவும் சவாலாகவும் பார்க்கும் ஓர் உலகப்பார்வை இங்கு எழுந்தது. மனிதர் மண்ணையும், அதிலெழுந்த வளங்களையும் தமக்கேற்ற நுகர்வுப் பொருட்களாகவும், தமக்கு தேவையற்றவையை கழிவுகளாகவும் பார்க்கும் ஓர் மனப்போக்கை இதை ஒட்டி வளர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயற்கையில் உள்ள அனைத்துப் பொருட்களையும், உயிரினங்களையும் தமது பயன்களின் நோக்கம் கருதி தேவையானவை என்றும் தேவையற்றவை என்றும் வகைப்படுத்தி, முத்திரையிட்டு நுகரப் பழகிய அல்லது பழக்கப்படுத்தப்பட்ட மனிதர், காலப்போக்கில் அப் பயன்வழி நோக்கோடு தாம் வாழ்ந்த இயற்கைப் புறச்சூழலுடன் தம்மை இனம் காணவும் பழகிக்கொண்டனர்.

சார்ந்த அரசியல், சமூக, விஞ்ஞான, அழகியல் கருத்துக்களை பிரக்ஞையுடனோ, பிரக்ஞையின்றியோ தவிர்க்க முடியாதபடி முன்வைத்தன. இது மனித நாகரீகங்களையும் மனித மேலாதிக்கப் பார்வையின் தவிர்க்க முடியாத செல்வாக்கினூடு வளர வழி செய்தன.

இப் பார்வையை தெளிவாக விளக்கும் சமகாலச் சினிமாப் பாடல் ஒன்றை உதாரணத்திற்கு குறிப்பிடலாம். உலகம் பிறந்ததும் எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக மலர்கள் மலர்ந்ததும் எனக்காக அன்னை மடியை விரித்தாள் எனக்காக

அன்னை (பூமாதேவி) தனது தேவைக்காகவே படைக்கப்பட்டது என்ற மனிதனின் மனப்பாங்கினால் வயற்பரப்பில் நெற்கதிர்கள் மனித பற்றுற்கும்; ஏனையவை களைகளாக்கப்பட்டு அவை அவன் வெறுப்புக்கும் உள்ளாக்கப்பட்டன. ஆனால் இயற்கையில் உள்ள அனைத்து உயிரினங்களும் சடமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து இயற்கையின் ஆரோக்கிய சூழலுக்கு வழிவகுக்கின்றன. இது விஞ்ஞானம். உதாரணமாக "தேனைத் தரும் தேனீ" என தேனீயுடன் ஒரு பயனுறவை மட்டும் நாம் கொண்டுள்ளோம். ஆனால் தேனீயின் இருப்பின்றி, மகரந்தச் சேர்க்கையின்றி பெரும் பான்மையான தாவரங்களின் இனவிருத்தியும், பழ உருவாக்கமும் இடம் பெறாது. இதனால் தேனீக்களின் அழிவு தாவரங்களில் தங்கியிருக்கும் பல ஜீவராசிகளைப் பாதிக்கும். அவ்வாறே காளான்களுக்கும், குப்பைமேனிக்கும், தொட்டாச்சிணுங்கிக்கும், மண்புழுக்களுக்கு, ஓணானுக்கும், ஆந்தைக்கும் இயற்கையின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் உரிய இடம் இருக்கின்றது.

இயற்கையில் உள்ள அனைத்துப் பொருட்களையும், உயிரினங்களையும் தமது பயன்களின் நோக்கம் கருதி தேவையானவை என்றும் தேவையற்றவை என்றும் வகைப்படுத்தி, முத்திரையிட்டு நுகரப் பழகிய அல்லது பழக்கப்படுத்தப்பட்ட மனிதர், காலப்போக்கில் அப் பயன்வழி நோக்கோடு தாம் வாழ்ந்த இயற்கைப் புறச்சூழலுடன் தம்மை இனம் காணவும் பழகிக்கொண்டனர். மண்ணோடான இவ் அணுகு முறை காலப்போக்கில் அம் மண்ணுடனான ஒரு பிடிப்புணர்வையும், உரிமை கோரல் உணர்வையும் ஏற்படுத்தியது. மண்ணுடனான தேசியவாத உணர்வின் ஒரு பரிமாணமும் இம் மனிதமேலாதிக்க உறவின் அம்சமாகவே வளர்ந்து. ஆதலால் மனித சுயத்தின் ஆக்கத்திலும், அதன் பல பரிமாண வளர்ச்சிகளிலும் இயற்கை மீதான மனிதமேலதிக்க உணர்வு கணிசமான பங்கைச் செலுத்தியது.

## இயற்கையும் சுயத்தின் ஆக்கமும்

இனி மண் பற்றிய மூன்றாவது அர்த்தத்திற்கு வருவோம். சுயத்தின் ஆக்கமும், வளர்ச்சியும் வெறுமனே மனித உறவுகளின் நெருக்கத்திலும், மனிதமேலாதிக்க உலகப்பார்வையிலும் தங்கியிருப்பதில்லை. இயற்கை பற்றி மனிதமேலாதிக்க உலகப்பார்வையில் இருந்து விடுபட்ட ஒரு சுதந்திரப் பார்வையும் மனித சுயத்திற்கு இருந்தது. அவை நாம் சிறுபிராயத்தில் வளர்ந்த இயற்கைச் சூழலில் (மண்) எம்மை அறியாமலே நாம் இனம் கண்ட அனுபவங்களில் தங்கியிருக்கின்றன. இங்கு இயற்கையுடனான சுயத்தின் உறவு வெறுமனே பயன் அடிப்படையானஉறவாகாமல், இயற்கையுடனான பிணைப்பை வலுப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்களுக்கப்பாற்பட்ட ஓர் சுயாதீனமான உறவாக மலர்கின்றது. இயற்கை மீதான நுகர்உரிமைக்கு பதிலாக ஒரு லயிப்பே சுயத்திக்கு இருந்தது. அதாவது இங்கு சுயம் இயற்கையின் சிதறலாகவும், இயற்கை சுயத்தின் பிரக்ஞையாகவும் பிணைந்து நின்றன. ஆகவே சுயம் இயற்கையின் கண்ணுடியாகவும், இயற்கை சுயத்தின் கண்ணுடியாகவும் பரஸ்பரத்தொடர்புடன் விளங்கியது.


கடற்கரை மணலில் நடந்து களைத்த விறுவிறுத்த கால் விரல்களும், தரையில் அடித்து முகத்தில் தெறித்த நீரலைத் திவலைகளும், நெருப்பு வெய்யிலில் நெஞ்சில் ஓடும் வேர்வையில் பட்ட மென்காற்று தந்த குளிர்மையும், ஆலமரத்தில் நிழல்களில் ஆலமரத்தின் விழுதுகளின் பாம்பு நடனமும், கரும்பனையில் பளிச்செனப் படம்கீறிச் செழித்து வளர்ந்த ஒட்டுண்ணி மரமும், கரு இருட்டின் வானத்தில் பிரபஞ்ச பிரக்ஞையைத் தரும் மின் நட்சத்திரங்களும், மாரியில் ஓடிய சிறு களனி ஓடையில் புணர்விற்க்கு அழைப்பு விடும் தவளையும், நுளம்புகளின் ஆவேச ரீங்காரமும், அலைகடலில் கரையோங்கிய ஜெலி மீனின் வெடுக்கு மணமுமாக அனைத்தோடும் எம் சுயத்தை இனம் கண்டு வளர்ந்தவர் நாம்.

முலை இழுத்து, மடியை முட்டி, வால் நிமிர்த்தி, ஓடும் கன்றும், பனங்குற்றி நுனியில் குதித்தேறி நெஞ்சு புடைத்து நிற்கும் பயமறியா ஆட்டுக்குட்டியும், மாரிக் கொடு மழையில் பூச்சிக்கடியில் இருந்து விடுதலை என காட்டு நெடுஞ்சாலை நடுவே இடைமறித்து நிற்கும் யானைக்கூட்டமும், பழுத்துக் குலுங்கிய பப்பாளி மரத்தில் சிற கடித்து பொந்துவைத்து உண்ணும் காகமும், கொய்யாமரத்தில் கோதிக் கொழுத்த வௌவால்களும், முருங்கைப் பூவைக் கடித்துத் தாவும் முதுகுவரி அணில்களும் ஆகிய அனைத்திலும் எமது சுயத்தை பட்டை தீட்டி வாழ்ந்தவர் நாம்.

மகாவலி விழுந்து சிவந்த கடலும், செழுந்தான் மீன் ஓடும் உப்பாறுகளும், நீரோடி நீரேறும் குடாக்கரைகளும், அங்கு சூரிய அஸ்த்தமனத்தில் தங்கமெனப் பளபளக்கும் மண்தெரியும் நீர்க்கரையில் விடாப்பிடியாய் விழித்து நிற்கும் ஒற்றைக்கால் கொக்கும், இரவில் தீப்பொறியாய் பறக்கும் தங்க வண்டுகளும், சாணியைப் பூமியாய் உருட்டி ஆராயும் தோட்டக் கருவண்டும், சைக்கிள் ஓட்டத்தில் கண்ணில் அடிக்கும் எரிவண்டும், நெருப்பெனக் கடிக்கும் சிவப்பெறும்பும், சுகமாகக் கீச்சமூட்டும் கரு எறும்பும் எமது சுயத்தின் அனுபவக் கட்டமைபபுகளே.

ஆதலால் சுயம் என்பது வெறுமனே மனித உறவுகளில் மட்டும் எழுந்ததொன்றல்ல. இயற்கையின் பாதிப்பும் செல்வாக்கும் எமது சுயத்தின் உருவாக்கத்தில் பாரிய பங்கைச் செலுத்தியது. சிறுபராயத்தில் வாழ்ந்த இயற்கைச் சூழ்நிலை என்றும் எமது சுயத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. இவ்வாறு சுயம் இயற்கையோடு நிரந்திர பிணைப்பைக் கொண்டதால், தாம் வாழ்ந்த இயற்கைச் சூழ்நிலையில் இருந்து மனிதர் விரும்பியோ அன்றி விரும்பாமலோ இடம்பெயரும்போது அச்சுயத்தில் ஓர் கலக்கமும், ஏக்கமும் வருவது இயல்பு. அதே வேளை மனிதமேலாதிக்கப் பிடிப்போடு தாம் வாழ்ந்த இயற்கையின்பால் உரிமைகோரியபடி அவ்விடத்தை விட்டுப் பிரியும் போது எமக்கு சுயம் பற்றிய பிளவும் குழப்பமும் சகிக்க முடியாது போய்விடுகின்றன.


இலையற்ற மரத்தை இறப்புடனும், சுடுகாட்டுடனும் இணைத்து அர்த்தம் கொண்ட நாம், மேற்கு நாடுகளில் இலையுதிர்காலத்தை முதல்தடவை



சுயத்தின் ஆக்கமும், வளர்ச்சியும் வெறுமனே மனித உறவுகளின் நெருக்கத்திலும், மனிதமேலாதிக்க உலகப்பார்வையிலும் தங்கியிருப்பதில்லை. இயற்கை பற்றி மனிதமேலாதிக்க உலகப்பார்வையில் இருந்து விடுபட்ட ஒரு சுதந்திரப் பார்வையும் மனித சுயத்திற்கு இருந்தது. அவை நாம் சிறுபிராயத்தில் வளர்ந்த இயற்கைச் சூழலில் (மண்) எம்மை அறியாமலே நாம் இனம் கண்ட அனுபவங்களில் தங்கியிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடியகல்வுப் பயணத்தில் எமக்கு மூன்று பாதைகளைத் தெரிவு செய்ய வாய்ப்பு இருக்கின்றது. அவை சுயத்தில் வித்தியாசமான பாதிப்பபை எமக்கு கொண்டுவரலாம். எமக்கு தெரியாமல் நாம் உள்வாங்கிக் கொண்ட மனித மேலாதிக்க மனப்பாங்கால் நாம் வளர்ந்த மண்ணை பெரிதும் நேசித்து புதிய மண்ணை நிராகரிப்பது முதலாவது பாதை.

கண்டபோது ஒரு நாடே சோகமாய்க் காட்சியளிப்பதைப் போன்ற ஓர் பிரமையைக்குள் உள்ளானேம். ஆறில் உதித்து ஆறில் மறையும் என கற்ற நாம், இங்கு குளிர்காலத்தில் நாலரை மணிக்கும், கோடைகாலத்தில் ஒன்பதரை மணிக்கும் மறையும் சூரியனின் அஸ்தமனம் அதிர்ச்சியையும், குழப்பத்தையும் சுயத்திற்குத் தந்ததில் வியப்பில்லை.

ஊசி மரங்களும், யானையில்லாக்காடும், பனிமணலும் எமக்கு அந்நியமானவையே. பரந்து சடைத்த புளியமரத்திற்கும், மெலிந்து நெடிந்த பைன் மரத்திற்கும் வித்தியாசம் உள்ளது. தேன் குடிக்கும் கறுப்புக் கரடிக்கும், மீன் கடிக்கும் வெள்ளைக்கரடிக்கும் வித்தியாசம் உள்ளது. மந்தி தாவாத மரமும், புடையன் ஊராத காடும் எமக்கு புதியவையே. ஆதலால் பழகிய இயற்கையுடனான தொடர்பறுந்து புதிய இயற்கையில் வாழ்க்கை தொடங்கும் போது வரும் அந்நியமாதல் எமது சுயத்தைக் குலுக்குகின்றது. இரு வித்தியாசமான இயற்கை உலகங்களுக்கிடையே ஆடும் எமது சுயத்திற்கு புதிய இயற்கையுடனான ஓர் இணக்கத்தையும் அமைதியையும் உருவாக்குவது இன்றைய தேவையாகும்.

### இயற்கையுடனான இணக்கம்

குடியகல்வுப் பயணத்தில் எமக்கு மூன்று பாதைகளைத் தெரிவு செய்ய வாய்ப்பு இருக்கின்றது. அவை சுயத்தில் வித்தியாசமான பாதிப்பபை எமக்கு கொண்டுவரலாம். எமக்கு தெரியாமல் நாம் உள்வாங்கிக் கொண்ட மனித மேலாதிக்க மனப்பாங்கால் நாம் வளர்ந்த மண்ணை பெரிதும் நேசித்து புதிய மண்ணை நிராகரிப்பது முதலாவது பாதை. இது எம்மை புதிய மண்ணில் வாழ்ந்து கொண்டு அதை நிராகரிக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும். இது தவிர்க்க முடியாதபடி எம்மில் "பிளவுண்ட மனத்தை" உருவாக்கும். இதில் விரக்தியும், எரிச்சல் உணர்வும், பிடிப்பற்ற வாழ்க்கையும் நாளாந்த நடைமுறையாகின்றது. மீண்டும் வீடு செல்வதற்கான ஆதங்கத்தையும், திட்டங்களையும் பலர் தெரிவிப்பது இதன் வெளிப்பாடேயாகும்.

இரண்டாவது பாதை, மனித மேலாதிக்க மனப்பாங்கோடு இருமண்ணையும் நேசித்து "இருமன உலகில்" வாழலாம். இது முதலாவது பாதையை விட சற்று பரந்தது. எனது நண்பரின் பாட்டி வாழ்வதைப்போல் வளர்ந்த மண் குறித்து ஏக்கமும், சோகமும் இவ்வாழ்க்கையில் இருக்கலாம். அதே வேளை புதிய மண்ணிலும் எமது சுயத்திற்கான ஆதாரங்களை காணலாம். எனவே, முற்றான விரக்தியும், பிடிப்பற்ற வாழ்க்கையும் இந்தத் தெரிவில் இருக்காது. இவ் இருமன உலகவாழ்க்கையில் மனிதர் தாம் வாழும் புதிய உலகுடன் இணைத்து தம் சுயத்தின் பரப்பை விரித்துக்கொள்வர். ஆயினும் இங்குள்ள சவால் என்னவெனின் புதிய உலகும், புதிய சூழ்நிலையும் அவர்களை வெகுவாக மாற்றுவதால் மீண்டும் அவர்கள் பழைய மண்ணிற்கு பழைய எதிர்பாப்புகளோடு போக முற்படின் அதில் சிக்கல் ஏற்படலாம். ஏனெனில் இங்கு இரண்டு பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. முதலாலது, புதிய தேசம் அவர்களின் உலகப்பார்வையில் பல வித புதிய தாக்கங்களையும் ஏற்படுத்துவதன் மூலம் சுயத்தில் மாற்றங்களைக் கொண்டு வரலாம். இரண்டாவது, பழைய மண்ணிலும் புதிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, மாற்றமடைந்து விட்ட பிறந்த மண்ணை பழைய உணர்வுகளுடன் முன்போலவே தரிசிக்க முயலும் எத்தனம்

சிக்கலாகின்றது. இந்நிலை பற்றி ஜோன் பேஜர் விளக்கமாகக் கூறுகின்றார்.


"குடியகல்வுக்கு உள்ளான ஒவ்வொருனும் தான் மீண்டும்(பழைய உலகிற்கு) திரும்ப முடியாது என்பதை அடிமனத்தில் உள்ளாரத் தெரிந்திருக்கின்றான். உடல் ரீதியாக அவன் திரும்பினாலும், உண்மையில் அவன் திரும்புவதில்லை. ஏனெனில் குடியகல்வு அனுபவத்தால் அவன் ஆழமாக மாற்றப்பட்டிருக்கிறான். அவ்வாறே கிராமங்கள் தான் உலகின் மையம் எனும் சரித்திரத்திற்கும் நாம் ஒருபோதும் திரும்ப முடியாது."

ஆக இங்கு மனிதர் இருமன உலகில் இருந்து ஒன்றிலுமே பூரணமாக இல்லாத நிலையில் வாழ இடமுண்டு. இறுதியாக இரு உலகென்ன, பல உலகையும் இணைத்து வாழும் மூன்றாவது பாதைக்கான ஓர் முயற்சி சாத்தியமா என்ற கேள்விக்கு வருவோம். இக் குடியகல்வுப் பயணப்பாதை சற்று வித்தியாசமானது. இதற்கான அடிப்படைத்தேவை இயற்கை மீதான மனித மேலாதிக்கம் அற்ற ஓர் உலகப்பார்வையாகும். இவ் உலகப்பார்வையில் ஊசி மரங்களும், புடையன் ஊராக் காடும் அந்நியமானவை அல்ல. எலும்புக்குள் ஊடுருவும் வின்டர் குளிரும், காண்டாவன வெய்யிலும் யாருக்கும் எதிரியும் அல்ல. இவை யாவும் சுயதின் பல்பரிமாண அனுபவங்களே.

சிவப்பென்றும், மஞ்சளென்றும் அசைந்தாடும் இலையுதிர்கால மரங்களைக் கண்டு களை கொண்டும், அங்கு மரத்திலிருந்து வீழ்ந்து காய்ந்த இலைகளை உதைத்து நடக்கும் போது எழும் சரசரக்கும் ஒலியில் பரவசம் கொண்டும், பனிப்புயலின் பனிமணலில் ஓடி உருண்டு, போர்த்திய உடுப்பினுள் சுடுவேர்வை கண்டும், பாயும் ஆற்றில் துள்ளிய சமன் மீனை வானில் பிடித்துண்ணும் கரடியின் ஆற்றலை வியந்தும் நாம் எம்மை புதிய உலகுடன் இனம் கண்டு இணக்கமும் காணலாம். நன்னீர் ஏரியில், பதிந்த தோணியியை மெல்ல வலிக்கும் போது நெஞ்சில் எழும் அமைதியும், அங்கு குயிலுடன் சவால் விட்டுக் கூவும் கரிய லூான் பறவையின் பழுப்புக் கருநிறமும், சலசலத்த நீரில் சிறகடித்துக் குளிக்கும் காட்டு வாத்தின் களிப்பும், ஓடும் மீனைக் கவ்விப் பறக்கும் பருந்தின் வலுவும் சுயத்தின் வடுவை ரம்மியமாக வலியின்றி அழிப்பதோடு நில்லாமல், சுயத்தை புதிய இயற்கையில் லயிக்கவும் செய்கின்றன. இங்கு புதிய உலகு எதிரி அல்ல. போர்களமும் அல்ல. மாறாக சுயம் இங்கு அகலிக்கப்படுகின்றது.

இவ் அனுபவத்தில் புதிய உலகு, எமது உள சிருஷ்டிப்பு ஆற்றலுக்கு ஓர் ஆக்கபூர்வமான சவாலாக அமைகின்றது. இங்கு இரு இயற்கை உலகுகளின் அனைத்து வனப்புகளும், செல்வங்களும் சாத்தியமான அளவில் சுயத்துடன் சிநேகமாக்கப்பட்டு அதன் ஒரு பகுதியாகின்றது. இப் புதிய இணக்கம் சுயத்தில் குழப்பத்தையல்ல, மாறாக அமைதியைக் கொண்டு வருகின்றது. இங்கு சுயம் ஆரோக்கியமான நீரோடையாகின்றது. புதிய மண்ணில் எமது சுயத்தை வளப்படுத்தும் அனைத்திலும் எமக்கு ஆர்வமிருப்பினும் அவற்றின் மீதான உரிமைகோரும் ஆதிக்கம் இல்லை.


சுயத்தின் இத்தகைய திறந்த மனப்பாங்கு, பிளவுண்ட மனத்தையும், இருமன உலகையும் தவிர்க்க வழிகோலலாம். இம் மூன்றும் பாதை எமது மனத்திற்கு சவால் விடுக்கும் ஒரு பரிசோதனையாகும். ஆனால் சுயம் பற்றிய குழப்பத்திலிருந்து வெளியேறும் ஒரு வாயிலை அது சுட்டலாம்.



"குடியகல்வுக்கு உள்ளான ஒவ்வொருனும் தான் மீண்டும்(பழைய உலகிற்கு) திரும்ப முடியாது என்பதை அடிமனத்தில் உள்ளாரத் தெரிந்திருக்கின்றான். உடல் ரீதியாக அவன் திரும்பினாலும், உண்மையில் அவன் திரும்புவதில்லை. ஏனெனில் குடியகல்வு அனுபவத்தால் அவன் ஆழமாக மாற்றப்பட்டிருக்கிறான். அவ்வாறே கிராமங்கள் தான் உலகின் மையம் எனும் சரித்திரத்திற்கும் நாம் ஒருபோதும் திரும்ப முடியாது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதைப்பாடல் ஒன்று

நமது தேசம் வலிமையானது
நமது தேசம் இளமையானது
அவளது மகோன்னதமான பாடல்கள்
இன்னும் இசைக்கப்படவே இல்லை
ஏமாற்றுதலிலிருந்து
வெறுங் கோஷத்திலிருந்து
கொலைகாரர்களிடமிருந்து
கொலைத் தண்டனைகளிலிருந்து
மக்கட் பதடிகளிலிருந்து
தேசபக்திப் பஜனையிலிருந்து
நிச்சயமின்மையிலிருந்து
சந்தேகத்திலிருந்து
நமது பாடல்
விடுபட்டு மீண்டும் வரும்...
நமது பயணப்பாடல்
விடுபட்டு மீண்டும் வரும்
பழகுதற்கு இனிய
ஒரு ராகத்தைப் போல
எளிமை மிக்கதாக
நமது பள்ளத்தாக்குகளைப் போல
ஆழம்மிக்கதாக
நமது மலைகளைப் போல
உயர்வானதாக,
இதை இயற்றிய
மக்களைப் போல
உறுதிமிக்கதாக
நமது பாடல் மீண்டும் வரும்!

*ஜார்ஜ் தாம்சன்*

*பர்மிங்காம், 1974*
*"மனித சமூக சாரம்", நூலிலிருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடலுக்கு

லண்டன்,
செப்ரெம்பர் 8,1996

அன்புடையீர்,

தேடலின் தரத்தின் உயர்வும் பல்வேறு பார்வைகளை யுடையவர்களது பங்களிப்புக்களும் பற்றி மிக்க மகிழ்ச்சி. சில கட்டுரைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். "தமிழ் இலக்கியம் காட்டும் நட்பும் புலம் பெயர்ந்த தமிழர்களும்" என்ற கட்டுரை புலப்பெயர்வையும் உலகு தழுவிய பார்வையையும் சற்றுக் குழப்பிக்கொண்டுள்ளதாகவே தெரிகிறது. நம் தமிழ்ப் பண்பாடு வள்ளுவரையே ஆதாரமாகக் கொண்டு தான் வளர்ந்ததா? தமிழ் இலக்கியங்கள் யாவுமே அந்த விழுமியங்கள் சார்ந்தனவா? கட்டுரைப் பொருள் வள்ளுவரும் நட்பும் என்றவாறு அமைந்திருந்தால் மேற் குறிப்பட்டவாறான குறைகட்கு இடமிராது என நம்புகிறேன்.

"தமிழ் விடுதலைப் போராட்டமும் கலைப் படைப்புக்களும்" என்ற கட்டுரை என்னுட் சில ஐயங்களை எழுப்பியது. ஆயுதமேந்திய போராட்டத்தின் தேவையும் சாத்தியப்பாடும் வரலாற்றுச் சூழலாலேயே உருவாகின்றன. முக்கியமான தமிழீழ விடுதலை இயக்கங்கள் யாவுமே, விடுதலைப் போராட்டத்தை மக்கள் போராட்டமாகக் கருதத் தவறின. அயலார் தயவிலும் ஆயுதவலிமையிலும் ஆட்பலத்திலும் வைத்த நம்பிக்கையைப் பரந்துபட்ட மக்கள் திரளின் மீது இந்த இயக்கங்கள் வைக்கவில்லை, எனினும் இதனால், விடுதலைக்கான ஆயுதமேந்திய போராட்டம் தனது நியாயத்தை இழந்துவிடாது. ஆயுத பாணியான அரசின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், ஆயுதமேந்துமாறு நிர்பந்திக்கப்படுகிறது. எந்த அரசியல் இயக்கத்திலும் பிரச்சாரத்திற்கான தேவை உண்டு. அது கலை இலக்கியத் துறைகளிலும் செயற்படுகிறது. பாரதியையும் பாரதிதாசனையும் சாதனக் கவிஞர்கள் என்று கொள்ளுமாறே கட்டுரையாளரின் வாதங்கள் தூண்டுகின்றன. இந்திய விடுதலைப் போரும் சுதந்திரத்திற்கு பின் நிகழ்ந்த பல்வேறு உரிமைப் போராட்டங்களும் இத்தகைய கவிதைப் போக்குக்கட்குக் காரணமாகி நின்றன. ஆயினும், காசி ஆனந்தனுடைய கவிதைகளும் அதையொத்த 'உணர்ச்சிக் கவிதைகளும்' தோல்வியடைவது, அவற்றின் வெறுமை போக, முக்கியமாக அவற்றின் கவித்துவமின்மையாலேயே. 1950களில் மஹாகவி 'நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' என்று வெண்பா அடியெடுத்துக் கொடுத்தார் என அறிகிறேன். முருகையன் விடுதலைப் போராளிகளைப் போற்றிப் பலவும் எழுதியிருக்கிறார். ஆயினும் இவர்களது எழுத்தில் மிகுந்த நிதானமும் தெளிவும் இருந்தன. நாங்களும் அவர்களும் என்ற வேறுபாடு, ஒடுக்கு முறையாற் பிளவுண்ட எந்தச் சமூகத்திலும் உண்டு. அது இலக்கியத்தில் வராமற் போகாது. ஆயினும் "யார் நாங்கள் யார் அவர்கள் " என்ற கேள்வியே முக்கியமானது. சாதியம், குறுகிய தேசியவாதம், நிற வாதம், மதவாதம் என்பன காட்டும் வேறுபாடுகள் ஒரு வகை. மனிதரை மனிதர் ஒடுக்குஞ் சூழலில் ஒடுக்குவோர் யார், ஒடுக்கப்பட்டோர் யார் எனப் பகுத்து அறிந்து வேறுபடுத்தி ஒடுக்குமுறையின் முடிவுக்கு வழிகோலுமாறு பகுக்கப்படுவன இன்னொரு வகை. காசி ஆனந்தனின் எழுச்சிக்குக் காரணமாக இருந்தது 70 களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக்கட்சியின் சந்தர்ப்பவாத அரசியல். த.வி.கூ. தலைமையால் நெறிப்படுத்த இயலாத ஒரு போராட்ட உணர்வு ஆயுதப் போராட்டத்துக்கு வழியமைத்தது. வெகுஜன அரசியலில்லாமையே வெகுஜனப் போராட்டத்தின் இடத்தில் ஆயுதமேந்திய குழுக்களின் போராட்டத்துக்கு வழி கோலியது. அந்தப் போக்குக்கு இணக்கமான படைப்புக்கள் இன்று அதனை நிராகரிப்பாரோற் கூட அன்று எழுதப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது.

அகஸ்தியரின் "இயக்கவியலும் கலை இலக்கியமும்" என்ற கட்டுரைக்கு இயக்கவியலுடன் உள்ள சம்பந்தம் அகஸ்தியரது சில கூற்றுக்கட்கும் உண்மைக்கும் உள்ளதை விட அதிகமல்ல. சொற் சிக்கனம் அவருக்குக் கை வராதது. உண்மையை மட்டும் பல இடங்களிற் சிக்கனமாகவே கையாண்டுள்ளார். கீழே அவரது பொன்மொழிகள் சிலவற்றை (அவசியமானவிடத்துக் குறிப்புக்களுடன்) தருகிறேன்.

1. "மதம் மாறித் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த கிறிஸ்தவர்களையே சங்கிலியன் எதிர்த்துப் போராடினான்."

2. "முற்றிலும் உண்மை, நாவலர் பெருமான் தமிழ் மொழி இலக்கணத்தின் பிதா மகன் என்பதில் ஐயமில்லை. (தொல்காப்பியர் என்பார் சிலர், அகஸ்தியர் என்பார் சிலர். அவர் வேறு அகஸ்தியர்.)

3. "ராஜாஜிக்கு ஒரு போதும் மொழியறிவு இருந்ததில்லை."

4. " மற்ற எல்லா நாடுகளையும் விட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் புரட்சிகரமான மார்க்ஷிய தத்துவம் பேணப் பட்டதாலேயே 1917 ம் ஆண்டு ஒக்டோபர் புரட்சி சாத்தியமாயிற்று."
(மாக்ஸிய தத்துவத்தைப் பேணாமலேயே கியூபாவில் புரட்சி நிகழ்ந்தது. அதன் பின்னரே கியூபா ஆட்சி மாக்ஸியத்தின் திசையில் நகர்ந்தது. புரட்சிக்கு ஏதுவான சூழ்நிலை, அதை வழி நடத்தும் சித்தாந்தத்தை விட அடிப்படையான பங்கு வகிக்கிறது என்பது இயங்கியல் பொருள்முதல்வாதம். அதை மறுப்பது கருத்துமுதல்வாதம்.)

5. "1960 கலாசாரப் புரட்சி தோற்றுவிக்கப்பட்டதானது புரட்சிகரத் தத்துவத்திலிருந்து பிறந்து தேசியத் தன்மைக்கு சீனத் தலைமை இட்டுச் சென்ற சீர்திருத்தவாதமாகும். (கலாசாரப் புரட்சி 1965 ல் தொடங்கி 1969ல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதிலே பழமைவாத எதிர்ப்பு மிகையாக இருந்தமை ஒரு பாரிய தவறு. அகஸ்தியர் தொடர்ந்து வாதிப்பது போல பழமைவாதத்தின் புத்துயிர்ப்பல்ல. அதிற் குறுகிய தேசியவாதத்திற்கு ஊக்கமளிக்கப்படவுமில்லை.)

6. "...இதன் பேறாக, செஞ்சீனத்தின் புரட்சிகரத் தன்மை முற்றாகப் பிறழ்ந்து அராஜகங்களும் கோஷ்டிவாதமும் தலை தூக்கின. இவ்வாறே பின் சோவியத்திலும் நிகழ்ந்தது. இந் நிகழ்வுகளே இன்று மார்க்ஸிய சித்தாந்தம் உலகரீதியாக உத்வேகங் கொள்ள வழிவகுத்துமுள்ளன."
(இந்த வேதாளக் கதையின் புதிரை விக்கிமாதித்தனாலும் அவிழ்க்க முடியாது.)

7. "சி. என். அண்ணாத்துரை சீன ஆக்கிரமிப்பின் போது இந்திய தேசத்தின் குரலை வரித்துக் கொண்டார்."
(சீன ஆக்கிரமிப்பு என்ற சொற்றொடர் மூலம் அகஸ்தியர் வரித்துக்கொள்ளும் குரல் யாருடையது? இலங்கையின் எந்த இடதுசாரிக் கட்சியுமே 1962 ல் சீனாவைக் குற்றங் கூறவில்லை. சோவியத் யூனியன் நேரு பரம்பரை ஆட்சியுடன் குலாவத் தொடங்கிய பிறகு, இந்தியா, பாக்கிஸ்தானின் உள் விவகாரங்களிற் குறுக்கிட்டது. பின்பு சிக்கிமையும் ஆக்கிரமித்து இணைத்துக் கொண்டது.)

8. "ஆளையாள் புளுகுவதும் கலையின் சாதனையாகி விட்டது."
(அகஸ்தியர் இது பற்றி அனுபவவாயிலாக நிறைய அறியக் கூடும்)

9. "சோஷலிஸ முகாமை எப்படியாவது தகர்க்க வேண்டுமென்ற ஏகாதிபத்தியத்தின் உளவுஸ்தாபன மூளை, கிஸிங்கர் வாயிலாகக் கிளர்ந்து 'மாவோ சிந்தனையாக உருவெடுத்து நவசீனத்தின் தேசியவாதக் குழுவோடு அரங்கேற்றப்பட்ட விறுத்தம் காலஞ்சென்று வெளிச்சமான சங்கதி."

(மா ஓ சேதுங் சிந்தனை என்பது 1965 காலாசாரப் புரட்சியை ஒட்டி முன்வைக்கப்பட்ட கருதாக்கம். சீன–அமெரிக்க உறவு சீரடையத் தொடங்கியது 1970 களில். இதன் பின்னணியில் 1968ல் செக்கோஸ்லவாக்கியா மீது சோவியத் யூனியன் நிகழ்த்திய அரவணைப்பும் இருந்தது. அதை ஆக்கிரமிப்பு என்று சொன்ன எவரும் ஒரு கருத்து முதல் வாதப் பிற்போக்குவாதி ஆகிவிடலாம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*10. "(தனிச் சிங்களம் சட்டத்தை எதிர்த்துப் பேசிய கொல்வின். ஆர்.டி.சில்வா) தமிழர்களுள்ள (?) 29ம் சரத்தை நீக்கியதிலிருந்து ட்ரொட்ஸ்கிய சந்தர்ப்பவாதம் புலப்படுகிறது."*
*(29ம் ஷரத்து நீக்கப்பட்டபோது பீற்றர் கெனமனும் அதே அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்தாரே அவரும் த்ரொத்ஸ்கி வாதியா?)*

*11." பண்டா–செல்வா ஒப்பந்தத்தின் ஆறு அம்சத் திட்டத்தில் ஒன்று, வட கீழ் மாகாணம் தமிழ்ப் பேசும் மக்களின் பாரம் பரியப் பிரதேசம் என்பதையும் அப்பிரதேசத்தில் ஏலவே குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் தத்தம் பிரதேசங்கட்குக் குடியமர்த்தப்படுவார்கள். (இதிற் பிற் பகுதி வியப்பூட்டும் செய்தி. அம்பாறையில் 1948 முதல் குடியேற்றப் பட்டுவந்த சிங்கள விவசாயிகளைத் திருப்பி அனுப்புவதாக எவ்வாறு பண்டாரநாயக்க உறுதியளித்திருக்க முடியும்?)*

இன்னமும் பலவற்றைக் குறிப்பிடலாம். பொதுவாகவே வரலாற்று நிகழ்வுகளின் வரிசைக் கிரமம் பற்றி அகஸ்தியருக்கு உள்ள குழப்பங்கள் அதிகம். 1953ல் பிரதமராயிருந்த டட்லி சேனநாயக்க 1954ல் ஹார்த்தாலின் பின் பதவி விலகவே கொத்தலாவ பதவி ஏற்றார். அகஸ்தியர் கூறுமாப்போல் 1953ல் அவர் யாழ்ப்பாணம் போகவில்லை. 1955ல் அவர் அங்கு போய் தமிழுக்குச் சமவுரிமை என்று பேசிய பின்னரே களனி மகாநாட்டில் ஜே.ஆர். ஜயவர்த்தன சிங்களம் மட்டுமே என்று பிரேரணையை முன்மொழிந்து நிறைவேற்றினார். அதன்பின், 24 மணி நேரத்தில் அதைச் செய்வதாக பண்டாரநாயக்க அவரை மிஞ்சினார்.

சீனப் புரட்சி சோவியத் தயவில் நிகழ்ந்ததாக எண்ணுகிற அகஸ்தியர், சோவியத் ஆலோசனையை மீறி நடந்ததாலேயே, மா ஓ தலைமை சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றதை அறிய விரும்ப மாட்டார். சீன–சோவியத் தகராற்றைப் பற்றி விரிவாக எழுத இது உரிய இடமல்ல. ஆயினும் க்ருஷ்ச்சொவ் தலைமை 'சமாதான சகஜீவனம்' என்ற பேரில் நடத்திய காரியங்கள் மூன்றாமுலக நாடுகளின் விடுதலைக்குப் பாதகமாக அமைந்தன. அதனாலேயே சர்வதேச ரீதியான ஒரு பிளவு நேர்ந்தது.

சண்முகதாசன் பல தவறுகளைச் செய்துள்ளார். ஆயினும் கெனமன் தலைமையிலான துரோகத்தை எதிர்த்து நின்றது அவற்றுள் ஒன்றல்ல. ஜே.வி.பியின் தலைவரான விஜேவீர மொஸ்கோவில் பயிற்றப்பட்டுப், பின்பு சில காலம் மாக்சிஸ லெனினிஸக் கம்யூனிஸ்டுகளுடன் இருந்து, இனவாதம் பேசியதற்காக வெளியேற்றப் பட்டவர். அவரோடு ஒட்டியவர்கள் பல திசைகளிலுமிருந்து வந்தார்கள். உதாரணமாக மஹிந்த விஜேசேகர சோவியத் சார்பு கட்சியிலிருந்தவர். பல மாக்ஸியவாதிகள் தனிப்பட்ட முறையில் தமது அரசியற் சீரழிவால் ஸ்ரீ...ல. சு. கட்சியில் இணைந்தனர். ஆயினும் முழுக் கட்சியும் ஸ்ரீ.ல.சு.க. தயவில் ஆட்சியில் ஒட்டும் அவலம் மொஸ்கோ சார்புக் கட்சிக்கும் ல.ச.ச. கட்சிக்கும் பிலிப் குணவர்தனவின் பு.ல.ச.ச. கட்சிக்குமே நேர்ந்தது.

1966ல் டட்லி செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து இனவாத ஊர்வலத்தில் பங்கு பற்றிய பெருமை மொஸ்கோ சார்பு கட்சிக்கும் உண்டு. 60களில் சாதியமைப்புக்கு எதிரான போராட்டத்திற் கழுத்தைப் பின்னுக்கு வாங்கிய பெருமையும்அவர்களுடையது. 1970–76 வரை தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பலவற்றின் போதும் அட்டை போல ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான அரசுடன் ஒட்டிக்கிடந்த பெருமையும் அவர்களுடையது. 1975ல் தேசிய ஒற்றுமை மாநாடு நடத்தி, அங்கு பேசிய அமைச்சர் ஒருவர் "சிங்களவர்களிடம் இனவாதம் இல்லை, தமிழர்களிடையே உள்ளது" என்று கூறியதை மறுத்துப் பேசாது மௌனம் சாதித்த பெருமையும் அவர்களைச் சார்ந்த மு.போ.எ.ச. தலைமையுடையது.


சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானிலும் எரித்திரியாவிலும் செய்த இழி செயல்கள் பற்றிப் பலரும் அறிவோம். 1986ல் கொர்பச்சொவ் அதிகாரம் வந்த போது கூட சோவியத் கட்சியை நம்பிக் கிடந்த பல பேருக்கு, 1991 யெல்த்ஸின் அதிர்ச்சி தரும் வரை வெகுகாலமாக அங்கே என்னவோ பிழை என்று விளங்கவில்லை.

சீன–சோவியத் முரண்பாட்டால் ஏற்பட்ட முக்கிய நன்மை ஏதெனில், கம்யூனிஸ்டுகள், சகல நாடுகளும் தேசிய இனங்களும் மட்டுமன்றிச் சகோதரக் கட்சிகள் யாவுமே சமமானவை என்று ஏற்க இயலுமாகியது தான். அகஸ்தியர் கூற முனைவது போலன்றி, முற்போக்கு இலக்கியம் என்பது இலக்கிய முகவரிக்காரர்களை நம்பி உருவாவதும் அல்ல. எந்த 'லைசென்சு' வழங்கும் முற்போக்கு இலக்கிய மேலதிகாரத்தினதும் அனுமதிக்காகக் காத்திருக்கும் விஷயமுமல்ல. சிறு பிள்ளைத் தனமான விமர்சனம் பற்றி அவர் கண்டித்திருக்கிறார். யார் யார் விமர்சனத் தகுதி உடையோரெனவும் அவர் வரையறுக்க முயல்கிறார். பொய்களையும் பம்மாத்துக்களையும் விமர்சிக்க ஒரே ஒரு தகுதிதான் தேவை. அது நேர்மை.

அன்புடன்
சி. சிவசேகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓவியர் மாற்கு

ஓவியத்துறையில் ஈழத் தமிழர்களை அடையாளப்படுத்தியவர். அத்துடன் பல ஓவியர்களையும் உருவாக்கியவர். தமிழ் மக்களின் அவலங்களை தன் தூரிகையால் வெளிக்கொணர்ந்தவர். நவீன ஓவியத்தை எம் மத்தியில் பரிணமிக்கச் செய்தவர். ஓவியத்துறையின் புதிய போக்குகள் குறித்தான தேடல் இவருக்கு நிறையவே உண்டு.

தன் மனதில் எழும் உணர்வுகளைத் தான் விரும்பியவாறு புலப்படுத்த விரும்பினால், இவ் மரபுவழிச் சமூகம் தன்னை ஒரு பைத்தியக்காரன் என்று கூறிவிடுமோ என்று மாற்கு அவர்கள் கூறுகையில், முரண்படும் சமூகச் சூழலில் வாழும் உண்மைக் கலைஞனின் துயரம் தொனிக்கிறது.


நடனமாடும் சிவன், அர்த்தநாரீஸ்வர சிவன், சிலம்பேந்திய கண்ணகி, அன்னத்தை தூதுவிடும் தமயந்தி, போன்ற உருவங்களை ரவிவர்மா பாணியில் பொம்மைகள் போல் பார்த்து பழகிய நாம், மாற்கின் நவீன ஓவியத்துக்கூடாக இவர்களைப்பார்க்கும் போது பிரமித்துவிடுகிறோம். சிவ நடனத்தின் வேகம், கண்ணகியின் கோபாக்கினி என்பன ஒத்திசைவுடனும், வேகத்துடனும் திமிறிக்கொண்டு மாற்கின் ஓவியங்களில் புலப்படுகின்றன.

ஜாமினி ராய், பிக்காசோ போன்ற ஓவிய விற்பன்னர்கள், தமது ஓவியத்தின் வீரியத்தைக் கிராமியக் கலைகளிலிருந்தும் பெற்றனர். இவர்களை மிகவும் மதிக்கும் மாற்கு, தாமும் பல கற்பனைகளையும் உருவங்களையும் கிராமியக் கலைகளிலிருந்தே பெற்றதாகக் கூறுகிறார்.

எல் கிறேக்கோ என்ற ஸ்பானிய ஓவியரை இவர் மிகவும் விரும்புகிறார். தன் காலத்தில் நிலவிய பழைய பைசாந்திய பாணியிலிருந்து, புதுமையான பாணியில் தன் எண்ணங்களைப் புலப்படுத்த விரும்பினார் கிறேக்கோ. ஆரம்பத்தில் இவரது புதிய பாணி ஓவியங்கள் கூடாத பகிடிகள் போலக் கருதப்பட்டன. ஆனால், 1ம் உலக மகாயுத்தத்தின் பின் நவீன ஓவியம் வளர்ச்சிபெறத் தொடங்கிய பின்னரே கிறேக்கோவின் ஓவியங்களும் விளங்கிக்கொள்ளப்பட்டன. மாற்கினை நினைக்கும் போது எனக்கும் இந்த நினைவுதான் வந்தது. மாற்கின் ஓவியங்களும் இனித்தான் விளங்கிக்கொள்ளப்பட்டு இரசிக்கப்படப் போகின்றன.

மாற்கின் படங்களைச் சிறு பத்திரிகைகள், தமது முகப்புகளில் வெளியிடுவதன் மூலம், இவரது பாணி ஓவியத்தை இரசிக்க ஈழத்தமிழ் மக்களைப் பயிற்றலாம். இவ்வகையில் அலை பத்திரிகை மாற்கின் ஓவியங்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

எனக்குத் தெரியும் ஊரிலே
இவர்களது நாய்க்கும்
ஒரு வீடு இருந்தது.



படம்: சுகயீனமுற்று வரைய முடியாத நிலையிலும்.... அண்மையில் திரு. அ. மாற்கு அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து.

உலோகாயத வாழ்வுக்குள் உழன்று கொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள், நம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஆளுமையும், கற்பனையும், அர்ப்பணமும் மிக்க ஓர் ஓவியக் கலைஞனைப் பற்றிச் சிந்திப்பதுடன் அவரை ஊக்குவிக்கவும் வேண்டும்.

—சி.மௌனகுரு

("தேடலில் சதா உழன்றுகொண்டிருக்கும் ஓவியர்" என்ற தலைப்பில் மல்லிகையில் பிரசுரமாகியிருந்த இக் கட்டுரை, 1987ல் வெளியிடப்பட்ட "தேடலும் படைப்புலகமும்" என்ற மாற்குவின் ஓவியங்கள் அடங்கிய நூலிலும் மறு பிரசுரமாகியிருந்தது.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொரன்ரோவில் பரதம் என்ற போர்வையில் நடக்கும் சித்திரவதைகளைப் பார்த்து களைத்திருந்த எனக்கு, தழும்பு நாட்டிய நிகழ்வு புதிய நம்பிக்கையைத் தந்தது. அரங்கேற்றங்களிலும் அதன் வருவாய்களிலுமே கண்ணாய் இருப்பவர்களுக்கு இந்நிகழ்வு ஒரு புதிய பாதையைக் காண்பிக்கும்.

— பா .அ. ஜயகரன்



பரதம் என்றவுடன் எல்லோரையும் போல எம் கண் முன் வருவது வழமையான அ விலிருந்து ஃவரையும் தான். ஆனால் பரதத்தின் மூலத்தை ஆராய்ந்து அதன் அடிப்படை-களை கண்டறிந்து மக்களின் கலையை மீண்டும் மக்களுக்காக கொண்டு வர சில கலைஞர்கள் முயன்று வெற்றி கண்டு வருகிறார்கள். ஆரம்பத்தில் இக் கலைஞர்களின் இப் போக்கு அடிப்படைவாதிகளினால் கண்டிக்கப்பட்டபோதும், புதியனவையும் மாற்றத்தையும் காணாத எந்தவொரு கலையும் காலப்போக்கில் அழிந்து விடும் என்பதை அடிப்படைவாதிகளும் உணரத்தொடங்கியிருக்கிறார்கள். பரதம் புனிதம் நிறைந்தது, மேல் வகுப்பினருடையது, தெய்வீகமானது இவ்வாறு பல புனைவுகள் தரப்பட்டு மக்கள் மத்தியில் இருந்து அன்னியமாக்கப்பட்டு ஒருசாரார் மத்தியில் விடப்பட்டிருந்து. ஆனால் இந்நிலமையை மாற்றுவதில் ஈடுபட்டு வரும் திருமதி சந்திரலேகா போன்றோரினாலும் அவரைப் போன்று சமூகப்பிரக்ஞை கொண்ட வேறு கலைஞர்களினாலும் பரதம் இன்று புதிய பரிணாமத்தை அடைந்துள்ளது. அவ்வகையில் தான் அண்மையில் ரொரொண்டோ றீபாப் விழாவில் இடம்பெற்ற சுதர்சனின் தழும்பு நாட்டிய நிகழ்வையும் நிலைப்படுத்துகிறேன்.



# தழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான பரதத்தின் அசைவுகள் சாதாரண உழைக்கும் மக்களின் நாளாந்த வாழ்வின் நிகழ்வுகளில் இருந்தே பெறப்பட்டதாகும். சாதாரண மக்களின் நடனமாக இருந்த சதிர், பிற்காலத்தில் பரதமாக மாற்றப்பட்டது. சிவனிடமிருந்து பெறப்பட்ட கலையாக பரதத்திற்கு பல கற்பிதங்கள் கொடுக்கப்பட்டிருப்பினும், இன்று அதை கேள்விக்குள்ளாக்கவேண்டிய நிலையிலேயே உள்ளோம். பரதம் என்பது அசைவுகள், பாவங்களை அடிப்படையாக கொண்டது. பலே, யோகாசனம், கராட்டி போன்ற தற்பாதுகாப்புக் கலைகளின் அசைவுகளும் தழும்பு நிகழ்வில் புகுத்தப்பட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. இவ்வகையான முயற்சிகளூடே பரதத்திற்கான புதிய அகராதி பெறப்படும் என்பதோடு பரதம் புதிய நிலையை அடையும் என்பதே என் கருத்து.

இனி நிகழ்வைப்பற்றி வருவோம்,

பரதம் கற்பிக்கும் ஆண் ஆசிரியர் அவரையும் அறியாமல் அவரின் உள்ளக் கிடக்கையில் இருந்த மனத் தழும்பு ஒரு கணம் வெளிக்கிளம்புகிறது. அவரின் நிறம் கறுப்பு அவரது நிறத்தை அவரே வெறுத்து நாளாந்தம் பூச்சுக்குள் பூசி தன்னை வெள்ளையாக்கி கொள்பவர். இந்த நிறபேதம் எம்மிடையே உள்ள ஒன்றுதான். யார் எமக்கு நிறங்களைக் கற்பித்தார்? எது நல்லது ? எது அழகு ? என்பதை யார் சொல்லித் தந்தார் எவ்வாறு இப்பேதங்கள் எம்மனதிலும் சிந்தைக்குள்ளும் தொற்றிக்கொண்டன?.

ஆண் ஆசிரியர்கள் பெண் போல் வேசங்கள் அணிந்து நடனம் ஆடுவதும் பெண்களுக்கே பெண்கள் பற்றிய அபினையங்களை கற்பிப்பதும் அல்லாமல் ஆண்மேலாதிக்க விதைகளை ஊன்றி விடுவதிலும் அவர்கள் முதன்மையானவர்களாக திகழ்ந்துள்ளார்கள். உதாரணமாக, ஆசிரியர் கற்பிக்கும் நடனம் "நான் உந்தன் அடிமை" இந்த இடத்தில் இவ் ஆசிரியரின் பாலியல்தன்மையையும், சமூகத்தையும் கேள்விக்குள்ளாக்கிறார் சுதர்சன்.

இவ் நிகழ்வு, பல வகையான சமூக, அரசியல் , வர்க்கம், பாலியல் பிரச்சனைகளை உள்வாங்கியிருந்தாலும் முதன்மையாக தென்னாசிய மக்கள் மத்தியில் இருக்கும நிறபேதமே கருவாகக் கொள்ளப்படுகிறது. கண்ணாடிக்கு முன்னால் இருந்து பூச்சுப்போடும் ஆசிரியர் தனது விம்பமாக தனது இளமைக் கால கறுப்பு உருவத்தை காண்கிறார். திரும்பவும் தனது அந்த இளமைக்காலத்தை மீட்டவே வெறுக்கிறார். விம்பத்துடன் மோதுகிறார். இது அவரது வெளிவேசத்திற்கும் உள்ளக்கிடைக்கும் இடையிலான முரண்பாடாக காட்டப்படுகிறது. உழைக்கும் வர்க்க சாதாரண குடிமகன் என்ற தனது பழைய நிலையை ஏற்றுக்கொள்ள முடியாது தவிர்க்கிறார். வெள்ளை நடன மாணவர்கள் அவரது நிறத்தை வெறுக்கிறார்கள். பின்பு வேதமந்திரங்கள் முழங்க விம்பத்திற்கு (அவன்) பூசைகள் செய்யப்பட்டு பூணூல் சூடப்பட்டு வெள்ளைப் பூச்சு பூசப்பட்டு ஆசானின் போர்வை போர்க்கப்பட்டு அவனிக்கு ஒரு கண்ணாடியும் கொடுக்கப்பட்டு புதிதாக பிறப்பிக்கப்படுகிறான். கறுப்பு நிறம் தழும்பாகக் காணப்படுதல் ஏன்? ' இந்தியாவில் தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தவொருவன் வாழ்நாள் பூராகவும் அந்த ஒடுக்குமுறைக்குள்ளால் வெளிவர முடியாது தவிக்கிறான். தாழ்த்தப்பட்ட மக்கள் கறுப்பு தோல் நிறத்தைக் கொண்டவர்கள் என்பதான எண்ணங்களையும் கொண்டிருக்கிறார்கள். இதுவே தழும்பாகவும் இருந்து விடுகிறது. நிறத்தை வைத்துக்கொண்டே மற்றயவர்களை ஒடுக்குவதற்கு பாப்பணியம் திணித்த எண்ணக்கரு இது. பலருக்கு இந்தக் கருத்துக்களுக்கெதிராக போர்தொடுக்க முடிவதில்லை. மாறாக, அதற்குள்ளேயே தாமும் வீழ்ந்து விடுகிறார்கள். எம்மவர்களும் வெள்ளப் பெட்டை, வெள்ளப் பொடியன் வேண்டும் அலைகிறார்கள். இதுவும் எமது இயல்பை நாமே ஏற்றுக்கொள்ள முடியாது இருக்கிறோம் என்பதையே சுட்டி நிற்கிறது. இந்நிலமை ஏன்? இதற்கான காரணங்கள் என்ன? என்ற கேள்விகளை இந்நிகழ்வு முன்வைக்கிறது. வாழும் கனடாவில் இன்னொரு வகையான நிறவாதத்தை சந்திக்கும் நாம், எமக்கு உள்ளேயே இருக்கும் நிறவாதத்தையும் ஒரு கணம் சிந்திக்க இன் நிகழ்வு ஏதுவாகியது.

மரபு ரீதியான உடைகளை தவிர்த்து சாதாரண உடைகளை பாத்திரங்கள் பாவித்திருந்தமை ஐக்கியத்தை ஏற்படுத்தியிருந்தது. சில சிக்கலான, பரீட்சாத்தகரமான நடனமுறைகளை புகுத்தியிருந்தது வரவேற்கத்தக்கது. யோகாசனம் மற்றும் கிட்லரின் இராணுவ அணிவகுப்பாணியிலான நடன அசைவும் புதுமையாக இருந்தது. முழு நிகழ்விலும் அநுபவமும், பயிற்சியும், ஆளுமையும் புலப்பட்டது. பரத நிகழ்வில் ஒவ்வொருவரினதும் பாவங்களும் அசைவுகளும் முக்கியமானது. சில வேளைகளில் பாத்திரங்கள் மேடையின் இடது, வலது, மத்திய பகுதியில் காணப்பட்டார்கள். இதனால் பாத்திரங்கள் அனைவரையும் ஓரே வேளையில் பார்க்க முடியாத சிக்கல் ஏற்பட்டது. பார்வையார்களின் பார்வைப்புலத்திற்கு ஏற்ப பாத்திரங்களை கையாள்வதற் கூடாக இச் சிக்கலை தவிர்க்க முடியும்.

இவ்வகையான வித்தியாசமான படைப்புகளில் பங்குகொண்ட ஏனைய கலைஞர்களின் ஒத்துழைப்பு மிகவும் வலியது. இவர்களது சிந்தனைத்தளமும் ஒத்துழைப்புக்கு காரணமாய் அமைந்திருக்கலாம். சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் அனைவரும் இவ் நிகழ்வை பார்க்கவேண்டும். இவ்வாறான நிகழ்வுக்கூடாக நடனம் பற்றிய புதிய பார்வைகளையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

உருவாக்கமும் நெறியாள்கையும்:
சுதர்சன் துரையப்பா

நடனம்:
சுதர்சன் துரையப்பா
டன்சன் ஈக்பேர்ட்
மாலினி கிருபாகரன்
உசாந்தி கிருபாகரன்

பாகேஸ்ரீ வாஸ்
இசை:
சைரஸ் சுந்தர் சிங்
ஒளியமைப்பு:
அருண் ஸ்ரீனிவாசன்
மேடையமைப்பு:
ப்ரைன் ஜேம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன ஒரு

– விதுரன் –

சூரியனை சுருக்கிட்டு
கட்டிவைக்க முயன்றவன்
விடிவெள்ளி தேடினான்
காணவில்லை

பின் எப்படிச் சூரியன்?

ஓ! மனிதர்களே நம்புங்கள்
நான்,
பிரபஞ்சத்தில் ஒளி தேடுபவன்,
சிறந்த சித்தாந்தத்தின் புத்தன்.
இப்பூவுலகம் என் போதிமரம்.

உங்களுக்கு தெரியுமா?
நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும்
சூரியனை விடப் பெரியவை.

போனால் போகட்டும் சூரியன்
உங்களுக்கு,
நட்சத்திரப் பிரகாசம் நிச்சயம்.



"சுருக்குகள் தயார்
 இதோ நட்சத்திரங்கள் "
என்றவன்,
திடீரென ஓர் நாள்
மின்மினியைத் திருடிக் கொண்டு
தலைமறைவானான்.
அத்துடன்....
முருகன் கோவிலில் மின்னிய
குத்துவிளக்கும்
பிள்ளையாருக்கு தீபமேற்றிய
பஞ்சாலாத்தியும்
காணாமல் போயிருந்தது.

தோழர்கள் சொல்லிக் கொண்டார்கள்
அவனுக்கு தலைக்கு மேல்
வெள்ளமாம்.
மக்கள்!!
தமக்கே உரிய நளினத்துடன்,
"இடம் புதுசு கதை பழசு" என்றார்கள்

தமிழர் வகைதுறைவள நிலையம்
வழங்கும்

# மூன்று நாடகங்கள்

## எங்கு தொலைத்தோம்

## கதை

YORK WOOD THEATER
1785 FINCH AVE WEST
(Finch & Jane)
July 13, ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரே பயணம்

தேடகம் வாசிகசாலையில்
பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துவிட்டு
அருகிருந்த கோப்பிச்சாலையில்
நானும் நண்பர்களும் கூடியிருந்தோம்
ஆண்மேலாதிக்கம் பற்றி நண்பி கூற
விமர்சனங்களைப் பகிர்ந்து
அன்றைய மாலை போனது.

"சப்பே" வண்டிக்குள் ஏறி அமர்ந்து
சுமை இறக்கி களைப்பகல கால்களை எறிந்தேன்
"தயவு செய்து" எனக் குரல் கேட்க
திரும்பினேன், மாதொருத்தி
"மன்னித்துக் கொள்க" என்றேன்
"மன்னித்துக் கொண்டேன்" என அருகமர்ந்தாள்.

சிறு நேர மெளனம் அகல
"இலங்கையரா?" என வினவ, ஆமென்று
அவள் கணிப்புக்கு பாராட்டும் தெரிவித்தேன்.

நீண்ட உழைப்பில் களைப்புற்ற முகம்

"அம்மாவென ஏங்கும் குழந்தைகளை
பிலிப்பைன்ஸ் மணிலா சேரியோரம்
தாய்மை நோக விட்டகன்று
இங்கோ யாரோ குழந்தைகளுக்கு ஆயாவானேன்"
"இறுக மூடப்பட்ட வேலைவாய்ப்புக்குள்
நிறத்தவருக்கு ஒதுக்கப்பட்டது இதுவே என்றாள்"

ஏழ்மைக்கு முன்னே எது நிலைக்கும் சொல்க?
இப்போ என் கைப்பைக்குள் குடும்பமென
சோகம் சிரித்தது.
இலங்கையர் உம் துன்பமும் அறிவேன் என்றாள்.

எரிகின்ற என்தேசத்தை விட்டகன்ற வேதனையை
புரியவல்ல தாய்மையென
அவள் சோகம் பகிர்ந்தேன்.
வண்டியும் தரிப்பிடம் சேர்ந்தது
எம் சோகங்கள் ஓர்நாள் மாறும்
அன்றோர் நல்விதி பிறக்குமென
வாழ்த்துக்கள் கூறி அகன்றோம்.

பா. அ . ஜயகரன்.
யூன் 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாற்குவின் ஓவியங்கள்




பூசலை 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முகங்கள்




அலங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குருட்டுப்பாடகன்

கூடல்

நன்றி: "தேடலும் படைப்புலகமும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ரர்நெற்

"தொடர்பூடகத்தின் முன்னேற்றத்தினால் உலகம் கிராமமாகச் சுருங்கிவிட்டது
இன்ரர்நெற்றில் தமிழ்ப்பக்கங்களை வடிவமைப்பதில் நிபுணத்ததுவமான
பிரயோகம் அவசியமாகிறது"

Website designing and all your graphic needs

**digi Graphics & Studios**

10 Sunny Glenway Suite 113
Don Mills, Ontario
(416) 467-4952
Fax: (416) 467-4853
e.mail: karuna@globalserve.on.ca

உங்களுக்குத் தேவையான சகல விதமான
பாண், பணிஸ், மாலு பணிஸ், றோல்ஸ்
யாவற்றையும் சுடச்சுட, தரமாக, மலிவாகப்
பெற்றுக் கொள்ள...........




# குவாலிற்றி பிறட் பேக்கரி
# QUALITY BREAD BAKERY

**1221 MARKHAM ROAD UNITE 13**
**SCARBOROUGH, ON.**
**(MARKHAM/ ELLESMERE)**
**Tel: (416) 431 9829**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL INSURANCE FINANCIAL SERVICES

## சர்வதேச காப்புறுதி நிதிச்சேவை



**A.VELUPPILLAI**
(Insurance Broker)
வேலுப்பிள்ளை
(காப்புறுதி ஆலோசகர்)

கனடாவில் 12 வருட காப்புறுதி அனுபவமுள்ள தமிழரின் ஸ்தாபனம்.

சகல காப்புறுதி மற்றும் நிதிச்சேவைகளுக்கு நாடவேண்டிய ஸ்தாபனம்.

**2190 WARDEN AVE. SUITE 203**
**(Warden & Sheppard)**
**SCABOROUGH, ON.**

**TEL: (416) 499 9596**
**FAX: (416) 499 9382**

**FOR GREAT SAVING AND PERSONAL SATISFACTION**

# HOGAN

## CHEV OLDS LIMITED



**RATNAM GANESH**
ரட்ணம் கணேஷ்

புதிய, பழைய வாகனங்களை உத்தரவாதத்துடன் குறைந்த வட்டி வீதத்தில் பெற்று தொடர்ந்தும் நம்பிக்கையான பராமரிப்பு சேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே தாபனம்.

**5000 SHEPPARD AVE. EAST**
**SCARBOROUGH, ON.**
**TEL: (416) 291 5054**
**FAX: (416) 291 5597**
**PAGER: (416) 374 2881**

Design by: digi Graphics & Studios: (416) 467 4952


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org